Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 03 வெள்ளிக்கிழமை (19.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :266

## 103 பெரும்பான்மை வாக்குகளால் அவசரகாலச்சட்டம் நிறைவேற்றம்:

# ஜே.வி.பி., ஐ.தே.க., ஹெல உறுமய கட்சிகள் ஆதரவு

# தமிழ்க் கூட்டமைப்பு, ம.ம.மு., மனோகணேசன் எதிர்ப்பு

கொழும்பு, ஓக.19

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் முழு ஆதரவுடன் 103 பெரும்பான்மை வாக்குகளால் அவசரகாலச் சட்டம் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டது. தமிழ்க் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுடன் சேர்ந்து ஐ.தே.க.

### நடுநிலை வகித்தது முஸ்லிம் காங்கிரஸ்

நர்டாளுமன்ற உறுப்பினரான மனோகணேசன் எதிர்த்து வாக்களித்தார். மு.காங்கிரஸ் நடுநிலை வகித்தது.

இதனடிப்படையில் அவசரகாலச் சட்டம் நேற்று நள்ளிரவு முதல் மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்கப்பட்டது. நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற விசேட அமர்வில் இதற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நேற்றுமாலை நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது 124 வாக்குகளைப் பெற்று 103 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. எதிராக 21 வாக்குகள் கிடைத்தன.

அரசுடன் சேர்ந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் அவ

(20ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு உடன்பாட்டு விதிகளுக்கு அமையவே நடப்போம்

# அவசரகால நிலை இடையூறாக வந்தால்

# யுத்தநிறுத்தச் சூழல் கேள்விக்குறியாகும்!

## தமிழ்ச்செல்வன் கடும் எச்சரிக்கை கண்காணிப்புக் குழுத் தலைவரிடம்



கிளிநொச்சி, ஓகஸ்ட் 19

புலிகளின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் அனைத்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையின்படியே இடம்பெறும். அவசரகாலச் சட்டம் இந்தச் செயற்பாடுகளுக்கு இடையூறாக இருக்குமானால் போர்நிறுத்தச் சூழல் கேள்விக்குறியாகிவிடும்.

- இவ்வாறு எச்சரித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரை நேற்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேசியபோது இந்த விடயத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். அரசு பெரும்பான்மை வாக்குகளால் அவசரகாலச் சட்டத்தை ஒரு மாதத்துக்கு நீடித்துள்ள நிலையில் தமிழ்ச்செல்வனின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டுக்கும் தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பகல் 11.15இற்கு ஆரம்பமாகி 12.45இற்கு முடிவடைந்தது. இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வனுடன் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் உடனிருந்தனர்.(02 ஆம் பக்கம் பார்க்க)

### பெண் படையணிகள் ஒன்று கூடல்

கிளிநொச்சி,ஓக.19

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது அணிப் போராளிகள் தங்கள் பயிற்சியை ஆரம்பித்து நேற்றுடன் இருபது ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இதனை முன்னிட்டு மகளிர் படைப் பிரிவுகளின் மா

(20ஆம் பக்கம் பார்க்க)

### புங்குடுதீவு இளைஞன் கொழும்பில் சுட்டுக்கொலை!

கொழும்பு,ஓக.19

கொழும்பில் தமிழ் இளைஞன் ஒருவர் கடத்தப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

ஆமர் வீதியில் உள்ள வீட்டிலிருந்து புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் கடத்திச் செல்லப்பட்ட இந்த இளைஞனின் சடலம்

(20ஆம் பக்கம் பார்க்க)



தமிழ்ச்செல்வன் - கண்காணிப்புக்குழுத் தலைவர் சந்திப்பின்போது.....

## யாழ்ப்பாணத்திலும் நிலைமை மிக மோசமடைந்து செல்கிறது

### கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,ஓக.19

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட விவகாரம் தொடர்பாக நேற்று கிளிநொச்சியில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடனான சந்திப்பின்போது விளக்கமளிக்கப்பட்டது.

புலிகளைச் சீண்டி மீண்டும் ஒரு யுத்த சூழலுக்குள் தள்ளிவிடுகின்ற போக்கின் வெளிப்பாடே இந்தச் சம்பவம் என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கண்காணிப்

(20ஆம் பக்கம் பார்க்க)

## இனியும் பொறுமைகாக்க முடியாது! ரட்ணசிறி நேற்று காட்டமான உரை

கொழும்பு, ஓக.19

அமைச்சர் கதிர்காமர் கொலை மிகவும் மோசமானதும், குரூரமானதுமாகும். அரசால் இனியும் பொறுமைகாக்க முடியாது. புலிகள் செய்யும் கொலைகளைப் பார்த்துக்கொண்டிருக்கவும்முடியாது. ஜனநாயக ரீதியில் செயற்படும் எந்த நபருக்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதை எம்மால் அனுமதிக்கமுடியாது. அதற்கு முடிவு காணப்படவேண்டும்.

- இவ்வாறு காட்டமான உரையொன்றை நாடாளுமன்றில் நேற்று நிகழ்த்தினார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க.

(20ஆம் பக்கம் பார்க்க)

## வெளிவிவகார அமைச்சர் பதவி; நிராகரித்தார் ஜயந்த தனபால!

கொழும்பு, ஓக.19

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவையடுத்து வெற்றிடமாகிய வெளிநாட்டு அமைச்சுப் பொறுப்பை ஏற்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த வேண்டுகோளை அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால நிராகரித்துவிட்டார். ஜனாதிபதி மாளிகையின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் இத்தகவலை நேற்று 'உதயன்'இற்குத் தெரிவித்தன.

மூத்த இராஜதந்திரியும், வெளிநாட்டு அரசியல் தொடர்புகளை அதிகளவில் கொண்டிருப்பவருமான ஜயந்த தனபாலவே இந்தப்

(20ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பதிவகப் பணி பிரதேச செயலகங்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

மாவட்ட பதிவகச் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நடவடிக்கை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

யாழ். மேலதிக மாவட்டப் பதிவாளரும், காணிப் பதிவாளருமான பொ.ஈஸ்வரதாசன் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது:-

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்), வலி.கிழக்கு (கோப்பாய்), வலி.மேற்கு (சங்கானை), வலி.வடக்கு (தெல்லிப்பழை) ஆகிய பிரதேச செயலகங்களுக்கு மாவட்டப் பதிவகச் செயற்பாடுகளை எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் திங்கட்கிழமை முதல் விவாக, பிறப்பு, இறப்புப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல், காலங்கடந்த பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்தல், பதிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளல் ஆகிய பணிகள் தொடர்பில் பொதுமக்கள் அந்தந்தப் பிரதேச செயலகங்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

மானிப்பாய், பண்டத்தரிப்பு பதிவாளர் பிரிவு தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும் -

சங்கானை - வட்டுக்கோட்டை பதிவாளர் பிரிவு தொடர்பில் சங்கானைப் பிரதேச செயலகத்திலும் -

மல்லாகம், தெல்லிப்பழை,மயிலிட்டி ஆகிய பதிவாளர் பிரிவுகள் தொடர்பில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்திலும் -

கோப்பாய், புத்தூர், வலி.கிழக்கு (விவாக), அச்சுவேலி பதிவாளர் பிரிவுகள் தொடர்பில் கோப்பாய் பிரதேச செயலகத்தி லும்-

பொதுமக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம் -

என்று மேலதிக மாவட்டப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஒ-13-202)

## தேசிய கலைவிழா போட்டிகள் நாளைமறுதினம்

யாழ்ப்பாணம் ஓக.19

கலாசார தேசிய மரபுரிமைகள் அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் தேசிய கலை இலக்கியவிழாவையெட்டிய இலக்கியப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மாவட்ட ரீதியான போட்டியில் யாழ். மாவட்டத்தின் நடனம் மற்றும் கிராமியப் பாடல் போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்தார்.

மேற்படி போட்டிகள் நாளை தொடக்கம் 2 நாள்கள் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் ,நாளைமறுதினம் மட்டுமே இப்போட்டிகள் நடைபெறும் என்று மேலதிக அரச அதிபர் தெரிவித்தார்.(ஒ-202-203)

## 'லைசென்ஸ்' பெற விண்ணப்பித்தோருக்கு

யாழ்ப்பாணம்,ஓக.19

சாரதி அனுமதிப்பத்திரம் பெற விண்ணப்பித்தவர்களுக்கான செயன்முறைப்பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ். அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

புதிய சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான செயன்முறைப்பரீட்சைக்குத் திகதிகளைப் பெற்றவர்களுக்குத் தவிர்க்கமுடியாத காரணத்தால் செயன்முறைப்பரீட்சையை நடத்த முடியாதுள்ளதாகவும் -

செயன்முறைப் பரீட்சைக்குரிய திகதிகள் பின்னர் அறியத்தரப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, எழுத்துப்பரீட்சைக்குத் திகதிபெற்ற பரீட்சார்த்திகளுக்கான எழுத்துப் பரீட்சை குறிப்பிட்ட திகதிகளில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## சேக்கிழார் விழாப்போட்டி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.19

வலிகாமம் வலயப் பாடசாலை மாணவருக்கு சேக்கிழார் மாநாட்டையொட்டி நடத்தப்படவிருந்த சைவசமய அறிவு, பேச்சு, மற்றும் பண்ணிசைப் போட்டிகள் யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் -

விண்ணப்பித்தவர்கள் தவறாது கலந்துகொள்ளும்படியும் - வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் நாளை சனிக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஒ)

## சச்சிதானந்தர் திருவடி பூசை

சுவாமி சச்சிதானந்த மகராஜின் குருவழிபாடு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது. அவர் சமாதியடைந்த நாளான இன்று காலை 7 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் திருவடி பூசையும் அபிஷேகமும் இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு வைமன் வீதியில் உள்ள 'அருளகம்' இல்லத்தில் பிரார்த்தனையும் நடைபெறும்.

(ஐ)

# அவசரகால நிலை இடையூறாக......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பை அடுத்து தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய செவ்வி வருமாறு:-

✱ ***கேள்வி:-*** இன்றைய சந்திப்பில் என்ன விடயங்கள் ஆராயப்பட்டன?

• ***பதில்:-*** எமது தாயகப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கின்ற குழப்பகரமான சூழ்நிலை பற்றியும், யுத்தநிறுத்த நடைமுறைகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ள நிலை பற்றியும் எமது தீவிர கவலையை, கரிசனையை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தெரிவித்துள்ளோம்.

கடந்த சில நாள்களில் எமது தாயகப் பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளோம்.

முக்கியமாக யுத்தநிறுத்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவே இன்று கருத்துகள் பரிமாறப்பட்டன.

✱ ***கேள்வி:-*** யுத்தநிறுத்த உடன்படிக்கையில் திருத்தங்களைச் செய்வது அல்லது புதிய விடயங்களைச் சேர்ப்பது குறித்து ஆராயப்பட்டதா?

• ***பதில்:-*** ஏற்கனவே இந்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதுதான் முக்கியமானது. அவற்றை உதாசீனப்படுத்திவிட்டு, புறந்தள்ளிவிட்டு புதிய நடைமுறைகளைப் பற்றிச் சிந்திக்க முடியாதவர்களாக நாம் இருக்கின்றோம். கடந்த மூன்றரை வருடங்களாக யுத்தநிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையில்தான் போர் அற்ற சூழலும், சமாதான முயற்சிகளும் தொடரப்பட்டன. இந்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த இரு தரப்புக்குமே கடப்பாடு இருக்கின்றது. இதனை இரு தரப்புகளும் ஏற்றுக்கொண்டே உடன்பாட்டுக்கு வந்தோம்.

யுத்தநிறுத்த உடன்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடும் பொறுப்பும் கண்காணிப்புக் குழுவுக்கும் இருக்கின்றது. இந்த அடிப்படையில் ஏற்கனவே கடும் முயற்சியின் பயனாகக் கொண்டுவரப்பட்ட இந்த உடன்பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவது குறித்தே இன்று விரிவாகப் பேசினோம்.

✱ ***கேள்வி:-*** உடன்படிக்கையை மீளாய்வு செய்வது தொடர்பாக அரசின் யோசனை ஏதும் சமர்ப்பிக்கப்பட்டதா?

• ***பதில்:-*** தகவல்களே தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. நோர்வே அனுசரணைக் குழுவின் தலைவரும், பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடர் ஹெல்கிஸன் தகவல்களைத் தலைமைப்பீடத்துக்கு அனுப்பியுள்ளார்.

முக்கியமாக, புரிந்துணர்வு உடன்படிக்கையை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக இருதரப்பினரும் நேரில் கலந்துரையாடவேண்டும் என்ற ஓர் ஆலோசனை எமது தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதைத் தலைமைப்பீடம் தீவிரமாகப் பரிசீலிக்கிறது. ஓரிரு நாள்களில் இதற்கான பதிலை நோர்வேக்கு அனுப்பவிருக்கின்றோம்.

✱ ***கேள்வி:-*** யுத்தநிறுத்த உடன்படிக்கையை இருதரப்பும் செம்மையாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படும் சூழலில், அவசரகாலச்சட்ட விதிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. தேடுதல்கள், கைதுகள் இடம்பெறுகின்றன. இதுகுறித்து இன்று ஆராய்ந்தீர்களா?

• ***பதில்:-*** யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி இரு தரப்புகளுக்கும் சில கடப்பாடுகள் இருக்கின்றன. அதாவது, தமிழர் தாயகப் பிரதேசத்தில் அரசியல் பணியில் ஈடுபடும் போராளிகளாக இருந்தாலும், விடுப்பில் செல்லும் போராளிகளாக இருந்தாலும் அவர்களுக்குச் சில சிறப்புரிமைகள் இருக்கின்றன. அந்தச் சிறப்புரிமைகளின் அடிப்படையில்தான் அவர்கள் போக்குவரத்தைச் செய்கிறார்கள். அரசியல் பணிகளையும் செய்கிறார்கள். அதற்கு இடையூறு விளைவிக்கப்படுமானால், அத்தகைய நடவடிக்கைகளை அவர்கள் தொடர்வார்களேயானால், இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து பேணுவது ஒரு சிக்கலான விடயம். அத்தகைய செயற்பாடுகள் ஒரு பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்.

அவசரகால நிலை என்பது ஸ்ரீலங்காவின் பகுதிகளுக்குள் நடைமுறைப்படுத்தப்படுபவை. கொழும்பில் நடந்த சம்பவங்கள் தொடர்பான குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும், நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கும் அது அவர்களுக்கு உதவும். ஆனால், எங்கள் நடவடிக்கைகள், எங்களது செயற்பாடுகள் அனைத்தும் யுத்தநிறுத்த உடன்படிக்கையின் விதிமுறைக்கு ஏற்பவே இடம்பெறும். இந்தச் செயற்பாடுகளுக்கு அவசரகால நிலை குறுக்கீடாக அமையுமாக இருந்தால் - இடையூறாக வந்தால் - யுத்தநிறுத்தச் சூழல் கேள்விக்குறியாகிவிடும்.இந்த ஆபத்து நிலையை கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்துள்ளோம்.

இப்போது எமது போராளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது முழுக்க முழுக்க அத்துமீறலும், யுத்தநிறுத்தமீறலுமாகும் என்பதைக் கண்காணிப்புக் குழுவுக்கு விளக்கியுள்ளோம்.

✱ ***கேள்வி:-*** அவசரகால வர்த்தமானியைக் காட்டிப் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அவ்வாறிருக்கையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் போர்நிறுத்தம் ஆரோக்கியமாக முன்னெடுக்கப்படுமா?

• ***பதில்:-*** இந்த ஆபத்தான நிலை பற்றியும் கண்காணிப்புக் குழுவுக்குச் சுட்டிக்காட்டினோம். எமது மக்கள் மீது இப்படியான கெடுபிடிகளை, நெருக்கடிகளை ஏற்படுத்துவதும், எமது போராளிகள் விடயத்தில் அத்துமீறுவதும் போர்நிறுத்த உடன்பாட்டை மிக மோசமாகப் பாதிக்கும் என விரிவாக விளக்கியிருக்கின்றோம்.

✱ ***கேள்வி:-*** அவசரகாலச்சட்டம் தொடருமாயின், போர் நிறுத்தத்தைக் கடைபிடித்து வரும் புலிகளின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும்?

• ***பதில்:-*** வடக்கு - கிழக்கு இணைந்த தாயகப் பிரதேசத்தில்தான் யுத்தநிறுத்த உடன்பாட்டுச் செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் யுத்தநிறுத்த உடன்பாட்டு விதிமுறைகளுக்கு மாறாக அரச தரப்பினர் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவார்களேயானால், மக்களோ, விடுதலைப் புலிகளோ அதைத் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டிருக்கமாட்டார்கள்.

இந்த நிலைமையின் பாரதூரத்தை கண்காணிப்புக் குழுவுக்கு எடுத்து விளக்கியுள்ளோம். அவர்கள் பூரண கரிசனையுடன் அதனை உள்வாங்கிக்கொண்டார்கள். தீர்வு காண்பதற்கான முயற்சியை எடுப்பதாகக் கூறியுள்ளனர். எதிர்வரும் நாள்களில் நிலைமையை அவதானித்து எமது முடிவுகளைத் தெரிவிப்போம்.

✱ ***கேள்வி:-*** போராளிகளின் போக்குவரத்துக் குறித்த விடயத்தில் என்ன முடிவுகள் எட்டப்பட்டன?

• ***பதில்:-*** இதுபற்றிக் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வந்துள்ளோம். முழுமையாக அல்ல. முதற்கட்டமாகப் போராளிகளின் போக்குவரத்துக்கு பூரண பாதுகாப்பு அளிக்க சில ஒழுங்குமுறைகளை அரச தரப்பு தந்துள்ளது. அம்பாறைக்கும் மட்டக்களப்புக்குமான போக்குவரத்தில்தான் சில நெருக்கடிகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. அவற்றுக்கும் 2 அல்லது 3 வாரங்களுக்குள் தீர்வு காணப்படும் என்று தெரிவித்துள்ளனர். அவற்றை அடுத்த கட்டமாக நடைமுறைப்படுத்த தொடர்ந்து முயற்சிகளை எடுக்கவிருக்கின்றோம்.

### மக்களின் போக்குவரத்து இடையூறு!

✱ ***கேள்வி:-*** பொதுமக்களின் போக்குவரத்தை படையினர் தடுப்பது குறித்து...?

• ***பதில்:-*** மக்களின் இயல்பு வாழ்க்கையை சீரழிப்பதற்காகவே இந்த நடவடிக்கைகளைப் படையினர் மேற்கொள்கின்றனர். இத்தகைய அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான எமது அதிருப்தியையும், கடுமையான கண்டனத்தையும் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்துள்ளோம்.

✱ ***கேள்வி:-*** அவசரகால விதிகளின் கீழ் கைதுகள், தேடுதல்கள் தொடர்ந்தால் நீங்கள் என்ன நடவடிக்கைகளை எடுக்கப்போகிறீர்கள்?

• ***பதில்:-*** அவசரகாலச் சட்டம் குறித்தோ, அவர்களது நடவடிக்கைகள் குறித்தோ கருத்துக் கூறவிரும்பவில்லை. யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையில்தான் எங்கள் நடவடிக்கைகள் அமையும். இரு தரப்பும் உடன்பட்டுக்கொண்ட அடிப்படையில்- அந்த உறுதிப்பாட்டின் அடிப்படையில் - எமது போராளிகளின் நடமாட்டங்கள், செயற்பாடுகள் அனைத்தும் அமையும். உடன்படிக்கை கேள்விக்குறியாக்கப்படும்போது- சிக்கலுக்குள்ளாக்கப்படும்போது - அனுசரணையாளர்கள் ஊடாகவும், கண்காணிப்புக் குழு ஊடாகவும் எமது நிலைப்பாட்டை எதிர்வரும் காலங்களில் தெரியப்படுத்தவிருக்கின்றோம். அச்சமயங்களில் தீர்க்கமான முடிவை எடுக்கும் சூழ்நிலை கூட எமக்கு உருவாகலாம். இனிவரும் நாள்களைப் பொறுத்துத்தான் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

✱ ***கேள்வி:-*** உடன்படிக்கையை மீளாய்வு செய்து திருத்தவேண்டும் என்று ஜனாதிபதி கூறிவருகின்றார். நோர்வே தந்துள்ள யோசனைகள் அந்த அடிப்படையில் அமைந்ததா?

• ***பதில்:-*** யோசனைகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்காக இரு தரப்பின் உயர்மட்டக் குழுக்களும் சந்தித்துப் பேசவேண்டும் என்பதுதான் நோர்வேத் தரப்பின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

தமது கருத்துகளை - ஆலோசனைகளை எமது தலைவருக்கு அவர்கள் தெரிவித்துள்ளனர். அதுபற்றி தலைமைப்பீடம் மிக விரைவில் ஆலோசித்து தீர்க்கமான முடிவுகளைத் தெரியப்படுத்தும் என நம்புகிறேன்.

✱ ***கேள்வி:-*** வவுனியாவில் ஆயுதக் குழுக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

• ***பதில்:-*** மாவட்ட மட்டத்திலான பொறுப்பாளர்கள் ஊடாக களநிலைமைகள் பற்றி கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளோம். எமது தாயகப் பிரதேசத்தில் உள்ள சகல மாவட்டங்களின் பிரச்சினைகளை இன்று விளக்கியுள்ளோம்.

இராணுவ நெருக்குவாரங்கள், நெருக்கடிகள், மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பும் செயற்பாடுகள் என்பன ஒட்டுமொத்தமாகத் தீவிரமடைந்திருக்கின்றன. இவை உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும் என்று தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளோம்.

### கதிர்காமர் கொலை!

✱ ***கேள்வி:-*** கதிர்காமரின் கொலை பற்றிப் பேசப்பட்டதா?

• ***பதில்:-*** கதிர்காமரின் கொலை குறித்தும் கண்காணிப்பாளர்கள் எடுத்துக் கூறினர். பல தடவைகள் எமது நிலைப்பாடு குறித்து ஊடகங்கள் ஊடாக நாம் எடுத்து விளக்கியுள்ளோம். அதை திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டிருக்கத் தேவையில்லை. எமது நிலைப்பாடு ஒன்றேதான்.

✱ ***கேள்வி:-*** கதிர்காமருக்கு அஞ்சலி செலுத்தும் நோக்கில் கிளிநொச்சியில் ஐ.நா. சார்பு நிறுவனங்கள் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிட்டனர் ஆனால், பேரணி நடத்தியவர்கள் கொடியை இறக்கியதாகச் செய்திகள் வெளிவந்தன. ஐ.நா. அமைப்புகள் இது பற்றி அதிருப்தி தெரிவித்தனவா?

• ***பதில்:-*** ஐ.நா. அதிகாரிகள் முறையிட்டதாக ஒரு தகவல் வந்துள்ளது. எமக்கும் அது அதிர்ச்சியான விடயம் தான்.

ஸ்ரீலங்காவால் பிரகடனம் செய்யப்பட்ட இந்தத் துக்கதினத்தை வடக்கு - கிழக்குப் பிரதேச மக்கள் நிராகரித்திருந்தார்கள். இந்தப் பகுதிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்படவில்லை. மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த நிலையில் ஐ.நா. அலுவலகத்தில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டதாகச் செய்தி வருவதை எங்களால் நம்பமுடியாமல் இருக்கின்றது. எங்களுக்கு அந்தத் தகவல் தெரியாது.

ஐ.நா. நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள், கண்காணிப்புக்குழு எனப் பல்வேறுபட்டவர்கள் இங்கு செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அடிக்கடி எங்களோடு கருத்துகளைப் பரிமாறுகிறார்கள்; தங்கள் செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுகிறார்கள்.

ஆனால், இந்த நடவடிக்கை தொடர்பாக எமக்கு எந்தவிதத் தகவலும் தெரியாது. சம்பவம் நடந்த பின்னர் இத்தகவலை எமது அலுவலருக்கு அறிவித்துள்ளார்கள். போராளிகள் அந்தப் பகுதிக்குச் சென்றபோது நிகழ்வு முடிந்து மக்கள் கலைந்துசென்றுவிட்டனர்.

இதுபற்றி ஐ.நா. அதிகாரிகளுடன் பேசவிருக்கின்றோம்.

தமிழீழ மக்கள் மனங்களில் கதிர்காமரின் கடந்தகால நடவடிக்கைகள் இன்றும் வடுவாகப் பதிந்திருக்கின்றன. மக்கள் குடியிருப்புகள், ஆலயங்கள், பொது இடங்கள் என்பவற்றில் இலங்கைப் படையினரால் நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் கொல்லப்பட்டபோது சர்வதேச அளவில் புலிகள் கொல்லப்பட்டனர்; பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் எனப் பிரசாரம் செய்த ஒருவர்தான் கதிர்காமர். அதனால் அவருடைய இழப்பு குறித்து மக்கள் அனுதாபம் காட்டவில்லை. (ஐ-3)

# ஈக்குவடோர் பயணிகள் கப்பல் கொலம்பியக் கடலில் மூழ்கியது

லண்டன், ஓக.19

ஈக்குவடோரில் இருந்து சட்டவிரோதமாக பயணிகளை ஏற்றிச்சென்ற கப்பலொன்று கொலம்பிய கடற்கரைப்பகுதியில் மூழ்கியதில் சுமார் 117 பேர் உயிரிழந்தனர் என உள்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈக்குவடோரின் மென்டா துறைமுகத்தில் இருந்து அமெரிக்கா நோக்கிச் சட்டவிரோதமாக குடியேறுவதற்கு மக்களை ஏற்றிச்சென்ற கப்பலே நேற்றுமுன்தினம் இவ்வாறு நீரில் மூழ்கியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீரில் மூழ்கியவர்களுள் 7 ஆண்களும் 2 பெண்களுமாக 9 பேரை மீன்பிடிப் படகில் சென்றவர்கள் உயிருடன் மீட்டுள்ளனர். ஏனையோர் அனைவரும் உயிரிழந்துள்ளனர். ஈக்குவடோரைச் சேர்ந்த மக்கள் ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோதமாகக் குடியேறுவதற்காக அடிக்கடி இவ்வாறு பசுபிக் சமுத்திரத்தினூடாக கப்பல்களிலும் படகுகளிலும் பயணிக்கின்றனர். அவர்கள் விபத்துக்குள்ளாகி உயிரிழப்பதும் சாதாரண விடயமாகிவருகிறது.

சுமார் 115 முதல் 119 பேர் இந்தக் கப்பலில் பயணித்திருக்கலாம். உயிருடன் 9பேர் மீட்கப்பட்டுள்ளனர். இதுவரை 15 சடலங்களே மீட்கப்பட்டுள்ளன என கொலம்பிய கடற்படை அதிகாரி கூறினார்.

கொலம்பிய கடற்படையினரே மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் படகுகளையும் விமானங்களையும் பயன்படுத்தி மீட்புப்பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

கொலம்பியாவிலிருந்து சுமார் 160 கிலோ மீற்றர் தொலைவில் இந்த பயணிகள் கப்பல் மூழ்கியுள்ளது.

ஈக்குவடோரில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு சட்டவிரோதமாக சென்று குடியேறுவோரின் எண்ணிக்கை கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்த வண்ணம் உள்ளது.

அநேகமான எக்குவடோர் பிரஜைகள் படகுமூலம் மத்திய அமெரிக்காவுக்கு செல்கின்றனர். அதன் பின்னர் கால் நடையாக அமெரிக்காவை சென்றடைகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## உலக அரங்கில்

## 3,200 ஆண்டு பழைமைவாய்ந்த சாவி ஆஸ்திரியாவில் கண்டுபிடிப்பு

கிராஸ், ஓக.19

ஆஸ்திரியாவின் தெற்குப் பகுதியில் 3,200 ஆண்டு காலம் பழமை வாய்ந்த சாவி ஒன்றை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

41 செ.மீ. நீளமுடை இந்தச் சாவி வெண்கலத்தால் செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரியாவில் இதற்கு முன்பாக, இதே வடிவத்தில் 2 சாவிகள் கண்டுபிடிக்கப்பட்டன எனத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் மரியா விண்ட்ஹேகர் தெரிவித்தார்.

சாவியைச் சுற்றி பல்வேறு விதமான பொருள்கள் இருந்தன. இதற்கு ஏதேனும் காரணம் இருக்கவேண்டும் எனவும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (க-8)

# எகிப்தில் செப். 7 ஜனாதிபதித் தேர்தல்

கெய்ரோ, ஓக. 19

எகிப்தில் மக்கள் வாக்களிப்பின் அடிப்படையில் முதற்தடவையாக நடைபெறும் தேர்தலின் பிரசார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகின. 3 வார காலங்களுக்கு இந்தப் பிரசார நடவடிக்கைகள் நீடிக்கும். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி தேர்தல் நடைபெறுமென்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

1981ஆம் ஆண்டு முதல் எகிப்தில் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் ஹொஸ்னி முபாரக் 5ஆவது தடவையாக 6வருட பதவிக் காலத்திற்காக இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

77 வயதான அவர், நேற்றுமுன்தினம் கெய்ரோப் பூங்காவில் உரை நிகழ்த்தியதன் மூலம் தனது பிரசாரத்தை ஆரம்பித்துவைத்தார்.

ஊழியர்களுக்கு அதிகளவான சம்பளம் வழங்கப்படும் - என்றும்,

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும், எகிப்திய மக்களின் சுகாதாரம் சர்வதேசதரத்தைக் கொண்டிருக்கும் என்றும்,


24 வருடகாலமாக எகிப்தில் நிலவி வரும் அவசரகாலச் சட்டம் நீக்கப்படும் என்றும் அவர் அவரது பிரசார உரையில் உறுதியளித்துள்ளார்.

நாட்டில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால் நிர்வாகத்தில் அனுபவமும் நடவடிக்கைகளில் தொடர்ச்சியும் இடம்பெறுவது அவசியம் என்று குறிப்பிட்ட அவர், மக்களின் வாக்குகளை மட்டுமன்றி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அவர்களது ஆதரவையும் கோருகின்றார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்களின் அடிப்படையில் எகிப்தின் மிகப்பெரிய எதிர்க்கட்சியான முஸ்லிம் சகோதரத்துவக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால் செப்ரெம்பர் 7 நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஹொஸ்னி முபாரக் வெற்றிபெறுவார் என அவதானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை எதிர்த்து லிபரல் கட்சியைச் சேர்ந்த சட்டத்தரணி ஐமன்நூர், பக்ரூ கட்சியைச் சேர்ந்த நோமன் கோமஸ் உட்பட 10பேர் போட்டியிடுகின்றனர். (க-8)

# பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற் தனது சொந்த நாட்டில்



பாப்பரசர் 16ஆம் பெனடிக்ற் தனது முதலாவது வெளிநாட்டு பயணத்தை நேற்று மேற்கொண்டு தனது சொந்தநாடான ஜேர்மனிக்குச் சென்றுள்ளார்.

ஜேர்மனியின் கோலான் நகரில் நடைபெறவிருக்கும் உலக இளைஞர் தின விழாவில் அவர் இன்று முக்கிய உரை நிகழ்த்துவார் என வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


200 நாடுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கான இளைஞர்கள் தற்போது ஜெர்மனிக்கு சென்றுள்ளனர்.

இவருக்கு முன்பு பதவி வகித்த மறைந்த பாப்பரசர் 2ஆவது அருளப்பர் சின்னப்பர் ஒன்றுக்கும் மேற்பட்ட உலக இளைஞர் தின விழாவில் பங்கு பற்றி இளைஞர்களை ஆசிர்வதித்தது மட்டுமல்லாது முற்போக்கு அம்சங்கள் கொண்ட தனது உரையின் மூலம் இளைஞர்களை பெரிதும் கவர்த்திருந்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் பாப்பரசராக தெரிவுசெய்யப்பட்ட புதிய பாப்பரசர் 16ஆவது பெனடிக்ற் இதுவரை மாபெரும் கூட்டங்களில் பங்கேற்கவில்லை.

எனவே கோலோவில் நடைபெறும் உலக இளைஞர் தின விழாவில் பாப்பரசரது பங்களிப்பை கத்தோலிக்க சமூகமும், உலக நாடுகளும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

கருத்தடைக் கருவிகளின் உபயோகம், விவாகத்துக்கு முன்னரான பாலுறவு, எயிட்ஸ் நோய்த் தடுப்பு உட்பட பலதரப்பட்ட விடயங்கள் குறித்து பாப்பரசர் தனது கருத்துகளை தெரிவிப்பார் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. (க-8)




இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு நடைபெற்ற நிகழ்வொன்றில் அவர் உரையாற்றுவதையும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் அவருக்கு நினைவுப் பரிசொன்றை வழங்குவதையும் படங்களில் காணலாம். (8)

# வெள்ளை மாளிகையின் முன் ஆர்ப்பாட்டம்

அமெரிக்கத் தலைநகர் வாஷிங்ரனில் வெள்ளை மாளிகைக்கு முன்னாள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது. ஈராக்கில் அமெரிக்கா நடத்தும் யுத்தத்தை நிறுத்துமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை சந்திக்க சந்தர்ப்பம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் பிரஜையான சின்டிசீகன் என்ற தாய்க்கு ஆதரவளிக்கும் வகையில் மக்கள் கைகளில் மெழுகுவர்த்திகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

சின்டி சீகனின் மகன் கடந்த ஆண்டு ஈராக்கில் கொலை செய்யப்பட்டார். ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கத் துருப்பினரை உடனடியாக வாபஸ் பெறுமாறு அவர் வலியுறுத்தி வருகின்றார்.

ஈராக்கில் கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் யுத்தத்தினால் இதுவரை 1800 அமெரிக்க துருப்பினர் உயிரிழந்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

ஈராக்கில் உயிரிழந்த அமெரிக்கப் படையினர் தொடர்பாக ஜனாதிபதி புஷ் கவலை தெரிவித்தபோதிலும் அவர்களை இப்போதைக்கு திருப்பியழைக்கப் போவதில்லை எனக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# இரவு வேளைகளில் உடனடிச் சிகிச்சையில்லாது அமெரிக்க இதயநோயாளிகள் கடும் அவதி

இரவு நேரங்களில் உடனடி சிகிச்சை இல்லாமல் அமெரிக்க இதய நோயாளிகள் கடும் அவதிப்படுகின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாரடைப்பு ஏற்பட்டவுடன் சிகிச்சைக்காக இரவு நேரத்திலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் செல்லும்போது நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருக்கவேண்டியுள்ளது என ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது. மொத்தம் 60 ஆயிரம் பேரிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

சாதாரண நேரத்தில், நோயாளிகள் 25 நிமிடங்கள் காத்திருக்கவேண்டிய நிலையுள்ளது. பிறநேரங்களில் சராசரியாக 1 மணி 50 நிமிடங்கள் காத்திருக்க வேண்டியுள்ளது.

ஆனால், விதிமுறைகளின்படி, தீவிர சிகிச்சைப் பிரிவுக் குள் ஒரு நோயாளி நுழைந்து 10 நிமிடங்களுக்குள் சிகிச்சை அளிக்கப்பட வேண்டும்.

பலூன் ஆஞ்சிலோ பிளாஸ்டி செய்துகொள்ள, 10 நோயாளிகளில் நால்வர் இரண்டு மணி நேரங்களுக்கும் அதிகமாகக் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது. தாமதம் காரணமாக நோயாளிகள் இறந்துவிடும் வாய்ப்பு 7 சதவீதம் அதிகரிப் பதும் ஆய்வில் தெரியவந்துள்ளது.






# பங்களாதேஷின் 61 மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் தொடர்குண்டுவெடிப்பு

## 200 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

பங்களாதேஷின் ஒட்டுமொத்த பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் அரைமணி நேரத்துக்குள் 400இற்கும் மேற்பட்ட வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறின. நாடே பீதியில் உறைந்துவிட்டது. மொத்தம் உள்ள 64 மாவட்டங்களில் 61 மாவட்டங்களில் உள்ள அரச அலுவலகங்கள், நீதிமன்றங்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது. இவற்றில் ஒருவர் பலியானார். 200இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இதுதொடர்பாக 45 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறியதில் மக்கள் பீதி அடைந்தனர். மக்கள் அவசர அவசரமாகப் பள்ளிகளுக்கு ஓடி, தங்கள் குழந்தைகளை பத்திரமாக வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.

பிரதமர் கலீதா ஜியா நேற்று காலை 9 மணிக்கு சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அடுத்த சில மணி நேரங்களில் அரச அலுவலகங்கள், நீதிமன்றங்கள், பிரஸ்கிளப் போன்ற முக்கிய இடங்களில் குண்டுகள் வெடித்துச் சிதறின. மக்கள் மரண பயத்தில் ஓடினர். டாக்காவிலும் குண்டுகள் வெடித்துச் சிதறின. 'ஜியா சர்வதேச விமான நிலையத்தின்' முன்புறமும் வெடிகுண்டு வெடித்தது. எந்த வகையான குண்டுகள் தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்டன என்பது உடனடியாக தெரியவில்லை. ஆனால், நாட்டு வெடிகுண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வெடிகுண்டுப் பயங்கரங்களில் ஒருவர் பலியானார். 200இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

# பின்லேடன் ஈராக் செல்லத்திட்டம் அமெ. வாரப் பத்திரிகை செய்தி

அல்கெய்டாத் தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் இவ்வளவு காலமாக ஆப்கானிஸ்தானில் தான் மறைந்திருந்த இடத்தை விட்டு வெளியேறி விட்டார் என்றும், அவர் ஈராக்கை நோக்கிச் செல்ல தற்போது திட்டமிட்டுள்ளார் என்றும் அமெரிக்க வாரப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அல்கெய்டா அமைப்பினர் இணையத் தளம் ஊடாகப் பேசிக்கொள்ளும் ரகசிய வார்த்தைகளை இடைமறித்துக்கேட்டு ஆராய்ந்ததில் இந்த விடயம் தெரியவந்துள்ளது என அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

அடுத்த மாத பிற்பகுதியில் அவர் ஈராக் சென்றடையலாம். அவர் ஈரான், பலூசிஸ்தான் வழியாக அல்லது பாகிஸ்தானின் கடற்பகுதி வழியாக ஈராக் செல்லாம் என்று தெரிகிறது.

2001ஆம் ஆண்டு செப். 11இல் நியூயோர்க்கில் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டு பெரும் சேதம் ஏற்பட்டது. இதே அளவுக்கு கடுமையான தாக்குதலை ஈராக்கில் நடத்த அங்குள்ள அல் -குவைதா ஆதரவு அமைப்புகள் திட்டமிட்டுள்ளன. அவர்களை ஊக்கப்படுத்துவதற்காகவே பின்லேடன் செல்கிறார் எனக் கூறப்படுகிறது. (க-8)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக்கு மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் எஞ்சிய பெயர்களும் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரில் ஒரு தொகுதியினரின் பெயர்களும் இன்றைய உதயனின் 9,12ஆம் பக்கங்களில் வெளியாகியுள்ளன. மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் எஞ்சிய பெயர்களும் நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் ஒரு பகுதியினரின் பெயர்களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

மா/ 3301 திரு. ஜோசேப்பு அன்ரன்பிரான்சீஸ்
மா/ 3467 திரு. வல்லிபுரம் பெரியதம்பி
மா/ 3586 திரு. இராசதுரை ஜெகதீஸ்வரன்
மா/ 3855 திரு. ஐயாத்துரை தங்கராசா
மா/ 3861 திரு. சரவணமுத்து தம்பிமுத்து தெய்வேந்திரம்
மா/ 3932 திருமதி. மகேஸ்வரி சண்முகம்
மா/ 3972 திரு. ஆறுமுகம் திருநாவுக்கரசு
மா/ 4251 திரு. சிவக்கொழுந்து விவேகானந்தன்
மா/ 4273 திரு. நவரத்தினம் குலசிங்கம்(குணபாலன்)
மா/ 4336 திரு. சண்முகம் பரமேஸ்வரன்
மா/ 4471 திரு. இராசதுரை விக்னேஸ்வரன்
மா/ 4532 திரு. இராயப்பு டேவிட்
மா/ 4533 திருமதி செல்வராணி யேசுதாஸன்
மா/ 4574 திரு. ஆசைப்பா செல்வராசா
மா/ 4592 திருமதி குணமலர் பூபாலபிள்ளை
மா/ 4657 திரு. செருசலை சிங்கராசா
மா/ 4790 திரு. சிவம்பிள்ளை அலோசியஸ்இரத்தினம்
மா/ 4860 திரு. இராகவன் கருணாகரன்
மா/ 4938 திருமதி மேரியூபிரேசியா செங்கோல்ராஜா
மா/ 4959 திருமதி அன்னலட்சுமி தணிகாசலம்
மா/ 5489 திருமதி இராசகுமாரி அன்ரன்விஜயேந்திரன்
மா/ 5529 திரு. சிதம்பரி பீசிவம்
மா/ 5673 திருமதி பத்மாவதி அம்பலவாணர்
மா/ 5699 திருமதி மீனலோஜனி சங்கரப்பிள்ளை
மா/ 5745 திருமதி நாகேஸ்வரி தியாகராஜா
மா/ 5851 திரு. தாமோதரம்பிள்ளை லோகேந்திரன்
மா/ 5879 திரு. கந்தசாமி சிறிதரன்
மா/ 5923 திருமதி சிவபாபக்கியம் சுப்பையா
மா/ 5963 திரு. குருசாமி ராசகுமார்
மா/ 5975 திரு. செல்லையா பாஸ்கரன்
மா/ 6148 திருமதி கமலா பன்னீர்செல்வம்
மா/ 6175 திரு. யோசவ் மகேந்திரன்
மா/ 6257 திரு. சின்னசுவாமிசர்மா பாலசண்முகன்
மா/ 6283 திருமதி யோகேஸ்வரி தர்மராஜா
மா/ 6301 திருமதி மகேஸ்வரி தம்பையா
மா/ 6345 திரு. பாலசிங்கம் பாஸ்கரன்
மா/ 6393 திருமதி சத்தியபாமா நவரத்தினம்
மா/ 6435 திரு. சிவசுப்பிரமணியம் சந்திரமௌலீசன்
மா/ 6847 திரு. நடராசா சுப்பையா
மா/ 6880 திரு. அருளப்பு தேவதாஸ்
மா/ 6991 திரு. வைரமுத்து செல்வம்
மா/ 7005 திருமதி சத்தியலட்சுமி ஜெயசிங்கம்

### நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

ந/ 3 திரு. நமசிவாயம் தேவராஜன்
ந/ 22 திரு. செல்லப்பா முத்துக்குமாரசுவாமி
ந/ 28 திரு. சரவணமுத்து நல்லநாதன்
ந/ 29 திரு. கந்தையா நடராசா
ந/ 39 திரு. செல்லத்துரை இராமநாதன்
ந/ 46 திரு. சிதம்பரப்பிள்ளை சீவரத்தினம்
ந/ 57 திரு. சின்னையா கதிரிப்பிள்ளை சிவலிங்கம்
ந/ 66 திரு. சண்முகம் தியாகராசா
ந/ 75 திரு. வேலாயுதபிள்ளை குருநாதன்
ந/ 77 திரு. அருணாசலம் மகாதேவா
ந/ 88 திருமதி. மனோன்மணி கோவிந்தசாமி
ந/ 99 திரு. ஆறுமுகம் கந்தையா
ந/ 105 திருமதி. கற்பகம் கதிரேசு
ந/ 114 திரு. பொன்னம்பலம் நடராசா
ந/ 115 திரு. வல்லிபுரம் நித்தியசிங்கம்
ந/ 127 திரு. கணபதிப்பிள்ளை பரராசசிங்கம்
ந/ 135 திரு. சுப்பையா இரத்தினம்
ந/ 143 திரு. தம்பு செல்லத்துரை
ந/ 148 திரு. அருளம்பலம் சிவானந்தன்
ந/ 152 திரு. பொன்னுத்துரை சிவசுப்பிரமணியம்
ந/ 154 திரு. பொன்னம்பலம் தேவராஜா
ந/ 164 திரு. பொன்னையா யோகலிங்கம்
ந/ 180 திரு. கதிரன் மார்க்கண்டு
ந/ 198 திருமதி. செல்லம்மா முருகேசு
ந/ 209 திரு. வீரகத்தி தம்பிஜயா
ந/ 220 திரு. சுப்பிரமணியம் துரைராசா
ந/ 222 திரு. கணபதி வயிரமுத்து
ந/ 227 திரு. மருதலிங்கம் அரிதாசன்
ந/ 228 திரு. முத்துத்தம்பி அமிர்தலிங்கம்
ந/ 245 திருமதி. மகேஸ்வரி இரத்தினம்
ந/ 248 திரு. நாகலிங்கம் நடராசா
ந/ 271 திரு. மாரிமுத்து இராசையா
ந/ 278 திரு. சுப்பு சுந்தரம்
ந/ 288 திரு. நடராசா சிவநாதன்
ந/ 296 திரு. தம்பு தர்மலிங்கம்
ந/ 299 திரு. சுப்பையா தம்பித்துரை
ந/ 305 திரு. செல்லையா வாலைஆனந்தன்
ந/ 308 திரு. சின்னப்பு ஆசைப்பிள்ளை
ந/ 309 திருமதி. அன்னலட்சுமி சபாபதி
ந/ 326 திரு. முருகேசு குணரத்தினம்
ந/ 340 திரு. சின்னத்தம்பி முத்துக்குமாரு
ந/ 341 திரு. செல்லையா முத்துத்தம்பி
ந/ 345 திரு. பொன்னுத்துரை மகாதேவன்
ந/ 354 திரு. செல்லையா நவநாதன்
ந/ 355 திருமதி. நேசம்மா சீவரத்தினம்
ந/ 356 திரு. சின்னத்துரை நவரத்தினம்
ந/ 367 திரு. கந்தப்பு பூதத்தம்பி
ந/ 376 திரு. விஸ்வலிங்கம் பூதப்பிள்ளை
ந/ 380 திரு. சிவஞானம் பத்மநாதன்
ந/ 382 திரு. கந்தையா பத்மநாதன்
ந/ 389 திரு. சின்னத்தம்பி இரத்தினசிங்கம்
ந/ 394 திரு. வேலுப்பிள்ளை இராசரத்தினம்
ந/ 399 திரு. அம்பலம் இரத்தினம்
ந/ 402 திரு. சின்னத்தம்பி சின்னத்துரை
ந/ 424 திரு. கந்தையா சோமசேகரம்
ந/ 439 திரு. செல்லையா துரைராசா
ந/ 463 திருமதி. யோகம்மா நல்லையா
ந/ 477 திரு. வல்லிபுரம் கனகசபை
ந/ 479 திரு. நாகலிங்கம் கதிர்காமநாதன்
ந/ 487 திருமதி. புவனேஸ்வரி மகாலிங்கம்
ந/ 491 திரு. இளையதம்பி நல்லையா
ந/ 493 திரு. சுப்பையா நமசிவாயம்
ந/ 503 திரு. வைத்திலிங்கம் பேரம்பலம்
ந/ 510 திரு. சின்னத்துரை இரத்தினசபாபதி
ந/ 514 திரு. இராசையா இரத்தினசிங்கம்
ந/ 518 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
ந/ 533 திரு. முத்தையா சந்திரசேகரம்
ந/ 535 திருமதி. சத்தியகுலரத்தினம் கந்தவனம்
ந/ 537 திரு. முத்துக்கிருஷ்ணர் தாமோதரம்பிள்ளை தர்மலிங்கம்
ந/ 540 திரு. மாணிக்கம் திருநாவுக்கரசு
ந/ 542 திரு. கந்தையா துரைச்சாமி
ந/ 544 திரு. சுப்பையா தர்மலிங்கம்
ந/ 553 திரு. இரத்தினம் அட்சலிங்கம்
ந/ 555 திரு. வெற்றிவேலு ஐயாத்துரை
ந/ 560 திரு. செல்லையா இராஜவரோதயம்
ந/ 565 திரு. வேலுப்பிள்ளை ஜெகசோதி
ந/ 570 திருமதி. அன்னலக்சுமி குருசாமி
ந/ 574 திருமதி. நாகேஸ்வரி செல்லத்துரை
ந/ 582 திரு. அப்பாத்துரை கருணாகரர்
ந/ 591 திரு. விஸ்வநாதர் முருகேசு
ந/ 599 திரு. கந்தையா பஞ்சாட்சரம்
ந/ 600 திரு. சின்னராசா பத்மநாதன்
ந/ 601 திருமதி. இராசலட்சுமி பாலசுப்பிரமணியஐயர்
ந/ 610 திருமதி. சிவக்கொழுந்து வீரசிங்கம்
ந/ 613 திரு. கிருஷ்ணஐயர் சுப்பிரமணிஐயர்
ந/ 617 திருமதி. மகேஸ்வரி சுப்பிரமணியம்
ந/ 623 திரு. பொன்னம்பலம் முத்தையா சோமசுந்தரம்
ந/ 627 திரு. செல்லையா மகேசன்
ந/ 631 திரு. கனகசபாபதி தனபாலசிங்கம்
ந/ 632 திரு. சின்னத்தம்பி தியாகராஜா
ந/ 633 திரு. செல்லத்துரை தேவதாசன்
ந/ 637 திரு. செல்லையா தருமகிருஷ்ணர்
ந/ 645 திருமதி. தர்மநாயகி துரைசிங்கம்
ந/ 652 திரு. செல்லையா அருளானந்தம்
ந/ 656 திரு. விசுவலிங்கம் அரியநாயகம்
ந/ 657 திரு. சொக்கலிங்கம் அரசப்பன்
ந/ 662 திரு. சுப்பிரமணியம் பாலசிங்கம்
ந/ 664 திரு. அருணாசலம் பாலசிங்கம்
ந/ 667 திருமதி. புவனேஸ்வரி இரத்தினகோபால்
ந/ 671 திரு. மாரிமுத்து ஐயாத்துரை
ந/ 689 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
ந/ 694 திருமதி. இராசலட்சுமி கந்தசாமி
ந/ 695 திரு. சின்னத்தம்பி குமாரசாமி
ந/ 704 திரு. கணபதிப்பிள்ளை கனகசபாபதி
ந/ 706 திரு. நடராசா கந்தசாமி
ந/ 718 திருமதி. மனோன்மணி சிங்கநாயகம்
ந/ 731 திருமதி. சிவயோகம் மகாலிங்கம்
ந/ 736 திரு. பொன்னம்பலம் மகேந்திரன்
ந/ 752 திரு. அருணாசலம் நமசிவாயம்
ந/ 754 திரு. கனகசபை நவரத்தினம்
ந/ 757 திரு. கந்தையா நல்லதம்பி
ந/ 760 திரு. ஐயம்பிள்ளை நல்லதம்பி
ந/ 764 திரு. பொன்னம்பலம் நடராசா
ந/ 771 திரு. தம்பு பாக்கியநாதன்
ந/ 773 திரு. சின்னப்பா பரஞ்சோதி
ந/ 789 திரு. நல்லதம்பி இரத்தினம்
ந/ 800 திரு. அம்பலவாணர் இராசரட்ணம்
ந/ 801 திரு. கந்தையா இராசகிருஷ்ணர்
ந/ 803 திருமதி. செல்லம்மா சுப்பிரமணியம்
ந/ 811 திரு. தம்பிப்பிள்ளை சிவகுரு
ந/ 820 திரு. பாண்டியன் செல்வரத்தினம்
ந/ 830 திரு. ஐயம்பிள்ளை செல்லையா
ந/ 836 திருமதி. சோமகலாவல்லி சண்முகலிங்கம்
ந/ 837 திரு. கந்தையா சிவபாதம்
ந/ 852 திரு. சரவணமுத்து சாந்தலிங்கம்
ந/ 860 திருமதி. விமலாதேவி செல்வராஜா
ந/ 867 திரு. வேலுப்பிள்ளை தனபாலரத்தினம்
ந/ 874 திரு. சுப்பிரமணியம் திருநாவுக்கரசு
ந/ 877 திரு. வயித்திலிங்கம் துரைரத்தினம்
ந/ 878 திரு. சோமசுந்தரம் திருநாவுக்கரசு
ந/ 881 திரு. சுப்பிரமணியம் தமபிஜயா
ந/ 899 திருமதி. வள்ளிம்மா முருகன்ஆச்சாரி
ந/ 914 திரு. வைத்திலிங்கம் ஆறுமுகம்
ந/ 924 திரு. பொன்னையா பாலகிருஷ்ணன்
ந/ 958 திரு. இளையதம்பி கனகலிங்கம்
ந/ 973 திரு. தியாகராசா மாணிக்கவாசகர்
ந/ 994 திரு. நாகலிங்கம் நடராசா
ந/ 995 திரு. பொன்னுத்துரை சோதிநாதன்
ந/ 1019 திரு. வினாசித்தம்பி இராமநாதன்
ந/ 1023 திரு. இராசு இரவீந்திரராயு
ந/ 1026 திரு. இராசையா இராஜேந்திரன்
ந/ 1029 திருமதி. கல்யாணி ராதாகிருஷ்ணன்
ந/ 1035 திருமதி. வில்லிஅன்னமலர் செல்லையா
ந/ 1041 திரு. இராமநாதன் சுந்தரலிங்கம்
ந/ 1043 திரு. அம்பிகைபாகன் சண்முகநாதன்
ந/ 1046 திரு. சிவானந்தகுருக்கள் சர்வேஸ்வரசர்மா
ந/ 1059 திரு. கதிரவேலு சரவணமுத்து
ந/ 1060 திரு. நாகன் செல்லத்துரை
ந/ 1065 திரு. முருகேசு செல்வரத்தினம்
ந/ 1080 திரு. செல்லையா செட்டியார் சிவஞானசுந்தரம்
ந/ 1081 திரு. சீனிவாசகம் சண்முகம்
ந/ 1087 திருமதி. சிவபாக்கியம் சிவசுப்பிரமணியம்
ந/ 1088 திரு. நடராசா சோதிலிங்கம்
ந/ 1091 திரு. வயித்திலிங்கம் திருநாவுக்கரசு
ந/ 1093 திரு. பெரியதம்பி துரைரத்தினம்
ந/ 1101 திரு. முத்துத்தம்பி தவரட்ணம்
ந/ 1108 திரு. வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு
ந/ 1114 திருமதி. கனகம்மா வடிவேலு
ந/ 1120 திரு. காரைமஷேசர்மா யோகீசுவரன்
ந/ 1122 திரு. வேலுப்பிள்ளை யோகநாதன்
ந/ 1126 திரு. கதிரேசு ஆறுமுகம்
ந/ 1135 திரு. தம்பையா பாலசிங்கம்
ந/ 1149 திரு. சுப்பையா குமரையா
ந/ 1154 திரு. சின்னத்தம்பி குமாரசாமி
ந/ 1155 திரு. வேலுப்பிள்ளை கந்தசாமி
ந/ 1156 திரு. வ.கோகிலாம்பிள்ளை குமாரசாமி
ந/ 1161 திரு. கணபதிப்பிள்ளை கணேசமூர்த்தி
ந/ 1164 திரு. தம்பு குமாரசாமி
ந/ 1167 திருமதி. சகுந்தலா கிருபநேசசிங்கம்
ந/ 1175 திருமதி. அரியரத்தினம் ,கணேசமூர்த்தி
ந/ 1185 திரு. கனகரட்ணம் மதியாபரணம்
ந/ 1191 திருமதி. மங்கையர்க்கரசி குமாரசாமி
ந/ 1195 திரு. சிவகுரு நவரத்தினம்
ந/ 1199 திருமதி. நல்லம்மா ஆறுமுகம்
ந/ 1205 திரு. செல்லர் நடராசா
ந/ 1209 செல்வி. புஸ்பா செல்வநாயகம்
ந/ 1211 திருமதி. பாக்கியம் பொன்னம்பலம்
ந/ 1217 திரு. சுப்பிரமணியம் பத்மநாதன்
ந/ 1222 திருமதி. நாகேஸ்வரி பரமநாதன்
ந/ 1224 திருமதி. புஸ்பவதியார் பூபாலசிங்கம்
ந/ 1228 திரு. நா.பசுபதிப்பிள்ளை இராசையா
ந/ 1235 திரு. நாகலிங்கம் இராசரத்தினம்
ந/ 1241 திரு. செல்லையா சண்முகலிங்கம்
ந/ 1247 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்
ந/ 1248 திரு. சண்முகம் சிவஞானம்
ந/ 1265 திரு. சரவணமுத்து செல்லத்துரை
ந/ 1269 திருமதி. ஜெயதேவி சிவகுருநாதன்
ந/ 1275 திரு. சிவக்கொழுந்து செல்வரத்தினம்
ந/ 1285 திரு. பொன்னுத்துரை தியாகராசா
ந/ 1287 திருமதி. திரவியம் இராமலிங்கம்
ந/ 1288 திரு. ஐயம்பிள்ளை தியாகராஜா
ந/ 1294 திருமதி. அன்னபூரணம் திருநாவுக்கரசு
ந/ 1305 திரு. கந்தையா ஆறுமுகம்
ந/ 1311 திரு. சவரிமுத்து குணரத்தினம்
ந/ 1312 திரு. அருணாசலம் கோபாலரத்தினம்
ந/ 1314 திரு. சிவக்கொழுந்து இராசரத்தினம்
ந/ 1316 திரு. குட்டிப்பிள்ளை கிட்ணர்
ந/ 1324 திரு. முத்தையா மார்க்கண்டு
ந/ 1327 திரு. தம்பையா நாகலிங்கம்
ந/ 1328 திரு. பொன்னையா நாகலிங்கம்
ந/ 1330 திரு. வல்லிபுரம்பூமு குணரட்ணம்
ந/ 1335 திரு. கணபதிப்பிள்ளை இராசலிங்கம்
ந/ 1341 திரு. கதிரவேலு இரத்தினம்
ந/ 1350 திரு. நாகலிங்கம் செல்லத்துரை
ந/ 1363 திரு. செல்லையா வரதராசா
ந/ 1367 திரு. செல்லத்துரை அரியநாயகம்
ந/ 1371 திருமதி. சண்முகநாயகி கந்தையா
ந/ 1384 திரு. சுந்தரம்பிள்ளை பத்மநாதன்
ந/ 1392 திரு. முத்தையா சுப்பிரமணியம்
ந/ 1403 திரு. சிங்காரம் வல்லிபுரம்
ந/ 1412 திருமதி. சுனித்தா துரைரத்தினம்
ந/ 1414 திரு. செல்லையா நாகலிங்கம் நடராசா
ந/ 1427 திரு. தியாகராசா கதிரவேலு
ந/ 1438 திரு. சரவணமுத்து பத்மநாதன்
ந/ 1442 திரு. இரத்தினேஸ்வரஐயர் பாலேந்திரசர்மா
ந/ 1447 திரு. சின்னத்தம்பி செல்லையா
ந/ 1459 திரு. பொன்னையா நடராசா
ந/ 1463 திரு. ஆறுமுகம் பொன்னுத்துரை
ந/ 1466 திரு. சபாரத்தினம் இராசலிங்கம்
ந/ 1469 திரு. கணபதிப்பிள்ளை இராசையா
ந/ 1473 திரு. சபாபதிக்குருக்கள் சதாசிவஐயர்
ந/ 1509 திரு. செல்லர் குகதாசன்
ந/ 1517 திரு. கணவதிப்பிள்ளை நடராசா
ந/ 1519 திரு. சேதுராசா நேசரத்தினம்
ந/ 1523 திரு. வேலுப்பிள்ளை பெருமாள்
ந/ 1525 திருமதி. புஸ்பராணி பரமநாதன்
ந/ 1551 திரு. தம்பிப்பிள்ளை விசுவலிங்கம்
ந/ 1559 திரு. தம்பு அம்பிகைராஜா
ந/ 1560 வைத்திய. கலாநிதி. சின்னத்துரை அருணாசலம்
ந/ 1572 திரு. கந்தையா ஐயாத்துரை
ந/ 1579 திரு. கந்தப்பர் சண்முகம் குமாரசாமி. இராசகுமார்
ந/ 1587 திருமதி. இரத்தினம் கணபதிப்பிள்ளை
ந/ 1611 திரு. வேலுப்பிள்ளை முத்துத்தம்பி
ந/ 1622 திரு. சரவணமுத்து நற்குணம்
ந/ 1626 திரு. சோமசுந்தரம் நித்தியசிவம்
ந/ 1627 திரு. சின்னத்துரை நாகராசா
ந/ 1630 திரு. பொன்னையா நல்லையா
ந/ 1633 திருமதி. பூமணி நடராசா
ந/ 1636 திரு. நாகமுத்து பொன்னம்பலம்
ந/ 1641 திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்
ந/ 1650 திரு. முதலித்தம்பி இராசதுரை
ந/ 1652 திரு. சின்னையா இரத்தினம்
ந/ 1659 திரு. நல்லையா இரத்தினம்
ந/ 1671 திரு. ஆறுமுகம் சோமசுந்தரம்
ந/ 1674 திரு. கந்தையா சொர்னலிங்கம்
ந/ 1680 திரு. சதாசிவம் சின்னையா
ந/ 1683 திரு. சதாசிவம் சிவகுருநாதன்
ந/ 1688 திருமதி. செல்லம்மா இராசதுரை
ந/ 1689 திரு. கந்தையா சபாரத்தினம்
ந/ 1693 திரு. செல்லப்பா சொக்கலிங்கம்.
ந/ 1722 திரு. கந்தையா திருநாவுக்கரசு
ந/ 1741 திருமதி. பத்மாவதி வைத்திலிங்கம்
ந/ 1763 திரு. சிதம்பரப்பிள்ளை குணரெட்னம்
ந/ 1764 திருமதி. இலட்சுமி இரத்தினம்
ந/ 1771 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
ந/ 1773 திரு. நாகலிங்கம் கனகரத்தினம்
ந/ 1779 திருமதி. இரத்தினேஸ்வரி யோகேஸ்வரன்
ந/ 1788 திரு. கந்தையா நேசராசா
ந/ 1790 திரு. இராசரத்தினம் நவரத்தினம்

(வளரும்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அதிரடிச் செயற்பாடுகளை நிறுத்துக!

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்கு அரசு கொண்டுவரவேண்டும். உடனடியாகச் செய்யவேண்டிய பணி அதுவே என்று ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஐ.தே. கட்சியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கட்சியின் மூத்த உறுப்பினரான ராஜித சேனாரத்னவும் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோவும் மேற்படி ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளைச் செய்வதற்காக முன்வைக்கப்பட்ட பொதுக்கட்டமைப்புக்குச் செயல் வடிவம் கொடுப்பதன் மூலம் -

விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்குக் கொண்டு வருவதற்கு உகந்த சூழலைத் தோற்றுவிக்க முடியும் என்பதையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையைத் தொடர்ந்து, நாட்டின் அரசியல் நிலைமை குழம்பிப்போயுள்ளது. இந்தக் குழப்ப நிலை, போர் நிறுத்தச் சூழலை மாற்றி, போருக்கு வழி செய்துவிடுமோ என்ற அச்ச உணர்வு தமிழ் மக்களிடம் மட்டுமன்றிச் சிங்கள மக்களிடமும் உண்டாகியுள்ளது.

அரசின் போக்கும் செயற்பாடும் அத்தகைய ஒரு சந்தேகத்தைத் தென்னிலங்கை மக்களிடமும் உருவாக்கி உள்ளது. ஒரு கதிர்காமரின் மரணத்தை வைத்துக்கொண்டு, அரசியல் தலைவர்கள் - மிகக் குறிப்பாக அரச தலைவர்கள் - சமாதானச் சூழலைக் கெடுத்துவரும் கைங்கரியத்தில் ஈடுபடுகிறார்கள். இதனைத் தென்னிலங்கை மக்கள் ஆதரிக்கிறார்கள் என்பதல்ல.

அமைச்சர் கதிர்காமர் கொலைசெய்யப்பட்டுவிட்டார் என்பதற்காக, சமாதான நிலையைக் குழப்பி மீண்டும் போர் ஒன்றுக்கு வழிசெய்வது தப்பானது என்பதனைச் சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் வெளிப்படையாகச் சொல்கிறார்கள். முன்னர் நடைபெற்ற போரினை மூலதனமாக வைத்துப் பணம் தேடிய அரசியல், அதிகார வட்டப் பெரும்புள்ளிகள் இதற்குப் பின்னால் ஊக்கிகளாக இருந்து செயற்படும் சாத்தியம் உண்டு என்பதனையும் அவர்கள் ஊகிக்காமல் இல்லை.

அதேவேளை, அவசரகால நிலை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டுவந்து நாட்டின் பாதுகாப்பைப் பேண வேண்டும் என்று கருத்துக்கூறும் ஒரு சிலரும் இல்லாமல் இல்லை.

இத்தகைய ஒரு பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவர் பொதுக்கட்டமைப்பை உடனடியாக நடைமுறைப்படுத்தி விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற ஆக்கபூர்வமான கருத்தை முன்வைத்திருக்கிறார்.

அமைச்சர் கதிர்காமரின் மறைவையொட்டி ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், பிரச்சினையின் கருப்பொருளை உணர்ந்து பேசியிருப்பதை வரவேற்றிருக்கும் அவர், அதனை அடியொற்றிச் செயற்படவேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

அமைச்சர் கதிர்காமரினாலும் பேரினவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்றவர்களின் நடத்தையாலுமே நாட்டுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்பதனையும் சுட்டிக்காட்ட அவர் தவறவில்லை.

நீண்டகாலத் தாமதத்தின் பின்னர் - ஆறு மாத ஆமை நகர்வின் பின்னரே - பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணிக்காகப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால், அதுகூடச் செயற்படாமல் முடக்கப்பட்டுவிட்டது. நீதிமன்றம்வரை சென்று தடுத்துவிட்டார்கள் பேரினவாதிகள். அரசில் உள்ள சில சக்திகளும் அவர்களுக்கு ஆதரவாக இருந்து ஊக்குவித்தன என்ற ஐயமும் உண்டு.

எப்படியோ, எந்த நோக்கத்திற்காகப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த இலக்கு அடையப்படாமலேயே தேக்கப்பட்டுவிட்டது. ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களின் எதிர்பார்ப்புகள் தவிடுபொடியாக்கப்பட்டுவிட்டன.

அத்தோடு நின்றுவிடாமல், போர்ச் சூழலை உண்டாக்கும் தப்புத்தாளங்களும் அரச தரப்பினால் போடப்படுகின்றன. அதாவது, யுத்தத்தை தமிழர் தரப்பின் மீது திணிப்பதற்கான சகல பின்னாயத்தங்கள் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் ஆற்றப்படுகின்றன.

தாம் திரைமறைவு நடவடிக்கைகளை மேற்கொள்வது மட்டுமன்றி, போரைத் தமிழர் தரப்பினரே தொடங்கப் போகிறார்கள் என்ற கருத்தை வலுப்படுத்தியும் பரப்பியும் வருகிறது அரச தரப்பு.

ஆனால், நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு நீண்டகாலமாக இழுபட்டுச் செல்லும் - இழுத்தடிக்கப்படும் இனப்பிரச்சினைக்கும் தீர்வுகாணவேண்டிய தேவையில் உரிய கவனமும் கரிசனையும் செலுத்தப்படுவதாக இல்லை.

தமிழர் தரப்பான விடுதலைப் புலிகள் இது விடயத்தில் மிகுந்த தெளிவுடனும் உறுதியுடனும் உள்ளார்கள். இலங்கையில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு யுத்தம் ஒரு மாற்றீடாக அமையாது. ஆனால், தமிழ் மக்கள் மீது போர் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இது அரசின் கைகளிலேயே உள்ளது. போர் நிறுத்தத்துக்கு வகைசெய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பேணுவதில் நாம் மிகவும் உறுதியாக உள்ளோம் - என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நறுக்காகத் தெரிவித்திருக்கிறார்.

அரச தரப்பும் போர் நிறுத்தத்தை பேணுவதில் அக்கறையுடனும் முழுமனதுடனும் ஈடுபடவேண்டும். அவசர கால நிலையை நீடிப்பது, பதவிக்காலத்தைப் பெருக்குவது, குழப்பநிலையைக் கூட்டுவது போன்ற அதிரடிச் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டியது அதற்குரிய பிரதான பிரமாணமாகும்.

# நல்லூர்த் திருவிழா அமைதியாக நடக்கிறது; எனவே, பொலீஸாரின் பணி அவசியமில்லை

## ஒழுக்காற்றுப் பேரவை இணைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.19

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா அமைதியான முறையில் நடைபெற்று வருகின்றது. ஆலயச் சுற்றாடலில் தொண்டர் அமைப்புகளும், மக்களும் இணைந்து தமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே, இதற்குப் பொலீஸாரின் கண்காணிப்பு அவசியமில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் நல்லூர் ஆலய உற்சவ காலத்திற்காக அமைக்கப்பட்டுள்ள உற்சவகால ஒழுக்காற்றுப் பேரவையின் இணைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம்.

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் பொலீஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மறுத்துவருகின்றனர்.

திருவிழா நாள்களின்போது இடையூறுகள் ஏதாவது ஏற்பட்டால் அதனை எவ்வாறு கையாள்வீர்கள் என்று கேட்டபோதே சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் பெருந்திருவிழா 1977ஆம் ஆண்டிலிருந்தே பொலீஸாரின் பிரசன்னமில்லாமல் நடைபெற்றுவருகின்றது. அப்போதுமுதல் மக்களே முன்னின்று பொறுப்புணர்வுடன் நடந்துகொண்டதால் பொலீஸாரின் பணி தேவைப்படவில்லை.

கடந்த 1996ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்குப் பின்னர்தான் பொலீஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபடத் தொடங்கினா. இந்தமுறை நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவிழாவின்போது அப்படியொரு தேவை ஏற்படமாட்டாது.

வழமைபோன்று வீதித் தடைகளில் தொண்டர் அமைப்புகள் ஈடுபடுவர்.

திருவிழாக் காலத்தில் ஏதாவது இடையூறுகள் வரநேரிட்டால் சமூகம் தான் பொறுப்பைக் கையில்எடுக்கும்.

இதனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு மக்களும் இடையூறு விளைவிக்காது நடந்துகொள்ளவேண்டும் - என்றார். (8-7)

# சேது சமுத்திரத் திட்டத்திற்குப் பின்னால் இராணுவ மற்றும் அரசியல் மேலாதிக்கம்

## அதற்கெதிரான மக்கள் இயக்கம் குற்றச்சாட்டு

சேது சமுத்திரக் கால்வாய் தோண்டும் இந்தியாவின் திட்டத்திற்குப் பின்னால் இராணுவ மற்றும் அரசியல் மேலாதிக்கமே மேலோங்கியிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு இத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தின் இணை இணைப்பாளர் இ.தம்பையா கருத்துத் தெரிவிக்கையில்:-

சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்படுகின்ற பல்வேறு பாதிப்புகள் குறித்தும் போதுமான விளக்கம் இந்திய அரசு, அதிகாரிகள் மற்றும் மக்களிடையே காணப்படுகின்றது. எனினும், சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக இன்னும் பல தெளிவான விடயங்களை நாம் இலங்கையர்களிடம் ஏற்படுத்த வேண்டியுள்ளது.

இத்திட்டத்தினால் ஏற்படுகின்ற பாதிப்புகள் குறித்து ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான பணத்தை இலங்கை அரசுக்கு வழங்க சேது சமுத்திரத் திட்டத்திற்கெதிரான மக்கள் இயக்கம ஆயத்தமாகவுள்ளது.

மீனவர் தொடக்கம் பொதுமக்கள் வரை இதனால் பல்வேறு வழிகளில் பாதிக்கப்படவுள்ளதால் இத்திட்டத்தினைப் பலமாக எதிர்க்கிறோம். தமிழ் நாட்டில்கூட 15 லட்சத்துக்கும் அதிகமான மீனவர்கள் இதனை எதிர்க்கின்றனர் - என்றார். இலங்கையில், தனது இராணுவ மேலாதிக்கத்தினை நிலைநாட்ட இந்தியா விரும்புகிறது. இதற்காகவே பலவித எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் இத்திட்டத்தை இந்திய அரசு முன்னெடுத்து வருகிறது - என மற்றொரு இணைப்பாளர் தெரிவித்தார். (8)

# வடிசாலையிலுள்ள மக்களை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளவில்லை

## யாழ். பிரதேச செயலர் செல்கிறார்

குருநகர் அரச வடிசாலையில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ள மக்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கை எதனையும் யாழ். பிரதேச செயலகம் மேற்கொள்ளவில்லை என்று பிரதேச செயலர் பற்றிக் டிறஞ்சன் தெரிவித்தார்.

மேற்படி அரச வடிசாலையில் தற்காலிகமாகக் குடியமர்ந்துள்ள மக்களை வெளியேற்றுவதற்கு யாழ். பிரதேச செயலகத்தின் அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டுவருவதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சம்பந்தப்பட்ட மக்கள் முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளனர்.

அத்துடன், பிரதேச செயலர் அலுவலகத்தின் முன்பாக மறியற்போராட்டம் ஒன்றை நடத்துவதற்கும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதுதொடர்பாக யாழ். பிரதேச செயலரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது சொந்த இடங்களிலிருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து அரச வடிசாலையில் தற்காலிகமாகத் தங்கியிருந்த இந்த மக்களை வெளியேற்றுவதற்குத் தாம் எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்றும் -

இதுதொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரி பிரியதர்ஷனவுக்கும் தாம் இதனைத் தெரிவித்துள்ளதாகவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (8-13)

# சிவகாமி மணி மண்டபம் இன்று திறப்பு

இணுவில் சிவகாமி அம்பாள் திருமண மண்டபத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மண்டப சபைப் பொருளாளர் த.கந்தசாமி திருமண மண்டபத்தைச் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைப்பார்.

மாலை நிகழ்வுகள் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும். நிகழ்வில், இணுவில் பகுதியைச்சேர்ந்த மூத்த கல்விமான்களான ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கலாபூஷணம் வை.சிற்றம்பலம், க.கந்தசாமி, செ.சோதிப்பெருமாள் ஆகியோர் கௌரவிக்கப்படுவர். தொடர்ந்து, கொக்குவில் கலாபவன மாணவர்கள் வழங்கும் நிருத்திய நிவே தனம், நாட்டியாஞ்சலி என்பனவும் இணுவில் இளம் தொண்டர் சபையினர் வழங்கும் வள்ளி திருமணம், இணுவில் அம்பலவாணர் கலை அரங்கம் வழங்கும் செந்தாமரை நாடகம் என்னும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.(8-86-202)


## உதயவாக்கு

அடிமைகளின் குணமாகிய பொறாமை தான் நமது நாட்டின் அழிவுக்கே காரணமாக அமைந்திருக்கிறது.

-சுவாமி விவேகானந்தர்.

## நாளை

ஆவணி 04
சனிக்கிழமை
20.08.2005
திதி: பிரதமை
முன்னிரவு 10.20 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
காலை 07.33 வரை
சதயம்
பின்னிரவு: 06.00 வரை
சுபநேரம்: 03.05 - 04.35
ராகுகாலம்: 09.05 - 10.35
(யாவும் பழைய நேரப்படி)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வாங்கு, மேசை, கரும்பலகை, கதவு, பனை மரம், கோழிக்கூடு, கிழுவங்கதியால், கல் பேட்ஸ், றலி சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.3, லவ்லேன், உடுவில். T.P.: 077 9217992. (38955)

13 Sri xxxx தொடரிலக்கமுடைய Lancer Box Model வெள்ளை நிறக்கார் விற்பனைக் குண்டு. தொடர்பு: T.P.No. 077 3148791. (சுண்டுக்குளி). (39012)

வீட்டுப் பாவனைக்குரிய ஒரு வருடம் பாவித்த சோகேஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு: ந.விஜயதரன், இல.125, ஐயனார் கோயில் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப் பாணம். (39048)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கில் அமைந்துள்ள ஒரு பரப் பும் 11.36 குளியும் கொண்ட சேதமடைந்த வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ்.இராஜஇராஜக்குருக்கள். T.P.: 0777 442803. (39020)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975 ஆம் ஆண்டு, பூர நட்சத்திரம், 38½ கிரகபாவமுடைய, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியைக்குத் தகுந்த மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம். 2675, C/o. உதயன், யாழ்ப் பாணம். (39054)

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1984, மிருகசீரிடம் 4ஆம் பாதம், 7இல் செவ்வாய் குருவுடன் சேர்ந்த 68 பாவம், A/L படித்து H.N. D.A. படித்துக் கொண்டிருக்கும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் உள்நாட்டிலோ வெளி நாட்டிலோ தேவை. 74ஆம் ஆண்டு பிறந்தவர் களும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: விளம் பர இல.2672, மே/பா உதயன், யாழ்ப் பாணம். (39043)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த London இல் Consultant Physician (வைத்தியர்) ஆக இருக்கும் விவாகரத்துப்பெற்ற, பொறுப்புக்கள் இல்லாத மணமகனுக்குப் படித்த, அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க் கப்படமாட்டாது.உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பிற்கு: 021-222 6366. (38991)

இலங்கை பெந்தக்கோஸ் கௌரவ குடும்பம், 1972, உயரம் 5' 6'', COMPLETED DIPLOMA IN TECHNOLOGY (COMPUTER) C.B.A. கம்பனி கொழும்பில் பணிபுரியும் மணமகனுக்கும் R.C. 1975, உயரம் 5' 6'', QUALIFIED IN THE TECHNICIAN IN TELICOMMNICATION AND ELECTRONIC ENGINEERING மணமகனுக்கும் படித்த, அழகான மணப்பெண் தேவை. தொடர்பு: 'சிவாலயா' 68/15 சட்டநாதர் வீதி, நல்லூர். T.P.: 021 222 7844. (39038)

## வீடும் காணியும் விற்பனைக்கு

ஊரெழு பிள்ளையார் கோயிலுக்கு அருகில் ஆறு பரப்புடன் கூடிய புதிய வீடு விற் பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 618 0694. (38973)

## கார் விற்பனைக்கு

11 ஸ்ரீ xxx தொடரிலக்கம் கொண்ட நல்ல நிலையிலுள்ள லான்சர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 9152373, 4590098. (39021)

## கட்டாக்காலி நாய்களை அழிக்கஏற்பாடு

உள்ளூராட்சி சபைகளினால் பிடிக்கப்படும் கட்டாக்காலி நாய்களைக் கடலினுள் அமிழ்த்திக் கொல்வதற்கு ஏற்ற ஒழுங்குகள் யாழ். அரச அதிபரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

கட்டாக்காலி நாய்களைக் கடலினுள் அமிழ்த்திக் கொல்வதற்கு ஏற்ற இடங்களைத் தெரிவு செய்து தனக்குத் தெரியப்படுத்தினால் அதற்குரிய வழிவகைகளைச் செய்து தருவதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து கோரிக்கையை அனுப்பிவைக்குமாறு சகல உள்ளூராட்சி சபை செயலாளர்களுக்கும் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (202-117)

## மரக்கறி விலை அதிகரிப்பு

கொடிகாமம் சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.நல்லூர் கந்தசுவாமி கோயில் மற்றும் சந்நிதி முருகன் ஆலயம் ஆகியவற்றின் வருடாந்த பெருந்திருவிழாக்கள் ஆரம்பமாகி உள்ளதைஅடுத்தே காய்கறி வகைகளின் விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (9-170)

# வாகன சுத்திகரிப்பு நிலையம் சாவகச்சேரியில் திறப்பு

தென்மராட்சி,ஒக.19

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாகன சுத்திகரிப்பு நிலையம் நாளை சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி புகையிரத நிலை வீதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த நிலையத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகத் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், சாவகச்சேரி நகர சபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம், யாழ். மாவட்ட கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளர் செ.கனகசபாபதி, யாழ்.மாவட்ட நிர்வாக சேவைகள் பொறுப்பாளர் சி.விஜிதரன், கூட்டுறவுத் துறைப் பொறுப்பாளர் பொ.புஷ்பகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (202-117)

## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுதுபார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்- போன் சொப்**

10, நவீன சந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி (திரீ ஸ்ரார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம்.

# புதுமனைப் புகுவிழா அழைப்பு

காமாட்சி அம்பாள் துணை
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் ஆவணித் திங்கள் 4ஆம் நாள் நாளை (20.08.2005) சனிக்கிழமை பகல் 12.02 மணி தொடக்கம் 2.00 மணி வரை வரும் விருச்சிக லக்கின சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட

## கஜன் இல்லம்

எனும் மனையில் குடிபுகவும் எமது காயத்திரி நகைத்தொழிலகத்தையும் முன்னைய காயத்திரி விடியோ விஷன் நிலையத்தையும் முன்னைய இடத்திலிருந்து அம்மனையின் அருகில் எம்மால் அமைக்கப்பட்ட கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கவும் காமாட்சி அம்பாள் திருவருள் பாலித்துள்ளதால் நாங்கள் அவ்வைபவங்களுக்கு வருகை தந்து மனையையும் ஸ்தாபனத்தையும் வாழ்த்திச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

18/8 சபாபதி வீதி, பூநாறி மரத்தடி, கே.கே.எஸ். றோட், நாச்சிமார் கோயிலடி.
T.P: 0712-707359, 0777-111024

வரவேற்பாளர்:
திரு. திருமதி திருநாவுக்கரசு பத்தரும் பாரியாரும்,
திரு. திருமதி கந்தசாமி பத்தரும் பாரியாரும்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு. திருமதி முரளிதரன் சுனேத்திரா குடும்பத்தினரும் அவர்தம் பிள்ளைகளும்.

உ
கணபதி துணை

# அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் கோயில் தாவடி

## கல்யாண மண்டபத் திறப்பு விழா

அன்புடையீர்!

கல்யாண மண்டபத் திறப்பு விழா பார்த்திப வருடம் ஆவணி மாதம் 3ஆம் நாள் (19.08.2005) வெள்ளிக்கிழமை பகல் 12.05 மணி தொடக்கம் 12.41 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெற விநாயகப் பெருமான் அருள்பாலித்துள்ளார்.

ஆசியுரை வழங்குவோர்: சிவஸ்ரீ கு.பரமசிவக் குருக்கள்
அருட்கவி சி.விநாசித்தம்பி
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் அவர்கள்

அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். இந்த வைபவத்தில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- ஆலய நிர்வாக சபை.

(#-44550)(42.14.15)

# கணபதி ஜோதிட நிலையம்

## பண்டிட் ஐயப்ப சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளார். இவர் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிற்குப் பரிகாரம் கூறுவார். ஒரு முறை சந்தியுங்கள்.

தொடர்பு: **SHANJAEYA REST HOUSE,**
NO.5, RAKKA ROAD (ICRC Office அருகில்),
JAFFNA.T.P.: 077 9173940. (38141)(42.15.18)

# புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

இன்று மங்களகரமான பார்த்திப வருடம் 3ஆம் நாள் (19.08.2005) வெள்ளிக்கிழமை காலை 9 மணி 45 நிமிடம் தொடக்கம் 10 மணி 40 நிமிடம் வரையுள்ள (புதியநேரம்) சுபமுகூர்த்த வேளையில்

## வி.ஜி.எலக்ரிக்கல் அன் எலக்ரோனிக்ஸ்
## V.G.ELECTRICAL & ELECTRONICS

என்னும் ஸ்தாபனம் புதிதாக ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கே.கே.எஸ். வீதி,
இணுவில்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
திரு திருமதி
தி.விக்னேஸ்வரன்.

(39039)(42.14.15)

# புதுமனை புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் பங்குனி மாதம் 4ஆம்நாள் (20.08.2005) சனிக்கிழமை காலை 12 மணிமுதல் 2 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

## விதுர்ஷ் இல்லம்

என்னும் இல்லத்தில் குடிபுக இறைவன் திருவருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதனால் அத்தருணம் தாங்கள்தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மனையை வாழ்த்தி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

50/1, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தங்கள்நல்வரவை நாடும்
திரு திருமதி சண்முகராஜா
ஞானேஸ்வரி
தம்பதிகள்
(கீர்த்தனா ரயர் வேக்ஸ் உரிமையாளர்)

(39041)(42.14.15)

# காக்கைதீவிலுள்ள கொல்களத்தை கல்லுண்டாய்க்கு மாற்ற நடவடிக்கை

## சுகாதாரச் சீர்கேடு காரணமாக

வலிகாமம் தெற்கு ஓக.19

காக்கைதீவில் அமைந்துள்ள கொல்களத்தைக் கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள பழைய இறங்குதுறைக் கட்டடத்துக்கு மாற்றுவதற்கு வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

காக்கைதீவு கொல்களம் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதால் அங்கு வைத்து ஆடு, மாடுகளை வெட்டவேண்டாம் என யாழ்.மாவட்ட பிரதி சுகாதாரப் பணிப்பாளர் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையினருக்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, பிரதேச சபை காக்கைதீவுக் கொல்களத்துக்குப் பதிலாகக் கல்லுண்டாய் வெளியில் அமைந்துள்ள பழைய இறங்குதுறையைக் கொல்களமாகப் பயன்படுத்த முன்வந்துள்ளது.

இதற்கான முன் அனுமதியை மாகாண சபையிடம் கோரி அதற்கான நிதியினையும் பிரதேச சபை மாகாணசபையிடமிருந்து பெற்றுள்ளது.

இதேவேளை -

பண்டத்தரிப்பு, மாதகல் உப அலுவலகங்களுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு அருகில் அமைந்துள்ள காடாப்புலம் கொல்களம் இராணுவ நடவடிக்கைகளால் முற்றாக அழிக்கப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. ஏராளமான மிதிவெடிகளும் இங்கு புதைக்கப்பட்டுள்ளன. இக்கொல்களப் பகுதியைப் புனரமைப்புச் செய்வதற்கென கடந்த ஆண்டு மாகாண சபையால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அப்பகுதியில் உள்ள மிதிவெடிகளை அகற்றி உதவுமாறு மிதிவெடி அகற்றும் பிரிவினரிடம் பிரதேசசபை கோரிக்கை விடுத்தும் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாமையால் மேற்படி காடாப்புலம் கொல்களம் இதுவரை புனரமைப்புச் செய்யப்படவில்லை.

இந்த வருடமாவது அப்பகுதியிலுள்ள மிதிவெடிகளை அகற்றித் தருமாறு மிதிவெடி அகற்றும் பிரிவு இணைப்பாளரிடம் வலி. தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் மேரி சாந்தசீலன் கோரியுள்ளார். (8-152)

# முட்கம்பியில் சிக்கி சிறுவன் படுகாயம்!

வாகனத்திற்கு வழிவிடுவதற்காக வீதியோரமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் அங்கிருந்த முட்கம்பிக்குள் சிக்கிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருந்த நான்கு வயதுச் சிறுவன் முட்கம்பிகளினால் வெட்டப்பட்டுக் காயமடைந்தான்.

கடந்த வாரம் மிருசுவில் சந்தியில் இடம்




பெற்ற இச்சம்பவத்தில் விடத்தற்பளையைச் சேர்ந்த நகுலேஸ்வரன் பிரசன்னா (வயது 4) என்ற சிறுவனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் படைமுகாம்களின் அருகே வீதியோரங்களில் போடப்பட்டுள்ள முட்கம்பிகளில் சிக்கி பலர் காயமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (9-117)

# அல்லாரை கிராமியப் பண்ணையில் உற்பத்தியாகும் மரக்கறிக்குக் கிராக்கி

தென்மராட்சி ஓக.19

அல்லாரை உற்பத்தி கிராமியப் பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

சிறுகைத்தொழில் அமைச்சின் அனுசரணையுடன் அல்லாரைக் கிராமத்தில் 24 பரப்புக் காணியில் இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி மரக்கறி வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருள்களைக் கொள்வனவு செய்ய காலையிலேயே பொதுமக்கள் முண்டியடிக்கின்றனர்.

பண்ணையில் முருங்கை, கங்கூன், பொன்னாங்காணி, வல்லாரை, பயிற்றை, கத்தரி போன்ற மரக்கறி வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உர வகைகள் பாவிக்காமலும் நச்சு மருந்துகள் விசிறாமலும் விளைபொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதால் அதனைக் கொள்வனவு செய்ய மக்கள் தினமும் காலையில் இப்பண்ணையில் கூடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. (8-117)



சங்கானை அரச இயந்திர மட்கல நிலையம் சிறுகைத் தொழில் கைவினைப் பயிற்சியை வழங்கி வருகிறது. இதில் பயிற்சிபெறுபவர்களுக்கு கைவினைக் கலைஞர் கே.ஏ.டொரின் சந்திரசேகர, மட்கலங்களுக்கு மெருகூட்டும் பயிற்சி வழங்குகின்றார். *(படம் : சங்கானைச் செய்தியாளர்)*

# அச்சுவேலி வைத்தியசாலையில் குடும்ப நல உதவியாளர் இல்லை

அச்சுவேலி,ஓக.19

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் குடும்பநல உதவியாளர்கள் பற்றாக்குறையினால் பிரசவத்திற்காக வைத்தியசாலையில் சேர்க்கப்படும் தாய்மார் பல்வேறு இன்னல்களுக்கும் உள்ளாகவேண்டியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மூன்று குடும்ப நல உதவியாளர்கள் கடமைபுரிகின்றனர். எனினும், சில வேளைகளில் ஒருவர் கூடக் கடமைக்குச் சமுகமளிப்பதில்லை என்று கூறப்படுகிறது. இதனால் வைத்திய அதிகாரியே குடும்பநல உத்தியோகத்தரின் கடமையையும் செய்யவேண்டி நேரிடுவதாகவும் - வைத்திய அதிகாரி இல்லாதவிடத்து தாய்மார் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படுவதாகவும் - கூறப்பட்டது.

இதுபற்றி மாகாண சுகாதாரப் பிரதிப் பணிப்பாளருக்கும் முறையீடு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. (9-11)

# சோதனைச் சாவடி பலப்படுத்தப்பட்டுள்ளது

குருநகர்,ஓக.19

குருநகர் கடற்கரை வீதியில் குருநகர் மத்திய மருந்தகத்தின் கிழக்குப் புறத்தில் அமைந்துள்ள படையினரின் சோதனைச் சாவடி பலப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சோதனைச் சாவடியின் வெளிப்புறத்தில் புதிய கம்புகள் கொண்டு பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதுடன், இராணுவச் சோதனைச் சாவடியினுள் எவரும் உட்புகாதவாறு இரும்புக் கதவும் அமைக்கப்பட்டுள்ளது.

இச்சோதனைச் சாவடியில் சொற்ப எண்ணிக்கையிலான படையினரே தங்கியுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-51)



உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் புதிய கட்டடத்துக்கான அத்திபாரக் கல் அண்மையில் நடப்பட்டது. வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் அத்திபாரக் கல்லை நடுவதைப் படதில் காணலாம்.

*(படம் : வலி.தெற்குச் செய்தியாளர்)*

# கைத்தொழில் பேட்டை காணியில் சட்டவிரோதமாகக் கல் அகழ்வு

## பொலீஸ் பாராமுகம்

யாழ்ப்பாணம்,ஓக.19

அச்சுவேலி கைத்தொழில் பேட்டை அமைந்திருந்த வளாகத்தில் தற்போது சட்டவிரோதமான முறையில் கல் அகழ்வு இடம்பெற்று வருவதாக யாழ்.கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைத்தொழில் பேட்டை நிறுவனம் தற்பொழுது பூரணமாக இயங்காத நிலையில் உள்ளது. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அங்கு கல் அகழ்வு இடம்பெறுவதாகவும் - இதனைத் தடுத்துநிறுத்துவதற்கு அச்சுவேலி மற்றும் யாழ்.பொலீஸாரிடம் பல தடவைகள் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதும் பொலீஸாரால் இதுவரை மேற்கொள்ளப்படவில்ல - என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல் அகழ்வு இடம்பெறும் வளாகத்தில் பாரிய குழிகள் தோன்றுவதனால் எதிர்வரும் காலங்களில் மீண்டும் அங்கு கைத்தொழில் பேட்டையை [illegible]மைப்பதற்கு பெரும் சிரமப்படவேண்டியிருக்கும் எனவும் அவர் மேலும் கூறினார். (9-ரி)

# வரணி மருத்துவமனைக்கு ரூ.90 ஆயிரம் ஒதுக்கீடு

வரணி, ஓக.19

வரணி மருத்துவமனைக்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் ரூபா 90 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்சாரம், நீர்விநியோகம் ஆகிய தேவைகளுக்கு இந்நிதி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உலக சுகாதார நிறுவனம் தண்ணீர் கொள்கலன் ஒன்றையும் மேற்படி மருத்துவமனைக்கு வழங்கியுள்ளது.(9-170)

# விசர்நாய்க் கடிக்கு இலக்காவோர் தொகை திடீரென அதிகரிப்பு

தென்மராட்சி ஓக.19

நாட்டில் நிலவும் வெப்பம் காரணமாக நாய்களுக்கு விசர்நோய் ஏற்படுவதால் விசர்நாய்க்கடிக்கு உள்ளாவோர் தொகை அதிகரித்து வருகின்றது.

இந்த மாதத்தில் மட்டும் 58 பேர் விசர் நாய்களினால் கடியுண்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுள்ளதாகப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது. வளர்ப்பு நாய் ஒருவருக்குக் கடித்தால் அதனை மற்றவர்களுக்குக் கடிக்கவிடாமல் கட்டிவைத்துப் பராமரிக்குமாறும், கட்டாக்காலி நாய்களாயின் அதனை அழிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொள்ளுமாறும் டாக்டர் ச.அம்பிகைபாகன் தெரிவித்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி விசர்நாய்களினால் கடியுண்ட மீசாலை கிழக்கைச் சேர்ந்த வைதிவ்யா (வயது 17), கைதடி நாவற்குழியைச் சேர்ந்த ஆர்.அனுஷன் (வயது 8), மீசாலை வடக்கைச் சேர்ந்த எஸ். துஷ்யந்த் (வயது 18), எஸ்.சண்முகநாதன் (வயது52) ஆகியோரும் -

நேற்றுமுன்தினம் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த அருணாசலம் புலேந்திரன் (வயது60), ஸ்ரீவாமதேவன் சாரதாதேவி (வயது 52), சிவச்சந்திரன் நிதர்சன் (வயது 18), தம்பு சின்னையா (வயது 62) ஆகியோரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். (8-117)

# பாடசாலைப் பெயரை மாற்றுவதற்கு முயற்சி

வலிகாமம் தெற்கு,ஓக.19

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பெயரைப் புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்து தருமாறு மேற்படிப் பாடசலையின் அபிவிருத்திச் சங்கத்தினரும் பெற்றோர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வருடம் நடைபெறவுள்ள பாடசாலையின் பவள விழாவை முன்னிட்டுப் பாடசாலையின் பெயரை மாற்றி அமைக்க இவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அவர்கள் உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வடக்கு- கிழக்கு மாகாணக் கல்விச் செயலாளரிடம் தொடர்புகொண்டுள்ளனர். (9-152)

# நிரந்தர உதவி அரசாங்க அதிபர் நெடுந்தீவில் இல்லை; மக்கள் சிரமம்

நல்லூர்,ஓக.19

கடந்த சில மாதங்களாக நெடுந்தீவுக்கான நிரந்தர உதவி அரச அதிபர் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தில் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால், பொதுமக்கள் தமது அத்தியாவசிய அலுவல்களை நிறைவேற்றுவதில் சிரமங்களையும் காலதாமதங்களையும் எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகிறது.

தற்சமயம் வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு நாள்கள் மட்டுமே உதவி அரச அதிபர் அங்கு கடமையில் ஈடுபடுகின்றார்.

சமீபகாலம் வரையும்கூட தீவின் நிர்வாகம் தனியான நிரந்தர உதவி அரச அதிபரின் கீழ் இயங்கிவந்துள்ளது. இந்த மாற்றங்கள் காலக்கிரமத்தில் நெடுந்தீவை அண்மையில் உள்ள மற்றும் ஒரு பிரிவுடன் இணைக்கும் நிலையையும் ஏற்படுத்திவிடலாம் எனப் பொது மக்கள் விரக்தியடைந் துள்ளனர். (9-111)


# சிறுவனைக் காணவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.19

அதிகாலைவேளை வீட்டிலிருந்து வெளியில் சென்ற சிறுவன் ஒருவனைக் காணவில்லையெனத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ரகுநாதன் கிருபாகரன் (வயது14) என்ற சிறுவனே காணாமற்போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறிப்பிட்ட சிறுவன் கடந்த 7 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு வீட்டிலிருந்து வெளியில் சென்றார் என்றும் அவர் பின்னர் வீடு திரும்பவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-7)




## திரு. வல்லிபுரம் இராசையா
## திருமதி மகேஸ்வரி இராசையா

அன்புக்கு ஒரு வாழ்த்து
திருமணத்தில் இணைந்து, இன்று 60 ஆண்டுகள் நிறைவு
உங்களின் வாழ்க்கைதான், இலக்கணம் எங்களுக்கு

என்றைக்கும்
உங்களின் தலைமையின் கீழான
எங்களின் பயணங்கள் அச்சமற்று விரிகின்றன

காலங்களை வென்றுவந்த
உங்களின் அன்பு உலகில் உருப்பெற்றதற்காய்
என்றென்றும் மகிழ்வுடன் நாம் ~ குடும்பத்தினர் ~
(38970)

## கொதி தண்ணீர் உடலில் விசிறப்பட்டு ஒருவர் காயம்!

தென்மராட்சி,ஓக.19
உயரத்தில் வைக்கப்பட்டிருந்த கொதிநீர்ப் பாத்திரம் சரிந்து வீழ்ந்து கொதிநீர் உடலில் விசிறப்பட்டதால் ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த 16 ஆம் திகதி மீசாலையில் உள்ள அரிசி ஆலையில் இடம்பெற்றது.


இதே இடத்தைச் சேர்ந்த க.தேவகுமார் (வயது-34) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (8-117)

## மின்பிறப்பாக்கி தீப்பற்றியது!

தென்மராட்சி ஓக.19
மின் பிறப்பாக்கியை இயக்கிய இளைஞருக்கு அது திடீரெனத் தீப்பற்றிக் கொண்டதில் எரிகாயம் ஏற்பட்டது.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த குணரத்தினம் பிரதீப் (வயது18) என்பவரே இதில் காயமடைந்தார்.

காயமடைந்த இந்த இளைஞர் பின்னர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (8-117)


இதோ யாழ்.நகரில் அறிமுகப்படுத்துகின்றோம்

**மேதஹரணி (Meda Harani)**

உங்கள் இரத்தத்தில் உள்ள கொழுப்புச் சத்தைச் சரியான அளவில் கட்டுப்படுத்துகின்றது. ஒரு முறை பாவித்துப் பயன்பெறுங்கள். ஸ்ரீ லங்கா ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் தயாரிப்பு மேத ஹரணி (MEDA HARANI)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:-
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி, (சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
(சிலை) யாழ்ப்பாணம். தொலைபேசி:222 2567





**மதுரை மீனாட்சி அம்மன்**
**அருள்வாக்கும் ஜோதிடமும்**
K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்துப் பாருங்கள். (காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை)

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre Back side).
T.P:- 0776446525. (38378)(54-34-18)



## கணக்காளர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாண நகரில் பிரபலமான நிறுவனத்துக்கு கணக்காளர் (ஆண்) ஒருவர் தேவை

முன் அனுபவம் உள்ளவராகவும் 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

சுயவிவர விண்ணப்பத்துடன் கல்வித்தகைமைச் சான்றிதழ், பிறதகைமைச்சான்றிதழ், அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் போட்டோப் பிரதிகளுடன் 25.08.2005 இற்கு முன்பதாக விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல: 2671,
மே/பா உதயன்.
(39017)(26.14.45)


## 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 - 07 - 1930 | 24 - 08 - 1975 |

### அமரர் சின்னத்தம்பி கந்தையா

திதி: 19-08-2005

பாசமுடன் பேணிப் பாங்குடனே எமை வளர்த்து
பாதிவழிதனிலே கைதவறிப்போன ஐயாவே!
முப்பது ஆண்டுகள் தான் மின்னலென வந்தாலும்
மூச்சுக் காற்றுள்ளவரை மறவோமே நாம் உம்மை!

24 /2, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம். (39009)(26.14.45) - குடும்பத்தினர்.

## வாழைப்பழத்தின் விலை அதிகரிப்பு

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை தற்போது திடீரென அதிகரித்துள்ளது.

குடாநாட்டுச் சந்தைகளில் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் 40 ரூபாவாகவும், இதரை வாழைப்பழம் ஒரு கிலோ 30 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

தற்போது பிரதான ஆலயங்களின் உற்சவங்கள் இடம்பெற்று வருவதே வாழைப்பழத்தின் விலை அதிகரிப்புக்குக் காரணமென்று தெரிவிக்கப்படுகின்றது. (8-17)

## மோ.சைக்கிளிலிருந்து தவறிவீழ்ந்து குழந்தை காயம்!

தென்மராட்சி,ஓக.19
மோட்டார் சைக்கிளிலிருந்து இரண்டு வயதுக் குழந்தை தவறி வீழ்ந்து காயமடைந்தது.

கடந்த 15 ஆம் திகதி சாவகச்சேரியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சாவகச்சேரி, கயிலாயபிள்ளை வீதியைச் சேர்ந்த மதீஸ்வரன் நிகேதன் (வயது 2) என்னும் குழந்தை காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. (8-117)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் டானியல் வசந்தகுமார் குருஸ்

(மருந்துக் கலவையாளர் -சுற்றயல் கூறு வைத்தியசாலை, காரைநகர்)

16.08.2005 அன்று அகாலமரணமான டானியல் வசந்தகுமாரின் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலை அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சுற்றயல்கூறு வைத்தியசாலை, காரைநகர்.* (39016)(26.14.45) வைத்திய அதிகாரியும், சக ஊழியர்களும்.

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி பரிமளம் அன்னலிங்கம்

B.A.Dip.in Edu.

*(யா அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை அதிபர்)*

அவர்கள் சிவபதமடைந்த செய்தி கேட்டு துயரம் அடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/அரியாலை கிழக்கு அ.த.க.பாடசாலை,
யா /பூம்புகார் அ.த.க.பாடசாலை,
(39024)(26.14.45) அதிபர், ஆசிரியர்கள், முன்னாள் ஆசிரியர்கள், மாணவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கந்தையா கந்தசாமி (யாழ். நீராவியடி)

(முன்னாள் திருச்செல்வம் கம்பனி மோட்டார் மெக்கானிக்கும் நடத்துநரும்)

*இகம்: 13-06-1921 பரம்: 31-08-2004*

*திதி: 20-08-2005*

அன்பாலும் பண்பாலும் எங்களைச் சீராட்டி
பாசமழை பொழிந்து எங்களை நன்மக்களாக்கி
நானிலம் போற்ற நற்பண்புகளுடன் வாழவைத்த
எங்கள் அன்புத் தந்தையே! கணப்பொழுதில்
எங்களை ஆற்றொணாத் துன்பத்தில் ஆழ்த்தி இறைவன்
திருவடி சென்று சேர்ந்தீரே அப்பா!
தாங்கள் மறைந்து ஓராண்டே ஆனாலும்
இன்முகமும் நற்பண்புகளும் என்றும் மறையவே மறையாது!
மறுபிறப்பு என்று ஒன்று உண்டெனின்
மீண்டும் எமக்குத் தந்தையாகப் பிறந்திடுங்கள்!
தங்களின் இனிய நினைவுகளுடன் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரின் இல்லத்தில் நாளை 20-08-2005 சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

44/2, கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம். TP.: 4590971. (38915)(26.14.45)
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


ACTION CONTRE LA FAIM

Action Contre La Faim is an International NGO involved in humanitarian activities in Sri Lanka since 1997. Current activities ate based in Ampara, Battlcaloa, Jaffna and Tricnnialee districts. *We require services of a Radio Operator/ Fleet Manager for JAFFNA.*

*RADIO OPERATOR / FLEET MANAGER*

- Experience in RADIO Management,mainlenance and procedures:
- Experience in VEHICLE Management and maintenance:
- Good skills in Team management.
- Good computer Literacy- especially (MS Word. Excel)
- Working Experience in INGO's
- Vehicle Driving licence require.
- Fluent Spoken and written English and Tamil.
- Good knowledge of Jaffna area.
- Ability to work in team:
- Good autonomy.
- Motivation for humanitarian work.

*Contact to:*
**Miss S.Pushparanjini, Action Contre la Faim/Jaffna,**
**No. 40 Rakka, Lane/Chuttdikuli, Jaffna.** (38988)(26)
Phone number: 222 2465 Application before the 31st August.

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக்கு மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரின் முதல் தொகுதியினரின் பெயர்களும் அறிவுறுத்தல்களும் நேற்றைய உதயனில் பிரசுரமாயிருந் தன. அதில் மிகுதிப் பெயர்களும் குலுக்கல் அடிப்படை யில் தெரிவானோரின் ஒரு தொகுதியினரின் பெயர்களும் இன்று வெளியிடப்படுகின்றன.

மா/ 1872 சேதுகாவலர் பொன்னம்பலம்
மா/ 1882 செல்லையா இராசையா
மா/ 1886 சிவக்கொழுந்து சுந்தரலிங்கம்
மா/ 1890 இராமன் சின்னத்தம்பி
மா/ 1896 தர்மலிங்கம் செல்வராசா
மா/ 1912 திருமதி நாகம்மா சீனியர்
மா/ 1918 யாக்கோபு இம்மானுவேல்
மா/ 1932 வேலுப்பிள்ளை இரத்தினம்
மா/ 1945 மார்க்கண்டு இரத்தினம்
மா/ 1959 திருமதி இராசலட்சுமி முத்துராசா
மா/ 1964 திருமதி பவளம் துரைராசா
மா/ 1975 திருமதி தவமணி சிறில்
மா/ 1977 திருமதி செல்லம்மா நன்னித்தம்பி
மா/ 1994 வயித்தி கந்தையா
மா/ 1995 திருமதி திரேசம்மா செல்வநாதன்
மா/ 1999 செல்வி புஷ்பலதா வேதநாயகம்
மா/ 2002 திருமதி மகேஸ்வரி சாந்தலிங்கம்
மா/ 2010 தன்டாயுதபாணி தயாபரன்
மா/ 2012 செபஸ்ரியன்பெர்னான்டோ இராசதுரை
மா/ 2015 வயித்திலிங்கம் செல்லையா
மா/ 2030 திருமதி புவனேஸ்வரி இரத்தினம்
மா/ 2040 திருமதி ருக்மணி அரசட்ணம்
மா/ 2063 வயிரமுத்து இராசா
மா/ 2065 நல்லதம்பி நவரத்தினம்
மா/ 2072 திருமதி நாகரத்தினம் இராசேந்திரம்
மா/ 2077 திருமதி நேசரத்தினம் இன்னாசிமுத்து
மா/ 2086 திருமதி திரேசம்மா சவிரிமுத்து
மா/ 2087 வைத்திலிங்கம் செகராசசிங்கம்
மா/ 2095 திருமதி பொலின்மேரி சுவாம்பிள்ளை
மா/ 2116 தங்கரத்தினம் சின்னத்துரை
மா/ 2117 திருமதி பத்மாசணி விசுவலிங்கம்
மா/ 2120 சிதம்பரநாதர் திசைவீரசிங்கம்
மா/ 2121 கந்தையா காசிப்பிள்ளை
மா/ 2122 திருமதி தங்கம்மா நல்லையா
மா/ 2129 வேலுப்பிள்ளை குமரேசபிள்ளை
மா/ 2132 குமாரசாமி திசைராசா
மா/ 2149 ஐயாத்துரை சண்முகராசா
மா/ 2153 திருமதி சுகுணா இராஜேந்திரம்
மா/ 2157 சின்னத்துரை முருகேசு
மா/ 2166 திருமதி லூத்தம்மா சூசைப்பிள்ளை
மா/ 2172 சின்னத்தம்பி கந்தசாமி
மா/ 2177 திருமதி பத்மநாயகி துரைசிங்கி
மா/ 2179 சங்கரப்பிள்ளை பொன்னுத்துரை
மா/ 2187 திருமதி விசுவபாரதாதேவி முத்துக்குமாரசாமி
மா/ 2193 வல்லிபுரம் மகேந்திரராசா
மா/ 2196 தம்பையா தியாகராஜா
மா/ 2221 இராமலிங்கம் அப்புத்துரை
மா/ 2234 தியாகர் ஆறுமுகம்
மா/ 2237 கந்தையா ஆறுமுகம்
மா/ 2239 மனுவேல் அந்தோனிப்பிள்ளை
மா/ 2246 திருமதி இவாஞ்செலின் ஜெபமணி கனகசூரியர்
மா/ 2250 திருமதி ஞானாம்பிகை விவேகானந்தன்
மா/ 2253 மரியாம்பிள்ளை இருதயநாதர்
மா/ 2272 குஞ்சுமணி கோபால்
மா/ 2299 சந்திரசேகரம் கந்தசாமி
மா/ 2310 திருமதி லூர்துநாயகி யேசுதாசன்
மா/ 2316 கந்தையா முருகேசு
மா/ 2318 சின்னத்தம்பி மார்க்கண்டு
மா/ 2322 திருமதி மரியம்மா சவரிமுத்து
மா/ 2326 கணபதிப்பிள்ளை மாசிலாமணி
மா/ 2336 கந்தவனம் மயில்வாகனம்
மா/ 2338 திருமதி மரியம்மா இசிதோர்
மா/ 2339 சின்னத்தம்பி மார்க்கண்டு
மா/ 2349 திருமதி மரியம்மா ஞானப்பிரகாசம்
மா/ 2356 கந்தையா நடராசா
மா/ 2368 திருமதி நாகம்மா துரைச்சாமி
மா/ 2374 கந்தையா புண்ணியமூர்த்தி
மா/ 2397 திருமதி புவனேஸ்வரி கிருஸ்ணசாமி
மா/ 2406 திருமதி றீற்றா றெஜினோல்ட்
மா/ 2411 சரவணமுத்து இராசரத்தினம்
மா/ 2413 வன்னித்தம்பி இராமலிங்கம்
மா/ 2428 கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்
மா/ 2429 ஆறுமுகம் சிவானந்தம்
மா/ 2432 திருமதி செல்வநாயகி யோசை
மா/ 2452 செல்லையா தவராசா
மா/ 2453 கார்த்திகேசு சிவக்கொழுந்து
மா/ 2456 சிவகுரு சபாபதிப்பிள்ளை
மா/ 2469 வேலுப்பிள்ளை செல்லத்துரை
மா/ 2473 ஆறுமுகம் சபாபதிப்பிள்ளை
மா/ 2480 திருச்செல்வம் செபஸ்தியாம்பிள்ளை
மா/ 2492 பொன்னம்பலம் திருச்சிற்றம்பலம்
மா/ 2505 இம்மனுவல் சந்திரசேகரா
மா/ 2508 திருமதி திரேசம்மா இம்மானுவல் நட்சத்திரம்
மா/ 2512 சின்னத்தம்பி துரைலிங்கம்
மா/ 2520 திருமதி தங்கம் கந்தஞானியார்
மா/ 2557 கஸ்மீர் அருளாநந்தம்
மா/ 2578 லூயிஸ் ஆசீர்வாதம்
மா/ 2580 திருமதி பவானியம்மா வீரகத்திப்பிள்ளை
மா/ 2643 சபாபதிப்பிள்ளை குமாரசாமி
மா/ 2658 திருமதி மேரிமாகிரெட் சூசைப்பிள்ளை
மா/ 2662 நாகலிங்கம் முருகேசு
மா/ 2685 திருமதி நாகம்மா முத்தன்
மா/ 2692 சந்திரசேகரம்பிள்ளை நடராசா
மா/ 2707 அமிர்தநாதர் பிரகாசநாதர்
மா/ 2711 மடுத்தீன் பாவிலுப்பிள்ளை
மா/ 2713 தோமஸ் பேதுருப்பிள்ளை
மா/ 2732 அம்பலவாணர் இராசரத்தினம்
மா/ 2751 திருமதி சந்திரராணி அம்பலவாணர்
மா/ 2775 வேலுப்பிள்ளை சேனர்திராசா
மா/ 2782 திருமதி திரேசம்மா சூசைப்பிள்ளை
மா/ 2784 திருமதி தெய்வானை நாகமணி
மா/ 2808 திருமதி வள்ளியம்மை வைத்திலிங்கம்
மா/ 2809 முதலி வல்லிபுரம்
மா/ 2815 தாமோதரம்பிள்ளை விசுவலிங்கம்
மா/ 2819 இராமலிங்கம் விசுவநாதர்
மா/ 2833 திருமதி கேட்டி சந்திரசேகரா
மா/ 2882 திருமதி பேணடேற் அன்ரனி
மா/ 2922 திருமதி திரேசம்மா தோமஸ்
மா/ 2927 திருமதி வள்ளியம்மை செல்லத்துரை
மா/ 2929 சுப்பிரமணியம் வையாபுரி
மா/ 2935 திருமதி அன்னப்பிள்ளை கணபதி
மா/ 2977 திருமதி திரேசம்மா மரியதாஸ்
மா/ 3002 சந்தியாப்பிள்ளைமனுவேற்பிள்ளை யோசைவ்
மா/ 3004 செபஸ்தியாம்பிள்ளை சந்தியாப்பிள்ளை
மா/ 3006 திருமதி கமலநாயகி துரைராசா
மா/ 3009 திருமதி லோறன்சியா சூசைப்பிள்ளை
மா/ 3037 பெனடிற் அல்போன்ஸ்
மா/ 3038 நாகலிங்கம் தியாகராசா
மா/ 3042 திருமதி லூர்த்தம்மா அந்திரேஸ்பிள்ளை
மா/ 3052 தானியல் அந்தோனிப்பிள்ளை
மா/ 3063 திருமதி திரேசம்மா அருளப்பு
மா/ 3077 கந்தையா நடராசா
மா/ 3082 திருமதி செபஸ்ரியானா அந்தோனிமுத்து
மா/ 3084 செபமாலைசிறிஸ் துரைசிங்கம்
மா/ 3089 செல்வி கிளாறம்மா அந்திரேசுப்பிள்ளை
மா/ 3093 திருமதி இரத்தினம் இரத்தினம்
மா/ 3094 திருமதி இராசமணி செல்லத்துரை
மா/ 3110 சின்னத்தம்பி வயித்திலிங்கம்
மா/ 3112 தம்பையா கதிரவேல்
மா/ 3116 ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை
மா/ 3117 திருமதி திரேசம்மா யேசுதாசன்
மா/ 3126 சின்னத்தம்பி தங்கராசா
மா/ 3129 ஆபிரகாம்பிள்ளை சாள்ஸ்
மா/ 3132 ஆறுமுகம் அழகேந்திரம்
மா/ 3161 ஆறுமுகம் தம்பித்துரை
மா/ 3187 திருமதி கிறாசியா அமிர்தநாதர்
மா/ 3194 திருமதி அன்னம்மா வஸ்தியாம்பிள்ளை
மா/ 3196 மரியாம்பிள்ளை மரியதாஸ்
மா/ 3199 திருமதி விக்ரோறியா அந்தோனிப்பிள்ளை
மா/ 3204 திருமதி பரிமளம் சோமசுந்தரம்
மா/ 3209 திருமதி மேரிகிளாரா பிறான்சீஸ்
மா/ 3212 மனுவேற்பிள்ளை ஞானப்பிரகாசம்
மா/ 3213 திருமதி தவமணி தாமோதரம்பிள்ளை
மா/ 3215 திருமதி கனகம்மா மயில்வாகனம்
மா/ 3235 திருமதி ஜீவமலர் இராசையா
மா/ 3248 திருமதி நட்சேத்திரம் சுவாம்பிள்ளை
மா/ 3249 திருமதி மரியப்பிள்ளை ஞானப்பிரகாசம்
மா/ 3252 மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
மா/ 3256 வைரமுத்து திருநாவுக்கரசு
மா/ 3266 அந்தோனிப்பிள்ளை இம்மனுவேல்
மா/ 3272 நீக்கிலாப்பிள்ளை சுவாம்பிள்ளை
மா/ 3281 சூசைப்பிள்ளை மேரியோசேவ்
மா/ 3282 சுவாம்பிள்ளை மனுவேல்பிள்ளை
மா/ 3283 வேலுப்பிள்ளை பத்மநாதன்
மா/ 3285 திருமதி நட்சேஸ்திரம் சூசைப்பிள்ளை
மா/ 3287 திருமதி திரேசம்மா பிலிப்புபிலேந்திரன்
மா/ 3289 அவிறாம்பிள்ளை சவரிமுத்து
மா/ 3293 ஜேக்கப் இஸ்ரனிஸ்லாஸ்
மா/ 3295 சந்தியா அருளானந்தம்
மா/ 3298 திருமதி தங்கச்சிஅம்மா கந்தையா
மா/ 3307 செபஸ்தியம்பிள்ளை அல்பிறேட்
மா/ 3311 வஸ்தியாம்பிள்ளை அன்ரனிப்பிள்ளை
மா/ 3315 திருமதி மரியம்மா இம்மானுவேல்
மா/ 3327 லோறன்ஸ் மரியதாசன்
மா/ 3334 பிரான்சீஸ் பாக்கியநாதர்
மா/ 3336 திருமதி லூர்துமேரி சேவியர் பெர்ணாண்டோ
மா/ 3340 திருமதி திரேசம்மா ஞானப்பிரகாசம்
மா/ 3342 காசிப்பிள்ளை கந்தையா
மா/ 3343 திருமதி லூட்ஸ் மேரியோசேவ்
மா/ 3349 திருமதி றோசலீன் பிரான்சீஸ் இராசநாயகம்
மா/ 3357 மரியநாயகம் செல்லையா
மா/ 3369 பிலிப்ஸ் அன்று
மா/ 3375 திருமதி இரத்தினம்மா சீமாம்பிள்ளை
மா/ 3387 அருளப்பு அல்பிறெட்
மா/ 3399 திருமதி ஈஸ்வரி முத்தையா
மா/ 3419 பயஸ்இராஜகாரியர் நிக்கிளஸ்
மா/ 3475 திருமதி சிவபாக்கியரத்தினம் சுப்பிரமணியம்
மா/ 3481 சிவசிதம்பரம் சிவராசா
மா/ 3482 முருகர் கந்தையா
மா/ 3484 சிங்கராசாபயஸ் செல்வநாயகம்
மா/ 3485 கனகசபாபதி விக்கிரமசிங்கம்
மா/ 3487 பொன்னையா இராமலிங்கம்
மா/ 3496 திருமதி தனபாக்கியவதி செல்வமாணிக்கம்
மா/ 3498 நாகமுத்துதம்பு நாகராஜா
மா/ 3499 திருமதி திரேசம்மா யோசேப்பு
மா/ 3501 நாகலிங்கம் சந்திரலிங்கம்
மா/ 3505 சிவக்கொழுந்து சச்சிதானந்தன்
மா/ 3529 ஞானப்பிரகாசம் திருமேனி
மா/ 3538 துரை தனபாலசிங்கம்
மா/ 3539 திருமதி சரஸ்வதி பாலசிங்கம்
மா/ 3541 திருமதி திரேசம்மா மேரியோசவ்
மா/ 3548 திருமதி சிவமணி தேவராஜா
மா/ 3550 திருமதி சரஸ்வதி கந்தையா
மா/ 3553 கந்தையா நாகராசா
மா/ 3559 சுப்பையா பாலசிங்கம்
மா/ 3561 திருமதி நேசம்மா இராசதுரை
மா/ 3564 இராஜசுந்தரம்லைமன் யோகரத்தினம்லைமன்
மா/ 3568 திருமதி இரத்தினேஸ்வரி கையிலைலிங்கம்
மா/ 3576 சுப்பையா வெற்றிவேலு
மா/ 3579 திருமதி நல்லம்மா கனகசபை
மா/ 3584 திருமதி அதிசயம் அருமைநாயகம்
மா/ 3589 செல்லர் சுப்பிரமணியம்
மா/ 3592 திருமதி பவளமல்லிகை திருச்செல்வம்
மா/ 3606 கந்தையா இராசதுரை
மா/ 3611 கணபதி சிவனடியான்
மா/ 3629 திருமதி சொர்ணாம்பிகை இரகுநாதன்
மா/ 3638 திருமதி இராஜேஸ்வரி கணேசமூர்த்தி
மா/ 3650 வைத்திலிங்கம் குமாரசாமி
மா/ 3658 திருமதி இராயேஸ்வரி அற்புதரத்தினம்
மா/ 3661 இராசையா சிறிபாலசுப்பிரமணியம்
மா/ 3690 திருமதி ஜெயதேவி கிருஷ்ணசாமி
மா/ 3710 வில்லியம்சீனித்தம்பி தங்கராஜா
மா/ 3719 பொன்னுசாமி மகாதேவன்
மா/ 3722 வல்லிபுரம் மார்க்கண்டு
மா/ 3726 திருமதி மேரிதிரேசா அல்போன்சஸ்
மா/ 3730 திருமதி அக்கினேசம்மா மரியாம்பிள்ளை
மா/ 3733 சின்னத்தம்பி கந்தையா
மா/ 3736 திருமதி பெர்ணதேத் சூசைதாசன்
மா/ 3766 சூசைப்பிள்ளை செலஸ்ரின்பிள்ளை
மா/ 3777 திருமதி மேரிலூர்து யோண்பிள்ளை
மா/ 3779 மிக்கேல்பிள்ளை ஆசீர்வாதம்
மா/ 3785 திருமதி பூமணி இராசதுரை
மா/ 3798 திருமதி திரேசம்மா தியோகு
மா/ 3800 மனுவேல்பிள்ளைசுவக்கின் செபஸ்தியாமபிள்ளை
மா/ 3801 மனுவேல்பிள்ளை சுவக்கின் செபஸ்தியாமபிள்ளை
மா/ 3813 சூசைப்பிள்ளை மரியநாயகம்
மா/ 3817 திருமதி மேரிதிரேசம்மா அகுஸ்ரீன்பிள்ளை
மா/ 3820 திருமதி ராணி சாமிநாதன்
மா/ 3830 திருமதி றூபி யேசுதாசன்
மா/ 3844 வீரபத்திரர் குமாரசாமி
மா/ 3850 செல்லமுத்து தர்மலிங்கம்
மா/ 3857 அந்திரேஸ்பிள்ளை அமலதாஸன்கெனடி
மா/ 3859 பெஞ்சமின் யெறோம்
மா/ 3873 திருமதி துஷ்யந்தி நரேந்திரன்
மா/ 3899 இராசநாயகம் இரத்தினசிங்கம்
மா/ 3903 சின்னக்குட்டி வீரசிங்கம்
மா/ 3914 திருமதி அன்னப்பிள்ளை காசிப்பிள்ளை
மா/ 3926 யோசை சிங்கராசா
மா/ 3940 திருமதி அன்னபூரணம் பேரம்பலம்
மா/ 3946 சவரிமுத்து அருளானந்தம்
மா/ 3947 திருமதி மீனாட்சி நாகமணி
மா/ 3964 திருமதி லேனம் பாவிலு
மா/ 3976 இன்னாசி சுவாம்
மா/ 3980 திருமதி புஸ்பநாயகி குணரத்தினம்
மா/ 3981 விசுவநாதர் சண்முகநாதன்
மா/ 3987 திருமதி இரத்தினவடிவு நாகமணி
மா/ 3992 சரவணமுத்து வீரசிங்கம்
மா/ 4014 சங்கரப்பிள்ளை இராமசாமி
மா/ 4018 நிக்கலாப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை ஜெயராஜா
மா/ 4037 சேவியர் பத்திநாதர்
மா/ 4046 செபஸ்ரியாம்பிள்ளை ஞானானந்தன்
மா/ 4050 வயிரமுத்து வயித்திலிங்கம்
மா/ 4068 திருமதி தவமணி வைத்திலிங்கம்
மா/ 4100 திருமதி குணலட்சுமி சாதுசிகாமணி
மா/ 4123 செ.இராசரத்தினம் சிவப்பிரகாசம்
மா/ 4126 திருமதி நகுலேஸ்வரி கனகசுந்தரம்
மா/ 4128 திருமதி இராசமலர் நாகலிங்கம்
மா/ 4129 திரு. பொன்னர் கனகசபை
மா/ 4130 திருமதி அருளம்மா துரைசிங்கம்
மா/ 4143 வினாசித்தம்பி சிவலிங்கம்
மா/ 4150 திருமதி அன்னம்மா அச்சேந்திரம்
மா/ 4163 சின்னத்துரை சேதுராசா
மா/ 4185 நாகலிங்கம் சண்முகநாதன்
மா/ 4186 பொன்னன் நாகன்
மா/ 4193 திருமதி அந்தோனியாம்பிள்ளை லூயிஸ்
மா/ 4197 திருமதி நாகேஸ்வரி கெங்காதரன்
மா/ 4200 வேலுப்பிள்ளை கந்தசாமி
மா/ 4201 கந்தையா கனகசபை
மா/ 4210 திருமதி பாக்கியம் கந்தையா
மா/ 4213 திருமதி நாகேஸ்வரி செல்லத்துரை
மா/ 4232 கிருஷ்ணர் தெய்வேந்திரம்
மா/ 4234 திருமதி ஜெயமணி செல்லையா
மா/ 4245 சின்னையா இராசு
மா/ 4256 துரைராஜா ரவிச்சந்திரன்
மா/ 4263 அந்தோனிப்பிள்ளைசவரிமுத்து லோறன்ஸ்
மா/ 4283 தம்பையா பசுபதி
மா/ 4287 செல்வி கோப்பெருந்தேவி அருளானந்தம்
மா/ 4292 திருமதி பறுவதாம்பாள் பொன்னுத்துரை
மா/ 4306 திருமதி தவமணி கென்றி
மா/ 4325 திருமதி நாகரத்தினம் சுப்பிரமணியம்
மா/ 4347 சின்னர் அம்பலம்
மா/ 4359 சின்னத்தம்பி தாமோதரம்
மா/ 4363 ஞானமுத்து லோறன்ஸ்
மா/ 4366 முருகன் ஆறுமுகம்
மா/ 4379 வல்லிபுரம் மார்க்கண்டு
மா/ 4380 வல்லிபுரம் மார்க்கண்டு
மா/ 4385 செல்லையா அமுதலிங்கம்
மா/ 4391 திருமதி இராஜதேவி மயில்வாகனம்
மா/ 4421 முத்தையா தங்கவேல்
மா/ 4432 சிவகுரு துரைராஜா
மா/ 4444 பென்சமின் அன்ரன்பெர்னான்டோ
மா/ 4454 வல்லிபுரம் நடராசா
மா/ 4464 வில்லியம் ஜோய்ஜெயராஜாமேதர்
மா/ 4497 திருமதி அல்வினம்மா அந்தோனிப்பிள்ளை
மா/ 4514 நாகன் மாணிக்கம்
மா/ 4516 பெனான்டோ அந்தோனிப்பிள்ளை
மா/ 4525 செபஸ்தியாம்பிள்ளை இமானுவல்
மா/ 4541 திருமதி கண்மணி நாகையா
மா/ 4545 அமிர்தலிங்கம் துரைசிங்கம்
மா/ 4549 திருமதி இராசம்மா நவநீதம்
மா/ 4563 சின்னத்தம்பி சோமசுந்தரம்
மா/ 4575 திருமதி புஷ்பம் ரட்ணம்
மா/ 4581 நல்லையா நவரட்ணம்
மா/ 4583 சந்தியா இராசேந்திரம்
மா/ 4600 திருமதி தங்கம்மா பூபாலன்
மா/ 4602 வேலுப்பிள்ளை சிவகுரு
மா/ 4609 தம்பிப்பிள்ளை சோமசுந்தரம்
மா/ 4617 திருமதி சிவக்கொழுந்து மாரிமுத்து
மா/ 4621 சரவணமுத்து கந்தசாமி
மா/ 4632 மேரிப்பிள்ளை மரியாம்பிள்ளை
மா/ 4633 திருமதி அக்கினேஸ் சந்தியாப்பிள்ளை
மா/ 4645 பிலிப்பு சூசை
மா/ 4653 மாரிமுத்து கனகரத்தினம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

சிவமயம்

# இணுவில் சிவகாமி அம்ப

## திறப்புவிழா இன்று (19-08-2



### அருள் ஆசிச் செய்தி

அன்புள்ளவர்களுக்கு, இணுவில் பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் சிவகாமி அம்பிகையின் அருளால் ஆலய சூழலில் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபம் திறந்துவைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இசையும் கல்வியும் வளர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கும் இணுவில் பிரதேசம் பல ஆலயங்களையும் பல மண்டபங்களையும் கொண்ட ஊராகும். சித்தர்கள், ஞானிகள், கற்றுணர்ந்த வல்லுநர்கள், பண்டிதர்கள், புலவர்கள் எனப் பலர் வாழ்ந்து நல்ல பணிகளை ஆற்றிய பெருமைக்குரிய ஊராகும். இங்கு அறப்பணியின் அடையாளமாக அமைக்கப்பட்டிருக்கும் இம்மண்டபம், பொதுப்பணிகளுக்கும் இசை, கலை என் பவற்றை மேலடையச்செய்து வளம்பெறச் செய்வதற்கும் பயன்படவுள்ளது. இது அனைவரையும் மகிழ்ச்சி யடையவைக்கிறது. இப்பணியைச் செய்யும் கட்டடக் கலைஞர்களையும் நிதிவழங்கிய வர்களையும் இணுவில் வாழ் மக்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். எல்லோரையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
இரண்டாவது குரு மஹாசந்நிதானம்.

### ஆதீன கர்த்தாவின் வாழ்த்து

இலங்கையின் சிரசான யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த இணுவையம்பதியின் கிழக்குத் திக்கிலே அருள் பாலித்துக்கொண்டிருக்கும் எமது சிவகாமியம்மையின் திருக்கோயிலில் ஒரு திருமண மண்டபம் இல்லாது இருந்ததனால் அதை நிவர்த்திசெய்யும்பொருட்டுத் தற்போது ஓர்அலங்காரமான திருமண மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபம் மேலும் வளர்ச்சியடைய அம்பிகையை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**மு.சிவலிங்கம்**
(இணுவில் சிவகாமி அம்மன் கோயில் ஆதீனகர்த்தாவும், திருமணமண்டபத் தலைவரும்).

### நலம்தரும் மண்டபம்

நவீன நாகரிகத்தின் துரித வளர்ச்சி கிராமங்களில் ஏற்படுத்திய பாதிப்பினால் பல்வேறு நெருக்கடிக்குள்ளாகி விட்ட கிராமத்தவர்கள் தமது குடும்பத்திலுள்ளவர்களது திருமண வைபவங்களை ஆலயங்களில் நடத்தி வந்தனர். எமது பாரம்பரிய சமயச் சடங்குகளுடன் ஒன்றிய திருமண நிகழ்வுகள் கூடக் கொஞ்சங் கொஞ்சமாக நாகரிகத்தின் பாதிப்புக்குள்ளாகி ஆலயங்களின் புனிதத்தன்மையையும் கேள்விக் குறிக்குள்ளாக்கி வருகின்றது. இப்படியான நெருக்கடிகளைத் தவிர்க்கும்பொருட்டு ஆலயச் சூழல்களில் திருமண மண்டபங்களை அமைத்துத் திருமணங்களை நடத்தும் நிகழ்வுகளை எங்கும் காணமுடிகின்றது.

இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயச் சூழலில் புதிதாக அமைந்துள்ள இந்தத் திருமண மண்டபம் நவீன பாணியில் மிகப்பிரமாண்டமான நலந்தரும் மண்டபமாக அமைந்துள்ளது. இணுவில் மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்குடன் பாரபட்சமற்ற சேவையை வழங்கவேண்டுமென்பதற்காகவே இம்மண்டபம் கலையம்சம் பொருந்திய எழிலுடன் அமையப்பெற்றுள்ளது.

இன்று திறப்புவிழா. திங்கள் முதல் திருமண விழாக்கள் நடைபெறவிருக்கின்றன. சிவகாமி அம்பாளின் நல்லாசியுடன் இம்மண்டபத்தில் நிகழ்வுறும் திருமணத் தம்பதிகள் சகல சௌபாக்கியங்களும் பெற்று இனிது வாழ எல்லாம் வல்ல நவசக்தி நாயகி அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

**கே.எஸ்.ஆனந்தன்**
(பிரபல எழுத்தாளர்)


### பொருளாளரின் வாழ்த்துச்செய்தி

இலங்கையின் சிரசான யாழ்ப்பாணத்தின் புகழ்பூத்த கிராமமான இணுவையம்பதியிலே பிரமாண்டமான ஒரு திருமண மண்டபம் உதயமாகிவிட்டது. அதிகப்படியான கோயில்களையும் அறிஞர்களையும், கலைஞர் களையும், சைவங்காக்கும் உத்தமர்களையும் கொண்டுள்ள சிறப்பு இணுவில் கிராமத்திற்கு உண்டு. சிவகாமி அம்மன் கோயிலுக்கு திருமண மண்டபமில்லாமை ஒரு பெருங்குறையாகவே இருந்து வந்தது. அக்குறையை நிவர்த்திக்கவேண்டும் என்ற எண்ணமே இத்திருமண மண்டப உருவாக்கமாகும்.

இம்மண்டப உருவாக்கத்திற்கு உதவிய ஒவ்வொருவரும் இந்நாளில் நன்றியுடன் போற்றத்தக்கவர்கள். இத்திருமண மண்டபப் பணிகள் மேலும் விரிவாக்கமடைந்து சிறப்படைய எல்லாம்வல்ல சிவகாமி அம்மனின் அருள்வேண்டியமைகிறேன்.

**த.கந்தசாமி J.P.**
பொருளாளர், திருமணமண்டபம்.

**கட்டட வடிவமைப்பு: மா.ரகுபதி**
**கட்டட நிர்மாணம்: செ.சிவபாதம்**
**மண்டப மேல்வேலை: ச.கண்ணதாசன்**
**சிற்பம்: இ.இளங்கோவன்**
திருவாரூர் மாவட்டம், தென் இந்தியா.



### நாடாளுமன்ற உறுப்பினரின்



யாழ்ப்பாணம், இணுவில் திருத்தலங்கள் நிறைந்த
இத்திருப்பதி மன்னர்களின் அறக்கொடைகளினா
வளர்ந்து வளம்பெற்று திருவூர் சிறப்புற்றது.

இன்று மன்னராட்சியில்லை; மக்களாட்சி மாண்புறு
மீட்கவும், சிங்கள பௌத்த பேரினவாதத்தின் அ
நடைபெறும் காலமாயிருந்தபொழுதும், இணுவில்
ஆட்சியில் மக்கள் தொண்டு வளம்பெற்றதுபோல
பெறுமதியில் திருமண மண்டபம் நிறுவியுள்ளனர்.

இம்மக்கள் கொள்கைப் பிடிப்பும் இலட்சியப் ப
தேவைக்கேற்ப பொதுமையுணர்வுடன் இம்மாபெரு
பாரம்பரியத்துக்கும் பெருமைசேர்த்துள்ளனர்.

தமிழர் பண்பாட்டினை எடுத்துக் காட்டும் இப்பெரும் பணியானது உலக ந
இதுபோல் இன்னும் பல பணிகள் நடக்க என் இதயம் நிறைந்த
நிறைவுபெறுகின்றேன்.

### பயன்மிக்க முன்

சைவசமயத்தின் பாரம்பரியங்களை சிதறவிடாமல் சிறப்புடன் பேணிவரு
கெல்லாம் அருள்பாலித்து வரும் அன்னை சிவகாமி அம்மன். அவள் ஆல
சிவகாமி அம்பாள் திருமண மண்டபம். எமது கலாசார மரபுகளைப் பேண
எதிர்காலத்தில் அரிய பங்களிப்பை வழங்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

கிராமியச் சாயல் சேர் நகரமாக விளங்கும் இணுவில் பிரதேசத்தில் இத்த
அறங்காவலர்கள், இவ்வரிய பணிக்கு அள்ளியீந்த வள்ளல்கள் மற்றும்
அனைவருமே பாராட்டப்படவேண்டியவர்கள். இவர்கள் அனைவருக்கும்

**பிரதேச செயலகம், உடுவில்.**

### வாழ்த்து

இணுவில் சிவகாமி அம்மனின் திருவருளால் எனது பிரிவில் சிவகாமி
அம்மன் திருமண மண்டபம் இன்று திறந்துவைக்கப்பட்டதைப் பார்த்து மி
உதவி வழங்கிய அனைவருக்கும் அம்மன் அருள் கிடைக்கவும் மண்டப

◆◆◆◆ விழாச் சிறப்புற வா


நல்லூர் பல நோ.கூ.சங்கம்
திருநெல்வேலி.

பெசன் கவுஸ்
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சாந்தி புடவை அகம்
நவீனசந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

அம்பா
பல்பொருள்
இல.176, காங்கேச
யாழ்ப்பாண

நாதன் சகோதரர்கள்
காங்கேசன்துறை வீதி, இணுவில்.

ச.கண்ணதாசன் தச்சுத்தொழிற்சாலை
மஞ்சத்தடி, இணுவில்.

அபிராமி பெசன் கவுஸ்
No.5, K.K.S. Road, Chunnakam.

Vithus
Fancy H
No.3, K.K.S. Road

மையம்

# ம்பாள் திருமண மண்டபம்

# 8-2005) வெள்ளிக்கிழமை





## பிரதம சிவாச்சாரியாரின் ஆசிச் செய்தி

இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத் திருவீதியில் அழகுமிகு திருமண மண்டபத் திறப்புவிழா இன்று (19.08.2005) வெள்ளிக்கிழமை நடைபெறுவதையிட்டு உவகையடைகின்றேன். இத்திருமண மண்டபத்தைச் சிறப்பாக உருவாக்குவதற்கு அயராது உழைத்த நிர்வாகத்தினருக்கும் இவ்வூர் மக்களுக்கும் அன்னையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசிகூறுகின்றேன்.

*'சர்வே ஜனா சுகினோ பவந்து'*
*'எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க'.*

**சா.சோமசபேசக்குருக்கள்.**

## செஞ்சொற்செல்வரின் வாழ்த்துரை



ஈழத்திருநாட்டில் சிவநெறி காத்த செம்மண் திருப்பூமி இணுவில். இத்திருவூர் மக்களின் குலதெய்வங்களில் தாய்த்தெய்வமாக விளங்குபவள் அன்னை சிவகாமி. பலநூறு அற்புத அருள் வரலாறு கொண்ட இணுவில் சிவகாமி அம்மன் கோயில் தமிழ்வேந்தர்கால வரலாறுகொண்ட திருக்கோயில். சிறைமீளப் பாமாலை பாடிப் புகழ்பெற்ற இணுவில் சின்னத்தம்பிப் புலவர் சரித்திரம் கூறும் உன்னதகோயில். பிடியரிசி எடுத்து உயர் இராஜகோபுரம் கட்டிய மூதாட்டி சாத்திரம்மாவின் அருட்பணியை எடுத்துரைக்கும் அழகுக்கோயில். இத்திருக்கோயில் வீதியில் அன்பர்களின் காணிக்கையில் அடியவர்களால் 'சிவகாமி அம்பாள் திருமண மண்டபம்' கட்டி முடிக்கப்பெற்று திறப்புவிழா நடைபெறுவது குறித்து மிகுந்த ஆனந்தமடைகின்றேன்.

இம்முயற்சியில் ஈடுபட்ட திருத்தொண்டர்களை வாழ்த்துகிறேன். திருமண மண்டபம் இல்லற நற்காரியங்களோடு பல்வேறு அறப்பணிகளை நிறைவாக்கும் அறச்சாலையாக மிளிரவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். கலைமலிந்த இணுவைத் திருவூரில் சிறந்த கலைஞர்களை உருவாக்கும் கலைக் கோயிலாகவும் இத்திருமண மண்டபம் அமையவேண்டி சீர்வளர் சிவகாமி அன்னையின் அருளால் சூரியர் சந்திரர் உள்ளவரை சிவகாமி அம்பாள் திருமண மண்டபம் என்றும் நிலைபெற்றுச் சிறக்க வாழ்த்தி அமைகிறேன்.

**ஆறு.திருமுருகன்**

## ப்பினரின் வாழ்த்துச் செய்தி

லங்கள் நிறைந்த திருப்பதி ஆகும். யாழ்ப்பாண அரசு இருந்த காலத்திலும் கொடைகளினாலும் திருக்கோயில்கள் அமைந்து சைவமும் தமிழும் புற்றது.

ளாட்சி மாண்புறும் காலம். ஆனால், ஐரோப்பியரிடம் இழந்த சுதந்திரத்தை னவாதத்தின் அடக்குமுறையிலிருந்து விடுதலை பெறவும் போராட்டம் தும், இணுவில்திருப்பதி மக்களும், புலம்பெயர்ந்த மக்களும் மன்னர் ம்பெற்றதுபோல சிவகாமி அம்மன் கோயில் திருத்தலத்தில் பல லட்சம் றுவியுள்ளனர்.

ம் இலட்சியப் பற்றும் மிக்கவர்கள். அவ்வடித்தளத்திலிருந்து மக்கள் டன் இம்மாபெரும் பணியை நிறைவுசெய்து தமிழ்மண்ணுக்கும் தமிழர் துள்ளனர்.

யானது உலக நாகரிகத்தில் உயர்ந்த இடத்தை எடுத்துக் காட்டிநிற்கின்றது. பம் நிறைந்த வுாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து

**மாவை.சேனாதிராசா நாடாளுமன்ற உறுப்பினர்.**

## நல்லூர் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் சீரிணுவைத் திருவூரிலே சிவகாமி அம்மன் ஆலயச்சூழலில் அமைக்கப்பட்டுள்ள திருமண மண்டபத்தின் எழில்மிகு தோற்றங்கண்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். கலைஞர்களும் கற்றோரும் அதிகம் வாழும் இணுவில் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த மண்டபம் காலத்தின் தேவையாகும். ஆலயத்திற்கு வெளியே திருமணம் நடைபெறுவதற்கு வசதியாக இம்மண்டபம் அமைக்கும் கைங்கரியத்தை நிறைவேற்றுகின்ற இணுவில் மக்கள் அனைவரையும் இத்தருணத்தில் வாழ்த்தி வணங்குகின்றேன்.

**திருமதி சு.தெய்வேந்திரம்**
பிரதேச செயலர், நல்லூர்.

## க்க முன்னெடுப்பு

புடன் பேணிவரும் சிற்றூர் இணுவில். இங்கு எழுந்தருளி அடியவர்களுக் ன். அவள் ஆலயத்தின் அருகில் அமைக்கப்பெற்று அழகுறத் திகழ்கின்றது ரபுகளைப் பேணுவதற்கும் அதன் புகழை வளர்ப்பதற்கும் இம்மண்டபம் மேதுமில்லை.

தேசத்தில் இத்தகைய மண்டபத்தின் அவசியத்தை உணர்ந்து செயற்பட்ட ால்கள் மற்றும் பல்வேறு பணிகளையாற்றிப் பங்களிப்புச் செய்தவர்கள் னைவருக்கும் நாட்டுக்கும் அம்மன் அருள்பொலிவதாகுக.

**சி.திருவாகரன்**
பிரதேச செயலாளர், உடுவில்.

## செயலாளரின் செய்தி



இலங்கைத் திருநாட்டின் வடக்கே அமைந்திருக்கும் யாழ்ப்பாணத்தில் தமிழும் சைவமும் தனக்கே உரித்தாக்கிய இணுவையம்பதியிலே ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில், செகராசசேகரப் பிள்ளையார் கோயில், இணுவைக் கந்தன் கோயில், மஞ்சத்தடி முருகன் கோயில், காரைக்கால் சிவன் கோயில் ஆகியன அமையப்பெற்று இவற்றிற்கு நடுவிலே சிதம்பர வளவில் அருள்சுரக்கும் அன்னை சிவகாமி அம்மன் பெருங்கோயில் கொண்டு வீற்றிருக்கின்றாள்.

சைவமக்களாகிய இந்துக்களால் சிறப்பாகப் போற்றப்படும் நூல் கந்தபுராணம். இக்கந்தபுராணத்தில் கூறப்படும் திருமணத்தில் எம்பெருமானுக்கும் எம்பெருமாட்டிக்கும் திருமணவிழாவுக்காக இமயமலைச் சாரலிலே தேவதச்சனால் (மயன்) திருமணமண்டபம் அமைக்கப்பெற்று திருமணம் நடைபெற்றது. அதேபோலவே சூரனை வதம்செய்து வெற்றிபெற்ற கந்தவேள் பெருமானுக்கும் தெய்வேந்திரன் மகள் தெய்வயானை அம்மனுக்கும் திருப்பரங்குன்றத்திலே தேவதச்சனால் திருமணமண்டபம் அமைக்கப்பெற்று திருமணம் நடைபெற்றது.

இணுவில் மக்களால் சிவகாமி அம்மனை வேண்டி அம்மன்கோயிலுக்குத் தெற்கே 16-04-2005 வெள்ளிக்கிழமை அடிக்கல் நடப்பெற்று 110 அடிநீளமும் 42 அடி அகலமும் கொண்ட காலத்திற்கேற்ற மண்டபமாக யாழ்ப்பாணத்திலேயே பிரமாண்டமானதாகவும் அழகானதாகவும் காட்சியளிக்கின்றது. இம்மண்டபம் இன்று 19.08.2005 வெள்ளிக்கிழமை திறப்புவிழாக் காண்கின்றது.

இயற்கை அழகும் கட்டடக்கலை அழகும் சிற்பக்கலை அழகும் சேர்ந்து தேவதச்சனால் (மயன்) அமைக்கப்பெற்ற மண்டபம் போல எல்லோரும் வியக்கத்தக்கதாக இம்மண்டபம் காட்சியளிக்கின்றது.

இம்மண்டபம் திருமண நிகழ்ச்சிகளுக்கும், அரங்கேற்ற நிகழ்ச்சிகளுக்கும், தெய்வீக இசை நிகழ்ச்சிகளுக்கும், பூப்புப்புனித நீராட்டு விழாகளுக்கும் இந்துசமய கலை கலாசார நிகழ்ச்சிகளும் சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்ற இடமாகக் காட்சியளிக்கின்றது.

இம்மண்டபம் திறம்பட அமைவதற்கு நிதியுதவி வழங்கிய பொதுமக்களுக்கும் கட்டடம் நல்ல முறையில் அமைத்த கட்டட ஒப்பந்தகாரர்களுக்கும் எல்லாம்வல்ல அம்பிகையின் அருள்வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**க.முருகையா** (கிராம அலுவலர்)
செயலாளர், திருமண மண்டபம்.

## வாழ்த்து

ரிவில் சிவகாமி அம்மன் கோயிலுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சிவகாமி தைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இம்மண்டபம் அமைக்க கவும் மண்டபம் மேலும் சிறக்கவும் வாழ்த்திப் பிரார்த்திக்கின்றேன்.

**தி.புரந்தரதாசன்**
கிராம அலுவலர் தரம் I.

## ப்புற வாழ்த்துவோர் ◆◆◆◆


அம்பாள் பொருள் வாணிபம்
176, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

வளர்மதி புடைவை அகம்
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சிவசம்பு களஞ்சியம்
இல.3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

கனகதயாபரன் பான்சிபலஸ்
இல.64, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Vithusan
ancy House
K.K.S. Road, Chunnakam.

டைமன் றேடர்ஸ்
சுன்னாகம்.
(மொத்த விற்பனை நிலையம்)

அ.தங்கராசா அன் சன்
மஞ்சத்தடி, இணுவில்
(மொத்த விற்பனை நிலையம்).

விற்பனை நிலையம்
N.S.Pushparasah
Shinninngstar
Sales Centre
10, Dr.Subramaniam Road, Chunnakam.

(C/44519)(50-16-18)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மா/ 4670 செல்வி மேரிலுமினா ஜோர்ச்
மா/ 4677 கந்தையா தம்பு
மா/ 4678 வேலன் சிவகுரு
மா/ 4686 திருமதி சிவபாக்கியம் கனகசபை
மா/ 4689 திருமதி லூர்த்தம்மா டோமினிக்நீக்கிலாப்பிளளை
மா/ 4713 செல்லர் வீரய்யா
மா/ 4730 திருமதி நவநாயகி தம்பிராஜா
மா/ 4744 கந்தையா சண்முகானந்தன்
மா/ 4745 முத்தன் ஐயன்
மா/ 4747 திருமதி இராசம்மா அப்புத்துரை
மா/ 4752 திருமதி இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை
மா/ 4754 முத்தையா இராசரத்தினம்
மா/ 4759 திருமதி வரதலட்சுமி வேலுப்பிள்ளை
மா/ 4769 திருமதி கணேசம்மா சின்னத்துரை
மா/ 4778 நமசிவாயம் குமாரசாமி
மா/ 4795 சின்னத்தம்பி ஞானசுந்தரம்
மா/ 4797 திருமதி மனோன்மணி நாகலிங்கம்
மா/ 4799 கதிரன் முருகன்
மா/ 4807 ஆறுமுகம் கந்தசாமி
மா/ 4812 சின்னத்துரை ஆறுமுகம்
மா/ 4818 திருமதி சரஸ்வதி தம்பிராசா
மா/ 4843 திருமதி ராணி செல்வநாயகம்
மா/ 4855 திருமதி வேதநாயகி அப்புத்துரை
மா/ 4868 மார்க்கண்டு சீவரத்தினம்
மா/ 4875 பண்டாரம் கந்தையா
மா/ 4880 ஆரோக்கியம் பூகோணப்பா
மா/ 4890 அந்தோனி பாக்கியநாதர்
மா/ 4891 தம்பிப்பிள்ளை துரைசிங்கம்
மா/ 4893 தம்பிப்பிள்ளை குணரத்தினம்
மா/ 4898 இளையதம்பி இராசரத்தினம்
மா/ 4909 சுப்பர் சின்னத்துரை
மா/ 4911 வஸ்தியாம்பிள்ளை மரியநாயகம்
மா/ 4925 சிவகுருநாதன் சிவசுப்பிரமணியம்
மா/ 4928 கந்தர் கிருஷ்ணன்
மா/ 4962 திருமதி ஸ்ரெலா சபரிமுத்து
மா/ 4965 கணபதிப்பிள்ளை சின்னத்துரை
மா/ 4966 சின்னத்தம்பி முத்துத்தம்பி
மா/ 4967 சின்னத்தம்பி இராசதுரை
மா/ 4985 குருசுப்பிள்ளை அருளப்பு
மா/ 4986 அருணாசலம் வேலுப்பிள்ளை
மா/ 4995 நாகமுத்து சின்னத்துரை
மா/ 5007 திருமதி இரத்தினம் சபாரெத்தினம்
மா/ 5023 திருமதி வள்ளியம்மை பாலசுப்பிரமணியம்
மா/ 5031 பாவிலு சஞ்சோன்
மா/ 5035 முத்துத்தம்பி கைலாசபிள்ளை
மா/ 5042 திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்
மா/ 5043 திருமதி இராசமணி முருகையா
மா/ 5059 மார்சலின்பிள்ளை பாக்கியநாதன்
மா/ 5064 திருமதி அன்னம்மா சலமன்
மா/ 5069 கனகரத்தினம் பண்டிதவரதன்
மா/ 5076 திருமதி இளையபிள்ளை கனகரத்தினம்
மா/ 5077 சின்னத்தம்பி சாம்பசிவம்
மா/ 5079 திருமதி இராசம்மா கணேஸ்வரன்
மா/ 5085 திருமதி சிவகாமிப்பிள்ளை நடராசா
மா/ 5090 முத்துராசா ஜெயரட்ணம்
மா/ 5120 திருமதி கிறேஸ் அருட்பிரகாசம்
மா/ 5122 திருமதி தங்கம்மா முருகேசு
மா/ 5128 சுப்பையா வடிவேலு
மா/ 5152 திருமதி கணேசம்மா கந்தசாமி
மா/ 5156 கன்னையா செல்வரத்தினம்
மா/ 5159 திருமதி பாக்கியம் சின்னத்துரை
மா/ 5161 கணவதிப்பிள்ளை கந்தையா
மா/ 5190 கதிரவேலு சுப்பையா
மா/ 5195 திருமதி வள்ளிநாயகி இராசா
மா/ 5210 செல்வி அருளம்மா மார்க்
மா/ 5212 தம்பிமுத்து சின்னையா
மா/ 5219 திருமதி அன்னம்மா சின்னத்துரை
மா/ 5225 நமசிவாயம் இரத்தினம்
மா/ 5235 திருமதி பராசக்தி திருநாவுக்கரசு
மா/ 5241 திருமதி சிவபாக்கியம் நடேசன்
மா/ 5242 இராமலிங்கம் கந்தையா
மா/ 5245 சின்னப்பொடி முருகேசு
மா/ 5256 சின்னத்துரை பாலசிங்கம்
மா/ 5271 முதலித்தம்பி துரைராஜா
மா/ 5273 திருமதி மகேஸ்வரி நாகேந்திரன்
மா/ 5274 திருமதி நாகம்மா மாணிக்கம்
மா/ 5290 திருமதி முத்துமணி செல்லத்துரை
மா/ 5294 திருமதி இராசம்மா வைத்திலிங்கம்
மா/ 5298 கந்தையா செல்வராசா
மா/ 5311 திருமதி சிவபாக்கியம் சிவப்பிரகாசம்
மா/ 5313 திருமதி செல்வநாயகி விஜயராஜா
மா/ 5321 செல்லம்மா கந்தையா
மா/ 5345 திருமதி சௌந்தரநாயகி சிவஞானியார்
மா/ 5346 திருமதி சிவக்கொழுந்து கனகசுந்தரம்
மா/ 5356 வல்லிபுரம் வெற்றிவேல்
மா/ 5367 திருமதி மேரியோசவ்வின் யோசவ்
மா/ 5368 திருமதி சீனிப்பிள்ளை தம்பிப்பிள்ளை
மா/ 5386 திருமதி திரேசம்மா சூசைப்பிள்ளை
மா/ 5389 நாகன் பொன்னுத்துரை
மா/ 5390 சின்னட்டி கந்தையா
மா/ 5395 சவரிமுத்து அடைக்கலமுத்து
மா/ 5403 திருமதி மேரிமாகிறற் யோசேப்பு
மா/ 5410 திருமதி காந்திமதி செல்லத்துரை
மா/ 5420 திருமதி பிலுப்பாச்சி மரியாம்பிள்ளை
மா/ 5424 செல்வி இஸ்ரெலா மருசிலின்
மா/ 5432 சவரிமுத்து மரியாம்பிள்ளை
மா/ 5444 திருமதி மேரிமெக்டலின் யோசேப்
மா/ 5449 யோசேப் யோக்கின்பிள்ளை
மா/ 5452 திருமதி கண்மணி திருச்செல்வம்
மா/ 5458 சூசை அருளப்பு
மா/ 5461 இராமலிங்கம் சின்னராசா
மா/ 5462 திருமதி சிதம்பரம் கந்தசாமி
மா/ 5467 கந்தையா சதானந்தன்
மா/ 5474 மரியான் குருசு
மா/ 5480 திருமதி சரஸ்வதி வீரசிங்கம்
மா/ 5490 அருணாசலம் துரைச்சாமி
மா/ 5500 திருமதி செல்லப்பிள்ளை கனகசபாபதி
மா/ 5503 திருமதி மரியநாயகி பெனடிக்
மா/ 5505 திருமதி இலட்சுமி வன்னித்தம்பி
மா/ 5510 திருமதி செல்வி வல்லி
மா/ 5511 திருமதி அன்னம்மா யோசேப்
மா/ 5525 கந்தையா சிற்றம்பலம்
மா/ 5526 திருமதி பூரணம் செவ்வேத்தி
மா/ 5530 மாணிக்கம் கந்தையா
மா/ 5532 செல்லையா நவரத்தினம்
மா/ 5538 சிற்றம்பலம் விசுவநாதர்
மா/ 5543 விசேந்தி அந்தோனிப்பிள்ளை
மா/ 5544 திருமதி பிலோமினா இராயப்பு
மா/ 5546 தம்பு அருந்தவராசா
மா/ 5556 சூசைப்பிள்ளை சந்தியாப்பிள்ளை
மா/ 5566 சிவசாமி இரத்தினகுமார்
மா/ 5570 வல்லிபுரம் நடராசா
மா/ 5582 அரியக்குட்டி சிவப்பிரகாசம்
மா/ 5598 சிவகுரு துரைராசா
மா/ 5601 திருமதி அன்னலட்சுமி பாலசிங்கம்
மா/ 5604 வயிரவி கந்தையா
மா/ 5608 மனுவேற்பிள்ளை அருளானந்தம்
மா/ 5610 திருமதி சிவபாக்கியம் கந்தையா
மா/ 5611 பிரான்சிஸ் யோசேப்பு
மா/ 5620 திருமதி அருளம்மா சின்னையா
மா/ 5629 திருமதி மேபிள்பற்றிமா செல்லர்
மா/ 5634 நாகமுத்து யோசேப்பு
மா/ 5635 திருமதி இரத்தினபூபதி துரைராசா
மா/ 5667 மாணிக்கவாசகர் சண்முகசுந்தரம்
மா/ 5669 திருமதி மதுரராணி பரமானந்தன்
மா/ 5687 கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
மா/ 5690 மரியான் ஜோசப்
மா/ 5692 சுப்பையா நவரத்தினம்
மா/ 5702 சின்னத்துரை லோகநாதன்
மா/ 5713 சின்னவி கதிரவேல்
மா/ 5720 திருமதி திரேசம்மா அருளானந்தம்
மா/ 5732 திருமதி திலகவதி சுப்பிரமணியம்
மா/ 5733 திருமதி திலகவதி தம்பிப்பிள்ளை
மா/ 5734 திருமதி இரத்தினம் பரமானந்தன்
மா/ 5743 திருமதி அனாஇராசம் சோமசுந்தரம்
மா/ 5746 திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை
மா/ 5751 செபஸ்தியாம்பிள்ளை ஜேம்ஸ்
மா/ 5760 திருமதி மேரிஇமெல்டா சிற்றம்பலம்அன்ரன்ஜோசவ்
மா/ 5777 செய்வேத்தி பிலிப்பு
மா/ 5787 சந்தியா அந்தோனிப்பிள்ளை
மா/ 5797 சந்தியாப்பிள்ளை அலோசியஸ்
மா/ 5834 திருமதி லீலா நவரட்ணம்
மா/ 5845 திருமதி சறோஜா சைமன்
மா/ 5867 மயில்வாகனம் விஜயரட்ணம்
மா/ 5882 மனுவேற்பிள்ளை பெனடிற்
மா/ 5890 திருமதி விறிசித்தம்மா தேவசகாயம்
மா/ 5916 திருமதி வள்ளிப்பிள்ளை கதிரேசு
மா/ 5922 சரவணை செல்லத்துரை
மா/ 5935 கனகு கந்தையா
மா/ 5938 திருமதி இராஜேஸ்வரி சண்முகம்
மா/ 5944 சுந்தரம்பிள்ளை சிவகுருநாதன்
மா/ 5956 கதிர்காமர் நாகரத்தினம்
மா/ 5995 திருமதி பூமணி சின்னையா
மா/ 6011 பொன்னுத்துரை முத்துக்குமாரசாமி
மா/ 6019 திருமதி வள்ளிப்பிள்ளை செல்லன்
மா/ 6020 திருமதி பரிமளம் செல்லையா
மா/ 6029 திருமதி புஸ்பதேவி திருநாவுக்கரசு
மா/ 6033 திருமதி மரியம்மா குருசுமுத்து
மா/ 6044 தங்கமணி வால்டர்செல்வராசா
மா/ 6051 அந்தோனிமுத்து மரியாம்பிள்ளை
மா/ 6052 திருமதி அன்னபூரணம் முருகேசு
மா/ 6062 திருமதி மகேஸ்வரி இரட்ணசபாபதி
மா/ 6064 திருமதி பத்மினி செல்வராஜா
மா/ 6065 தம்பையா சிதம்பரநடராசா
மா/ 6080 திருமதி லூர்த்தம்மா அமிர்தநாதன்
மா/ 6081 திருமதி பத்மாவதி கனகரத்தினம்
மா/ 6085 திருமதி இராசபூபதி கந்தையா
மா/ 6106 திருமதி சலோமப்பிள்ளை மனுவேல்பிள்ளை
மா/ 6110 திருமதி சரஸ்வதி நவரத்தினசிங்கம்
மா/ 6111 திருமதி லூர்த்தம்மா செபஸ்ரியாம்பிள்ளை
மா/ 6114 திருமதி அன்னம்மா பிலிப்புப்பிள்ளை
மா/ 6122 திருமதி யேசுபதி கந்தையா
மா/ 6126 திருமதி சரஸ்வதி முத்தையா
மா/ 6134 திருமதி கெங்கையம்மா சின்னத்துரை
மா/ 6144 திருமதி நேசரத்தினம் ஜெகநாதன்
மா/ 6150 திருமதி மங்கையற்கரசி தம்பிப்பிள்ளை
மா/ 6174 திருமதி ஜெயராணி இராஜேந்திரா
மா/ 6187 மாரியாம்பிள்ளை அந்தோனிமுத்து
மா/ 6189 குட்டித்தம்பி சுப்பையா
மா/ 6190 தம்பு துரைச்சாமி
மா/ 6198 திருமதி கனகம்மா தம்பிராசா
மா/ 6208 திருமதி செல்லம்மா இராமநாதன்
மா/ 6216 திருமதி பறுவதாம்பாள் வேலுப்பிள்ளை
மா/ 6220 நாகலிங்கம் இராசநாதன்
மா/ 6230 பர்னாந்து சுவாம்பிள்ளை
மா/ 6239 அம்பலவாணர் பரமராசா
மா/ 6241 திருமதி கோணேஸ்வரி சாமுவேல்
மா/ 6243 திருமதி சிதம்பரம் சின்னத்தம்பி
மா/ 6250 செல்லப்பா இரத்தினம்
மா/ 6251 திருமதி இராசலட்சுமி அரியரட்ணம்
மா/ 6287 திருமதி பூமணி சேனாதிராசா
மா/ 6291 கிருஷ்ணர் இராசதுரை
மா/ 6296 திருமதி சரஸ்வதி சண்முகானந்தம்
மா/ 6310 திருமதி அம்மணிமுத்து துரையப்பா
மா/ 6351 திருமதி இராசமணி பெரியதம்பி
மா/ 6352 ஐயாத்துரை கனகராசா
மா/ 6361 செல்வி கற்பகம் நாகலிங்கம்
மா/ 6381 திருமதி சிவயோகமலர் இராமநாதன்
மா/ 6386 நன்னி பொன்னையா
மா/ 6400 திருமதி செல்லம்மா குலத்துங்கம்
மா/ 6406 மயில்வாகனம் தருமராசா
மா/ 6412 திருமதி மாகிறேட் அரசரத்தினம்
மா/ 6434 திருமதி நல்லம்மா இராசதுரை
மா/ 6439 வல்லிபுரம் கந்தையா
மா/ 6441 செல்லர் இராசையா
மா/ 6449 திருமதி நாகம்மா நடராசா
மா/ 6453 திருமதி கணேசம்மா அம்பலவாணர்
மா/ 6458 திருமதி மாகிறேற்றம்மா பேதுறுப்பிள்ளை
மா/ 6461 சின்னப்பு நாகமணி
மா/ 6471 திருமதி தங்கச்சிஅம்மா செல்லத்துரை
மா/ 6503 திருமதி கனகம்மா சிவசுப்பிரமணியம்
மா/ 6505 இராசையா இரட்ணசபாபதி
மா/ 6529 திருமதி காணிக்கைமுத்து மரியநாயகம்
மா/ 6548 செல்வி சிவசோதி பொன்னையா
மா/ 6554 தம்பு சின்னத்துரை
மா/ 6560 திருமதி மகேஸ்வரி இராஜரத்தினம்
மா/ 6566 அருணாசலம் குருசாமி
மா/ 6574 திருமதி செல்லம்மா தங்கேயன்
மா/ 6579 முத்தர் சிங்கராசா
மா/ 6617 திருமதி தெய்வானைப்பிள்ளை சுப்பிரமணியம்
மா/ 6618 திருமதி இலட்சுமி செல்லையா
மா/ 6623 மாதர் சின்னத்தம்பி
மா/ 6628 திருமதி சிரோன்மணி வைத்திலிங்கம்
மா/ 6629 திருமதி திரேசம்மா செபஸ்தியாம்பிள்ளை
மா/ 6630 திருமதி தங்கரத்தினம் நடராசா
மா/ 6641 திருமதி சிவபாக்கியம் ஆறுமுகம்
மா/ 6657 சின்னத்தம்பி பஞ்சலிங்கம்
மா/ 6658 திருமதி இராசம்மா குமாரசாமி
மா/ 6667 மார்க்கண்டு வைரமுத்து
மா/ 6669 சூசைப்பிள்ளை அத்தனாசிப்பிள்ளை
மா/ 6705 திருமதி ஞானம்மா அந்தோனிப்பிள்ளை
மா/ 6714 ஜோசப் ஆசிர்வாதம்
மா/ 6718 வல்லிபுரம் இராமனாதன்
மா/ 6726 இராமலிங்கம் சரவணமுத்து
மா/ 6741 இராமன் இளையகுட்டி
மா/ 6743 திருமதி பொன்னம்மா இரத்தினம்
மா/ 6763 திருமதி பூபதி கந்தையா
மா/ 6764 திருமதி திருநீலநாயகி சண்முகநாதன்
மா/ 6801 வைத்தி மருசிலீன்
மா/ 6804 நாகநாதர் கணபதிப்பிள்ளை
மா/ 6811 திருமதி இராசம்மா கனகரத்தினம்
மா/ 6827 திருமதி மகேஸ்வரி சின்னத்துரை
மா/ 6831 வேலுப்பிள்ளை கணேசன்
மா/ 6837 திருமதி பரமேஸ்வரி சிறீதரன்
மா/ 6838 செல்வி தனலட்சுமி செல்லப்பா
மா/ 6846 திருமதி இராஜேஸ்வரி பெரியதம்பி
மா/ 6859 திருமதி தங்கச்சியம்மா சின்னத்தம்பி
மா/ 6869 விசுவன் வயிரவன்
மா/ 6883 திருமதி இன்னேசம் குருசுமுத்து
மா/ 6886 திருமதி ஜீவ்காந்தி நடராசா
மா/ 6897 சின்னப்பொடி சின்னத்தம்பி
மா/ 6900 செல்லையா ஸ்ரீகிருஷ்ணபாலன்
மா/ 6904 ஆறுமுகம் புண்ணியமூர்த்தி
மா/ 6920 கதிரவேலு நல்லையா
மா/ 6932 இராமலிங்கம் கந்தையா
மா/ 6936 செல்லையா சோமசுந்தரம்
மா/ 6953 திருமதி கனகம்மா கந்தையா
மா/ 6966 திருமதி அன்னம்மா சிவக்கொழுந்து
மா/ 6967 திருமதி இன்னேசம் அருளப்பு
மா/ 6969 திருமதி பூமணி நாகரத்தினம்
மா/ 6979 செல்வி இராசமணி செல்லையா
மா/ 6985 சரவணமுத்து கந்தையா
மா/ 6998 தம்பு நவரத்தினம்
மா/ 7011 திருமதி பரமேஸ்வரி நல்லையா
மா/ 7018 அந்தோனி ஏசாயா
மா/ 7035 பொன்னையா ஆறுமுகராசா
மா/ 7038 திருமதி நாகரத்தினம் துரைசாமி
மா/ 7042 திருமதி சின்னத்தங்கம் சண்முகம்
மா/ 7056 வைத்தியலிங்கம் நடராசா
மா/ 7059 திருமதி சுந்தராம்பிகை இராமசாமி
மா/ 7065 நீக்கிலாப்பிள்ளை அடைக்கலமுத்து
மா/ 7067 பொன்னையா சின்னத்துரை
மா/ 7069 திருமதி மகேஸ்வரி நவரட்ணம்
மா/ 7079 திருமதி ஞானம்மா மிக்கேல்
மா/ 7097 கார்த்திகேசு தம்பிராசா
மா/ 7101 திருமதி சொர்ணம் பரசுராமன்
மா/ 7125 திருமதி தெய்வானைப்பிள்ளை நடராசா

**மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு**
**குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்**

மா/ 135 திரு.பொன்னையா சண்முகபாரதி
மா/ 372 திரு. வேலாயுதம் ஜெகதீஸ்வரன்
மா/ 466 திரு. தம்பு சுப்பிரமணியம்
மா/ 509 திரு. பொன்னுச்சாமி பாஸ்கரன்
மா/ 517 திருமதி கோமளாம்பாள் சுப்பிரமணியம்
மா/ 620 திரு. முத்துத்தம்பி சந்திரலிங்கம்
மா/ 717 திரு. ஆசீர்வாதம் அமலதாஸ்
மா/ 865 திருமதி இராஜேஸ்வரி நகுலராஜா
மா/ 978 திரு. காசித்தம்பி வடிவேலு
மா/ 1012 திரு. அருளானந்தம் யேசுதாசன்
மா/ 1366 திருமதி சிவபாக்கியம் கனகசபை
மா/ 1576 திரு. தில்லையம்பலம் யோகானந்தன்
மா/ 1620 திரு. வல்லிபுரம் கதிரவேலு
மா/ 1691 திரு. கணபதிப்பிள்ளை வினாயகமூர்த்தி
மா/ 1710 திருமதி மேரிமொறீன் ஜெயந்தகுமார்
மா/ 1904 திருமதி திலகேஸ்வரி லோகநாதன்
மா/ 2304 திரு. நடராசா கந்தசாமி
மா/ 2331 திருமதி மேரிஸ்ரெலா எட்வேட்
மா/ 2581 திரு. அந்தோனி பெனடிற்
மா/ 2620 திரு. நடராசா குகதாசன்
மா/ 2703 திருமதி பார்வதி செல்லையா
மா/ 2811 திரு. செலியூஸ் வேதநாயகம்
மா/ 2827 திரு. ஞானப்பிரகாசம் மரியயோசப்ஞானராசா
மா/ 2895 திருமதி அல்போஞ்சம்மா முத்துராசா
மா/ 2912 திருமதி இராசமலர் உருத்திரமூர்த்தி
மா/ 3078 திருமதி லூசியாசொர்ணம் ஸ்ரனிசிலாஸ்
மா/ 3253 திரு. கவிரியேற்பிள்ளை சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை
மா/ 3273 திரு. மரியாம்பிள்ளை யோசேப்பு

(வளரும்)

# செல்வயோகம் மிக்க பெருவாழ்வு அளித்திடும் வரலக்ஷ்மி விரதம்

**இன்று வரலக்ஷ்மி விரதம். அதனை முன்னிட்டு இந்தக்கட்டுரை பிரசுரமாகிறது.**

இந்துக்களின் வாழ்வியல் முறைமைகள் மனிதனை நன்னெறிப்படுத்தும் தன்மையில் அமைந்து காணப்படுகின்றன. வாழ்வியல் முறைமைகளை வரலாறுகள் எமக்குக் கூறுவதோடு, இதிகாசங்களும் புராணங்களும் எம்மை நன்னெறிப்படுத்தும் தன்மையில் அமைந்துகாணப்படுகின்றன. வாழ்வியலோடு இணைந்ததும் சமய உணர்வு மிக்கதுமான இதிகாச புராணங்களில் காணப்படும் கிரியைகள் வேள்வி, தவம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூசை எனும் ஏழுமாகும். இவ்வகைக் கிரியைகளுள் ஒன்றே விரதமாகும்.

பாரம்பரிய ஒழுங்கில் நாம் அனுஷ்டிக்கும் விரதங்களுள் சக்தி விரதங்களுள் அடங்குவதும் தனித்துவமானதும் மகிமை மிக்கதும் சுகம், உறுதி, வீரம், வெற்றி, ஆயுள், சுகமான வாழ்வு, செல்வம் இவை விருத்திபெறவும் விரும்பிய பலன்களை அடையவும் சற்புத்திரபேறு, தீர்க்கசுமங்கலி பாக்கியம், நற்கணவனை அடைதல் மங்களகரமானதும் நிறைவானதுமான பலன்கள் கைவரப்பெறவும் வரலக்ஷ்மி விரதம் கைக்கொள்ளப்படுகின்றது.

வரலக்ஷ்மி விரதத்தினை ஸ்கந்த மஹாபுராணமும் பவிஷ்யோத்தர புராணமும் சிறப்பாகக் கூறுகின்றன. திருக்கைலாயமலையில் பார்வதி தேவி பரமேஸ்வரனிடம் ஐயனே பூவுலகில் சகல செல்வ போகங்களையும் சௌபாக்கியங்களையும் புத்திர சம்பத்தையும் வழங்கக்கூடிய விரதம் எதுஎன வினாவிய போது அவர் பார்வதிதேவிக்கு இவ்விரத மகிமையைக் கூறியதாக வரலாறு. சௌராஸ்டிர தேசத்தை சுசீந்ததிராதேவி எனும் அரசி ஆட்சி புரிந்துவந்தாள். அவள் ஒரு சமயம் மஹாலக்ஷ்மி தேவியை அவமதித்த காரணத்தால் சகல செல்வங்களையும் இழந்தாள்.

அந்நாட்டின் குண்டினம் எனும் பட்டணத்தில் சாருமதி எனும் பதிவிரதை வாழ்ந்து வந்தாள். அவளின் தெய்வ பக்தியிலும், ஒழுக்க சீலத்திலும் மகிழ்ந்த மஹாலக்ஷ்மி அவளின் கனவில் தோன்றி, வரலக்ஷ்மி விரத மகத்துவத்தை உபதேசித்துமறைந்தாள். அவளும் அக்கனவை தன்

ஞானக்கதிர்

தோழியரிடம் கூறி முறைப்படி அனைவரும் வரலக்ஷ்மி விரதத்தை கைக்கொண்டு சகல செல்வபேறுகளையும் பெற்று மகிழ்ந்திருந்தனர். இதனை அறிந்த சுசீந்திராதேவி சாருமதியிடம் சென்று விரத அனுஷ்டானங்களை அறிந்து வரலக்ஷ்மியை வழிபட்டு இழந்த செல்வங்களைப் பெற்றதாக புராண வரலாறு கூறுகின்றது.

நன்கு தூய்மையாக்கி மாவிலை தோரணங்கள் அலங்கரித்தமண்டப நடுவில் மேடையமைத்து அதில் நெல் பரப்பி தாமரைப் பூக் கோலமிட்டு அக்கோலத்தின் நடுவே ஒரு கும்பம் வைக்க வேண்டும். சகல விரதங்கள், பூசைகள் வைபவங்களுக்கும் நீர் நிரப்பிய கும்பம் வைப்பது வழக்கம். ஆனால், வரலக்ஷ்மி விரதத்திற்கு வைக்கும் கும்பம் பச்சையரிசியினால் நிறைக்கப்படவேண்டும். கும்பத்திலே ஒன்பது முடிச்சுக்கள் இடப்பட்ட மஞ்சள் நிற காப்பினை (நோன்பு நூல்) வைத்து கும்பத்திலே ஸ்ரீ வரலக்ஷ்மி தேவியை முறைப்படி பூசித்து விசேடமாக நெய்ச்சாதம் வைத்துநிவேதம் செய்து அறுகம்புல்லினால் அர்ச்சித்து வழிபடவேண்டும்.

ஒன்பது முடிச்சுக்களிலும் ஓம் கமலாயை நம, ஓம் ரமாயை நம, ஓம் லோகமாதாயை நம, ஓம் விஸ்வ ஜனனியை நம, ஓம் மஹாலக்ஷ்மியை நம, ஓம் க்ஷீராப்தி தனயை நம, ஓம் விஸ்வ சாக்ஷிண்யை நம, ஓம் சந்ரசஹோதர்யை நம, ஓம் ஹரி வல்லபாயை நம எனும் வரலக்ஷ்மியின் சிறப்பு நாமங்களால் அர்ச்சித்து சர்வமங்கள ரூபிணியான தாயே சகல பாவங்களையும் போக்குபவளே இந்த காப்பினை கட்டும் எமக்கு என்றும் எமது இல்லத்தில் தங்கியிருந்து சகல செல்வங்களையும் நற்சந்ததி விருத்தியையும் சகல சௌபாக்கியங்களையும் தந்தருள்வாயாக என மனதார பிரார்த்தித்து வலது மணிக்கட்டில் காப்பை கட்டிக்கொள்ள வேண்டும்.

இவ்விரதத்தை நோயாளர்கள், ஆசௌசமுடையோரும், பாலகர்களும், மாதவிலக்கான பெண்களும் தவிர்ந்த ஏனையோர் அனுஷ்டிக்கலாம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஸ்ரீ வரலக்ஷ்மி விரதத்தை அனைவரும் அனுஷ்டித்து சகல செல்வப் பேறுகளையும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. *

ஸ்ரீவத்ஸ **வ.இராஜேஸ்வரக் குருக்கள்** பிரதம குரு
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள்
தேவஸ்தானம் வண்ணை - யாழ்ப்பாணம்.

# டென்மார்க் பிரண்டா அம்மன் திருவிழா சிறப்பாக நடைபெற்றது

டென்மார்க் நாட்டின் பிரண்டா நகரில் அமைந்துள்ள பிரண்டா அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த மாதம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வெகுசிறப்பாக நடைபெற்றது.

கடந்த 30 ஆம் திகதி தேர் உற்சவம் இடம்பெற்றது. அம்பாளின் அடியார்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக் கொள்வதில் சிரத்தையோடு ஈடுபட்டனர்.

நாடுவிட்டு நாடு சென்றாலும் நாங்கள் இந்துக்கள் என்ற முனைப்புடன் வேட்டி சால்வையுடன் பெரும்பாலான ஆண்கள் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





தேர் உற்சவத்தை காண்பதற்கு டென்மார்க்கில் பல்வேறு நகரங்களில் இருந்தும் ஜேர்மன், சுவிஸ்., சுவீடன்., பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் திரண்டு வந்திருந்தனர்.

காவடிகள், கற்பூரச்சட்டிகள் அடியழித்தல், அங்கப்பிரதட்சணம் முதலிய நேர்த்திகள் அடியார்களினால் நிறைவேற்றப்பட்டன.

தேர் புறப்படுவதற்கு முன்னர் அங்கு மலைபோல் குவிக்கப்பட்டிருந்த தேங்காய்கள் அடித்து நொறுக்கப்பட்டன. தேங்காய்கள் என்றாலே கண்ணால் காண்பதற்கு அருமையான நாட்டில் இவ்வாறு தேங்காய் அடிப்பது அதிசயம் என்றுதான் கூறவேண்டும்.

தேர் இழுக்கப்பட்டு ஆலயத்தின் தெற்கு வீதிக்கு வந்தபோது அங்கு தயாராக நின்ற கரகமாடும் பெண்கள் தேரின் முன்பாக அம்மனின் பாடல் ஒன்றிற்கு கரகாட்டம் ஆடினார்கள். பாடல் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான அடியார்கள் குளிருக்கு மத்தியிலும் காலுறைகள் எதுவுமின்றி காணப்பட்டமை அம்பாளின் பக்தியை எமக்குணர்த்தியது.

தேர் உற்சவத்தையடுத்து அன்றைய தினம் தமிழரின் பாரம்பரியத்தை உணர்த்தும் காத்தவராயன் கூத்து இடம்பெற்றது.

நாடுவிட்டு நாடு சென்றாலும் எம்மவர்கள் எமது பாரம்பரியத்தை கட்டி வளர்ப்பதில் காத்திரமாய் இருப்பது போற்றுதற்குரியதே. *

*டென்மார்க்கிலிருந்து*
**பகீர்**




## தெய்வீக இசையரங்கில்

யாழ்ப்பாணம், ஓக.19

நல்லூர் முருகன் ஆலயப் பெருந் திருவிழாக் காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய ஆதரவுடன் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 10 ஆம் நாளான இன்று வெள்ளிக்கிழமை எஸ்.குமாரசாமியின் பாட்டு இடம்பெறும்.

அணிசெய் கலைஞர்கள் வயலின் - எ.ஜெயராமன், மிருதங்கம் - கே. கண்ணதாசன், தபேலா - சதாவேல் மாறன். (203)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

மஞ்சத்திருவிழா



## நல்லூரான் திருவடி - 4



எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கந்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடெடி
- யோகர் சுவாமிகள்.

## மஞ்சமதில் காணில்....

ஐந்து முகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
கந்தன் என ஓதில் காலன் கதி கலங்கும்
நெஞ்சில் நினைவோர்க்கு நித்தம்புகழ் துலங்கும்
தஞ்சம் என நின்றால் தடைகளெல்லாம் நீங்கும்
விஞ்சு புகழோடு வீதிவரும் நல்லூர்
மஞ்ச மதில்காணில் மமதையெலாம் போகும்
- முருகனடியான்.

## அஞ்சலென அருள்புரிவாய்!

மஞ்சத்தில் இவர்கின்ற மூர்த்தியினைக்கண்டே
நெஞ்சமெலாம் பறிகொடுத்துச் சிரந்தாழ்த்தி நின்றேன்
தஞ்சமென நாடிவந்த அடிநாயேன் தன்னை
அஞ்சலென அருள்புரிவாய் நல்லூர்க் கந்தா!

நெஞ்சம் நிறைந்திடு நல்லூர்ப் பதிதனில் இவர்கின்ற
மஞ்சவிழாவினைக் கண்டு களித்திட வாரீரே
பஞ்சுபடாத் துயர் நீங்கிட இவ்வழி நன்றே காண்
குஞ்சரி நாதனைப் பண்ணுடன் பாடல்கள் பாடுங்கள்
- கவிமணி கந்தமுருகேசதாசனார்.

## திருமஞ்ச மேறும் நல்லூரான்

அஞ்சேலென அபயந்தந்து நல்லூரான்
அழகான திருமஞ்சத்தில் வருகிறான்
பஞ்சம் பிணி பாரினில் போக்கிட
பாவையர் சகிதமாக திருமஞ்சத்தில் வருகிறான்
வெஞ்சமரை நிறுத்தி விடிவொன்று தந்திட
வேலேந்தி மயிலேறி திருமஞ்சத்தில் வருகிறான்
தஞ்சமென புகுந்த அடியவரைக் காத்திட
தமிழான கடவுள் திருமஞ்சத்தில்வருகிறான்
- மதுரகவி.

## மஞ்சத்தில் வருகின்றாய்!

பிறவிப் பெருங்கடலில்
பேரானந்தம் தரவே
நிறைவாக மஞ்சத்தில்
நீயேறி வருகின்றாய்!
கறைபோக்கும் மாமருந்தாய்
காசினியில் நீயிருக்க
குறையேது மெமக்குண்டோ?
கூறிடுவாய் குணவாளா!
- கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## மஞ்சமதில் வீதிவலம் வருவாய்

அஞ்சே லென்று கரமுயர்த்தி
ஆறுதல் தரவருவாய்
தஞ்சமென வருவோர்க்கு
வரம் தரவே வருவாய்
பிஞ்சு முகமாறு கொண்ட
பாலகனாய் வருவாய்
மஞ்சமதிலேறி நல்லை
வீதிவலம் வருவாய்!
- அரியாலையூர் சி.சிவதாசன்

## தாங்கிட மாட்டோம் தா முழு அமைதியை

வீட்டினை விசாலமாய் அமைப்பவர் ஒருபால்
வீணாகக் காசினை விளாசுவார் ஒருபால்
அடுத்தவர் காணியைப் பிடிப்பவர் ஒருபால்
அடாவடித் தனஞ்செய்து அலைபவர் ஒருபால்
பகலிலும் வழிப்பறி செய்பவர் ஒருபால்
பாலியற் பலாத்காரம், படுகொலை ஒருபால்
வேதனைகள் பல விளைவதை நீ கண்டும்
வேலவா! வேடிக்கை பார்ப்பதும் முறையோ சொல்?

நாகரிக வீடு நடுத்தெருவில் கோயில்
ஆதன விலையிங்கே அறுபது மடங்காச்சு
பாடுபட்டுழைத்தவர் பதறுகிறார் பார்த்து
கேடு கெட்டழிகிறார் கிஞ்சித்தும் பாராது
நாடோ நடுங்குது நாளைபோர் வெடிக்குமோ?
நீயுமோ விடவில்லை நித்தமும் ஒருகோலம்
போதுமுன் நாடகம் புரிந்திடு யதார்த்தத்தை
தாங்கிட மாட்டோம் தா முழு அமைதியை.
- கவிமணி அன்னைதாஸன்.

# கதிர்காமரின் பெயரை விற்று அனுதாபம் தேடுகின்றது சு.க.!

## ஐ.தே.க.பிரதிச் செயலர் குற்றச்சாட்டு

"முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மறைந்த லக்ஷ்மன் கதிர்காமர் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்துக்காக அவரைப் பிரதமராகத் தெரிவுசெய்வதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர், இன்று அவர் இறந்த பின் அவருடைய பெயரைவிற்று அனுதாப வாக்கு வேட்டை நடத்தமுற்பட் டுள்ளனர்."

இவ்வாறு குற்றம் சுமத்துகிறார் ஐ.தே. கட்சி பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க. சிறுபான்மைத் தமிழர்கள் ஒருபோதும் சுதந்திரக் கட்சியிடம் ஏமாறமாட்டார்கள் என்றும் கூறினார்.

"கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடியபோது, கூட்டணி அரசில் முக்கிய கட்சியாக இருந்த ஜே.வி.பி.காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமரின் பெயரைப் பிரதமர் பதவிக்கு முன்மொழிந்தது. ஆனால், சுதந்திரக் கட்சியின் மூத்த தலைவர்களான அநுரா பண்டாரநாயக்க, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் உட்பட சகல உறுப்பினர்களும் இதனை எதிர்த்தனர். காரணம் கதிர்காமர் சிறுபான்மை இனத்தமிழர் என்பதே.

இப்பொழுது, அதே கட்சியினர் கதிர்காமரின் சடலத்தைத் தூக்கிக் கொண்டு தேர்தல் பிரசாரம் செய்கின்றனர். அவருடைய பெயரை விற்று வாக்கு வேட்டையாட முயற்சிக்கின்றனர். இந்தச் சூழ்ச்சிக்கு மயங்கிவிடத் தமிழ் மக்கள் ஒன்றும் ஏமாளிகள் அல்லர்" என்றும் ஐ.தே.க.பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார். (எ-க)

## அடுத்த வெளிவிவகார அமைச்சர்; ஜனாதிபதி கலந்தாலோசனை!

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மறைவையடுத்து வெற்றிடமாகியிருக்கும் வெளிநாட்டு அமைச்சுப் பதவியை யாருக்கு வழங்குவது என்பது பற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆலோசகர் களுடன் கலந்துரையாடியுள்ளார்.

அடுத்த வெளிவிவகார அமைச்சுப் பதவிக்கு அமைச்சர் அநுரா பண்டார நாயக்க, இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் மங்களமுனசிங்க, முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதிக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

இவர்களில் அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவிற்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட சாத்தியங்கள் அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேசமயம் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்குப் போட்டியிடுவதால் அவரை வெளிவிவகார அமைச்சராக நியமிக்கும் படி அரசாங்கத்தின் ஒரு சாரார் ஜனாதிபதியிடம் கேட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

## காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் தென்மராட்சியில் அதிகரிக்கின்றனர்

தென்மராட்சி,ஓக.19

நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக தென்மராட்சிப் பிரதேசத்தில் காய்ச்சல், வயிற்றோட்டம், இரத்த சீதம் ஆகிய நோய்களால் பீடிக்கப்படுவோர் தொகை அதிகரித்துள்ளது.

இந்த நோய்களினால் பீடிக்கப்படும் பலர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வார்ட்டுகளிலும் வெளிநோயாளர் பிரிவிலும் தினமும் சிகிச்சை பெறுவதைக் காணமுடிகிறது.

பிரதேசத்தில் குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவுவதால், பெறப்படும் நீரைக் கொதிக்க வைத்து பருகுமாறும் - ஒவ்வொருவரும் சுகாதாரம் பேணி இந்நோய்களைப் பரவாமல் தடுக்குமாறும் - சாவகச்சேரி வைத்தியசாலை டாக்டர் ச.அம்பிகைபாகன் அறிவித்துள்ளார். (9-117)

## வருமான மேற்பார்வையாளர்களுக்கான போட்டிப் பரீட்சை

தென்மராட்சி,ஓக.19

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் வருமான மேற்பார்வையாளர்களை வருமானப் பரிசோதகர் வகுப்பு - **II** இற்கு பதவியுயர்வு வழங்குவதற்குரிய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் போட்டிப் பரீட்சை நடைபெறுமென மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் வே.பொ.பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

பரீட்சைக்கு தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (8-117)

## தோட்டங்களில் விளைபொருள்கள் திருட்டு!

அரியாலை, ஓக.19

நீர்வேலிப் பகுதித் தோட்டங்களில் விளைபொருள்கள் திருடப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வெங்காயப் பயிரை அறுவடை செய்து வரும் விவசாயிகள் அதனை தோட்டங்களில் உலர வைக்கின்றனர். இரவுவேளைகளில் அவற்றை களவாடிச் செல்வதாகத் தெரி விக்கப்பட்டது. (ஒ-17)

## நாவல் பழம் பறிக்க மரமேறிய சிறுவர் வீழ்ந்து காயம்

தென்மராட்சி,ஓக.19

நாவல்பழக் காலம் ஆரம்பித்துள்ள நிலையில் பழம் பறிக்க மரத்தில் ஏறும் சிறுவர்கள் தவறி வீழ்ந்து காயமடையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கடந்த திங்கட்கிழமை நாவல் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து கால் முறிந்த நிலையில் இரு சிறுவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த ராஜ்குமார் ரஜ்சித் (வயது-10) மற்றும் மிருசுவில் தவசிகுளத்தைச் சேர்ந்த நடேஸ் சதீஸ்குமார் (வயது-11) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (ஒ-117)

## சுனாமி பாதித்த கடற்றொழிலாளருக்கு உபகரணங்கள்

வடமராட்சி கிழக்கில் ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களுக்கு மீன்பிடிப் படகுகளும் வெளிஇணைப்பு இயந்திரங்களும் வழங்கப்படவுள்ளன.

கனடாவில் வசிக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் இவற்றை வழங்கவுள்ளனர்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மருதங்கேணிப் பகுதியில் வைத்து இவை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப் படவுள்ளன. (ஒ-117)


### சேவை நலன் பாராட்டு



அகவை 60இல் கால் பதிக்கும்
(19.08.2005)
எங்கள் நல்லாசான்

**செல்வி பத்மாவதி இரத்தினம்**

வாழி பல்லாண்டு
ஆண்டுகள் பத்தொன்பதிற்கும் மேலாய்
எம் கல்லூரியில் அரும் பணியாற்றிக்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு போற்றி
முத்தான எழுத்தால் நிர்வாகத்தில்
முனைப்புடன் பணியாற்றி
விந்தை மிகு விஞ்ஞானத்தை விருப்புடன்
புகட்டிய எம் ஆசான்
வாழ்க பல்லாண்டு! பல்லாண்டு!

கல்லூரி சேவையாளர் சங்கம்,
யா/மகளிர் கல்லூரி சாவகச்சேரி.

(38990) (21-19-15)

### பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம் (வ-து)

**பதவி வெற்றிடம்**

கீழ் குறிப்பிடும் பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை ரூபா 10/- செலுத்தி சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் யாவும் *"பொதுமுகாமையாளர், பண்டத் தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு"* என்ற முகவரியிட்டு பதிவுத்தபாலிலோ / நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

1) சாரதி: 312/13 - வெற்றிடம் - 01
சம்பளத்திட்டம் - 4000-5500
-75X10-80X10
(ஆணைக்குழு சுற்றறிக்கைப் படி சகலபடிகளும் சேர்த்து வழங்கப்படும்)

தகைமைகள்:-
5ஆம் வகுப்பு கல்வி தராதரப்பத்திரத்துடன் பஸ்/லொறி/டிராக்டர் அத்துடன் ட்றெயிலர் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:-
18-45 வரையாகும்
(கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது)

விண்ணப்ப முடிவு திகதி:- **02.09.2005**

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(சி-44542) (21-19-15)

### முதலாம் வருட நினைவு அஞ்சலி



அன்னை மடியில்
19-07-1978
ஆண்டவன் மடியில்
19-08-2004

**சுப்பையா தர்மலிங்கம்**
(தாஸ்)

ஓராண்டு சென்றாலும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றென்றும் எம் நெஞ்சை
விட்டகலாத எம் அன்புச்
சின்னண்ணாவின்
நினைவலைகள் மாறவே மாறாது!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்
அன்புச் சகோதரன்: மயூரன்

பெரியவிளான், இளவாலை. (38848)(50)

உ

*நல்லூர் சைவ மகாசபை நடத்தும்*
*நல்லூர் கந்தன் மஹோற்சவகால*
**தெய்வீகத் தொடர் இசைச் சொற்பொழிவு**

இன்று தொடக்கம் தினமும் மாலை 6 மணிக்கு
"கந்தபுராணம்"
நல்லைக்குரு மணியின் பிரதம வாரிசு
"கானகதாவாரிதி"
பிரம்மஸ்ரீ- சிவ.வை.நித்தியானந்தசர்மா

அணிசேர்கலைஞர்கள்:
திரு. M. கண்ணன் - ஹார்மோனியம்
திரு. T. ராஜன் - மிருதங்கம்
திரு. S. புஸ்பநேசன் - ஒகன்

- நல்லூர் சைவ மகாசபை.

அன்பளிப்பு-
**சஞ்சீவி- சங்குசக்கரம் பெயின்ற் ஹவுஸ்**
பரமேஸ்வராசந்தி, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

(39035) (21.19.15)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில்
19 - 05 - 1908



விண்ணில்
21 - 07 - 2005

**திருமதி மரியம்மா செபஸ்தியாம்பிள்ளை**

'இரக்கம் நிறைந்த இயேசுவே இவரது
ஆன்மா சமாதான ஒளியில் ஒளிர்வதாக"

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்த அனைவருக்கும் 24.07.2005 இல் நடைபெற்ற நல்லடக்கத்தில் கலந்துகொண்டு உதவி புரிந்தவர்களுக்கும் உள்ளூரிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் நேரிலும் தொலைபேசியிலும் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இளைப்பாற்றிக்காக நாளை (20.08.2005) சனிக்கிழமை காலை 7 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இதில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றுக்காக செபிக்குமாறும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

புதல்வர்கள்:
S.A. இராஜசிங்கம் (கொழும்பு)
S.B. குணசிங்கம் (மட்டக்களப்பு)
S.A. இரத்தினசிங்கம் (வல்வெட்டித்துறை)
மருமகள்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.
T.P. 0773222807

(39025) (21.19.15)

### வெறுமனே நெல்லை மட்டும் பயிரிடாமல்

# மாற்றுப் பயிர்ச்செய்கையிலும் விவசாயிகள் ஈடுபட வேண்டும் என்கின்றார் அரச அதிபர்

பரந்தன் ஓக.19

கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் உற்பத்தி அதிகரித்த நிலையில் அப்பகுதிகளில் மாற்றுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உற்பத்தியாளர்கள் தொடர்ந்து நெற்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வராமல் வேறு பயிர்ச் செய்கையையும் மேற்கொள்ள வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பு கரும்பு உற்பத்தி மேற்கொண்டபோது அது பெரு வெற்றி தந்துள்ளது. இதனை மீண்டும் கிளிநொச்சியில் மேற்கொள்ளவேண்டும்.

மாற்றுப்பயிர்ச் செய்கை மேற்கொள்வதால் உற்பத்தியாளர்கள் அதனை உரியமுறையில் சந்தைப்படுத்த வாய்ப்புகள் ஏற்படும்.

எல்லோரும் நெற்பயிரைச் சுலபமாக மேற்கொள்வதால்தான் அதனைச் சந்தைப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது - என்றார்.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (த-352-203)

## கட்டாக்காலி கால்நடைகளால் முத்தையன்கட்டில் பயிர்கள் நாசம்

முத்தையன்கட்டு குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட பயிர்களைக் கட்டாக்காலி கால்நடைகள் அழித்துவருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆரம்பத்தில் கால்நடைகளால் பயிர்கள் சேதமாக்கப்பட்டு வந்தன. இந்த விடயம் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து இறுக்கமான நடைமுறைகளால் கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டு பட்டிகளில் வளர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆனால், தற்போது கால்நடைகள் கட்டுப்பாடுகளையும் மீறி கட்டாக்காலிகளாகத் திரிந்து பயிர் நிலங்களை அழித்துவருகின்றன. இதனால், பெருமளவு பயிர்கள் நாசமடைவதால் கமநலச் சேவை நிலையம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் என்பன உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-341-204)

## பொதுநோக்குமண்டபம் சிரமதானமூலம் துப்புரவு

புளியங்குளம்,ஓக.19

மதியாமடு பொதுநோக்கு மண்டபம் மதியாமடு கிராம சேவகர் மரியசீலனின் ஏற்பாட்டில் கடந்த 14ஆம் திகதி சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இச்சிரமதானப் பணிக்குக் கிராம சேவகர் மரியசீலன் உட்பட கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-355)

## 'வீரமுரசு' நிகழ்வுகள்

குமுழமுனைப் பிரதேச 'வீரமுரசு' நிகழ்வு கடந்த 6ஆம் திகதி ஆறுமுகத்தான்குளம் அ.த.க. பாடசாலை மைதானத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மாவீரர் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

சமகால அரசியல் கருத்துரைகளை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, முல்லை மாவட்ட ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் குமரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செல்வம், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் வேழினி, முள்ளியவளை பிரதேச பொறுப்பாளர், போராளிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.(353-204)

* * *

ஒட்டுசுட்டான்,ஓக.19

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் வராந்த வீர முரசு நிகழ்வு கடந்த 13ஆம் திகதி கற்சிலை மடு பண்டாரவன்னியன் சிலை வளாகத்தில் நடைபெற்றது.

கற்சிலைமடு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பொதுச்சுடரினை கற்சிலைமடு பிரபல அண்ணாவியார் மு. இளையகுட்டி ஏற்றிவைத்தார்.

மாவீரர்களான முத்தழகன்,லெப்.மகேசன்,கப்டன் ரசேந்திரன், 2ஆம் லெப். மாலதி, லெப். சங்கர், லெப்.எழிலழகன், சிறப்பு எல்லைக் காப்பு வீரர் கமல், வி.வே. கார்த்திக் ஆகியோருக்கு ஈகச்சுடர்களை அவர் களது உறவினர்கள் ஏற்றினர்.

சமகால அரசியல் கருத்துரைகளை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சி.வேதவனம், சித்த ஆயுள்வேத வைத்தியரும் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான நா. வன்னியசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. (த-341-204)

## 'வருமுன் காப்போம்' கருத்தரங்குகள்

ஒட்டுசுட்டான்,ஓக.19

கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையினர் 'வருமுன் காப்போம்' என்னும் தலைப்பில் பல்வேறு இடங்களில் கருத்தரங்குகளை நடத்திவருகின்றனர்.

அந்தவகையில், கடந்த 9ஆம் திகதி இடதுகரை முத்துஐயன்கட்டுப் பாடசாலையிலும் 10ஆம் திகதி ஜீவநகர் கனகரத்தினபுரத்திலும் ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் தலைமையில் கருத்தரங்குகள் இடம்பெற்றன.

இதேவேளை -

ஜீவநகர் மக்களால் கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

(த-341-202)

## பாலமோட்டைப் பிரிவு கிராமங்களில் பெற்றோர் வலுவூட்டல் கல்வித்திட்டம்

புளியங்குளம்,ஓக.19

வவுனியா அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனமும் கல்வி அபிவிருத்தி ஆய்வு நிறுவனமும் இணைந்து பெற்றோர் வலுவூட்டல் கல்வித் திட்டத்தைப் பாலமோட்டைக் கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த கிராமங்களில் ஆரம்பிக்கவுள்ளன.

மேற்படி பிரிவைச் சேர்ந்த பாலமோட்டை, நவ்வி, கோயில்குஞ்சுக்குளம், மாதர்பணிக்க மகிழங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களின் பெற்றோர்களில் எழுத்தறிவற்ற பெற்றோர்கள் இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று கடந்த 12ஆம் திகதி நவ்வி முன்பள்ளியில் இடம்பெற்றது.

வவுனியா அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் க.சந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்வி அபிவிருத்தி ஆய்வு நிறுவனத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைப்பாளர்கள், பாடவிதான உத்தியோகத்தர்கள், வலுவூட்டல் கல்வி பெறத்தகுதியான பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(த-355-202)



அண்மையில் 'போரூட்' நிறுவனத்தின் உதவியுடன் பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தால் நாச்சிக்குடாவில் உள்ள வறுமையில் வாழும் கடற்றொழிலாளர்களுக்கு முழங்காவில்சமூகபொருளாதார அபிவிருத்தி வங்கி ஒருதொகுதி வலைகளை வழங்கியது.

வங்கி முகாமையாளர், பயனாளிகளுக்கு வலைகளைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

## மணல் அகழ்ந்த குழிகளுக்குள் குப்பை கொட்டுவதால் கேடு!

ஒட்டுசுட்டான் ஓக.19

முள்ளியவளை நெடுங்கேணி வீதியில் உள்ள குடியிருப்புப் பகுதிகளில் மணல் அகழப்பட்ட குழிகளுக்குள் குப்பை கூளங்கள் கொட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், அப்பகுதியில் சுகாதாரத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

குடிமனைகளுக்குள் மணல் அகழப்பட்டதால் அவற்றுக்குள் பலரும் குப்பைகளைக் கொட்டினர். அந்தக் குப்பைக் குழிக்குள் நீர்

வன்னிச் செய்திகள்

நிறைந்து அவை அழுகித் துர்நாற்றம் வீசுகின்றன. நுளம்புகள் அங்கு பெருகிவிட்டன. இதனால், தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகச் சுகாதாரப் பிரிவினர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (த-341)

## கழிவுகளால் துர்நாற்றம்

புதுக்குடியிருப்பு,ஓக.19

புதுக்குடியிருப்பு கேப்பாபுலவு வீதியில் கொட்டப்படும் கழிவுகளால் மிகுந்த துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அவ்வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இவ்வீதியின் ஓரங்களில் சந்தைக் கழிவுகள் மற்றும் விலங்குக் கழிவுகள் கொட்டப்படுவதாலேயே இவ்வாறான துர்நாற்றம் வீசுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்துச் செயற்பட வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-535-202)

## 'ஓசோன்' தினத்தை முன்னிட்டு வினாடி வினாப் போட்டிகள்

புதுக்குடியிருப்பு,ஓக.19

'ஓசோன்' தினத்தை முன்னிட்டு வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகம் வினாடி வினாப் போட்டியொன்றை நடத்தவுள்ளது. இதற்கென பாடசாலைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியில் ஒரு பாடசாலையிலிருந்து ஜி.சீ.ஈ. உயர்தரம் கற்கும் 5 மாணவர்கள் வீதம் பங்குபற்றலாம்.

போட்டிகள் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் அடுத்த மாதம் 3ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு நடை பெறும்.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் வலயக் கல்விப் பணிப்பாளர் அல்லது விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவபால குருவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டிகள் தொடர்பான மேலதிக விவரங்களை 024222-3070, 024222-2373 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டி சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளது. (த-353-152-202)

## முள்ளியவளை ஆஸ்பத்திரிக்கு கட்டாக்காலிகளால் இடையூறு

முள்ளியவளை மகப்பேற்று மருத்துவமனைக்கு முன்பாக இரவு வேளைகளில் கட்டாக்காலி கால்நடைகள் நிற்பதால் சுகாதாரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன், அவசர நோயாளர்களைக் கொண்டுசெல்வதிலும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன், வீதிகளில் கால்நடைகள் கட்டாக்காலியாக நிற்பதால் போக்குவரத்துக்களிலும் பலவித இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (த-341)

## அக்கராயன் சந்தியில் மலசலகூட வசதி இல்லை

கிளிநொச்சி அக்கராயன் சந்திப் பகுதியில் மலசலகூட வசதிகள் இல்லாததால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மேற்படி சந்தியில் உணவகங்கள் உள்ளதால் அந்தப் பாதையில் பயணிக்கும் பஸ் பிரயாணிகளும் ஏனைய பயனாளிகளும் சந்தியில் தரித்துநின்றே செல்கின்றனர்.

இந்தநிலையில், இச்சந்தியில் பொதுமலசலகூடங்கள் இல்லாததால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன், சுற்றுச் சூழலும் பெருமளவில் மாசடைகின்றது.(த-202)

## புளியங்குளம் வைத்தியசாலையில் மனிதாபிமானத்துடன் சேவை

### மருத்துவ அதிகாரியும் ஊழியர்களும் விளக்கம்

புளியங்குளம் ஓக.19

புளியங்குளம் வைத்தியசாலைப் பணியாளர்கள் எப்போதும் மனிதாபிமானத்துடனேயே செயற்டுகின்றனர்.

மேற்படி மருத்துவமனையின் வைத்திய அதிகாரியும் ஊழியர்களும் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

28-07-2005 திகதிய உதயன் பத்திரிகையில் மேற்படி வைத்தியசாலை தொடர்பாக வெளிவந்த செய்தி தொடர்பாக அனுப்பியுள்ள விளக்கக் கடிதத்திலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அதில் குறிப்பிட்டுள்ளதாவது:-

புளியங்குளம் வைத்தியசாலையில் நோயாளர்கள் உரியமுறையில் கவனிக்கப்படுவதில்லை என்று எவரும் இதுவரை வைத்திய அதிகாரியிடம் முறையிடவில்லை. ஊழியர்கள் எவரும் நோயாளருடன் மரியாதைக் குறைவாக நடந்துகொள்வதுமில்லை. நோயாளர்கள் நீண்டநேரம் காத்திருப்பதில்லை.

இந்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு உரிய நேரத்தில் திறக்கப்பட்டு உரிய நேரத்தில் மூடப்படுகிறது. வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மூடப்பட்ட பின்வரும் நோயாளர் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிப்பதே வழமையான செயற்பாடு. இந்த வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதி தவிர்ந்த நோயாளர் விடுதி இல்லை. ஆனாலும், வெளிநோயாளர் பிரிவு மூடப்பட்ட பின்னரும் அவசர நோயாளர் மட்டுமல்லாது சாதாரண காய்ச்சல், புண்கள் ஆகிய பாதிப்புகளுக்கும் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.

புளியங்குளம் வைத்தியசாலை மனிதாபிமான அடிப்படையுடன் செயற்படுகிறது.

- இவ்வாறு வைத்திய அதிகாரியும் ஊழியர்களும் தெரிவித்துள்ளனர்.

(ஒ)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு முருகேசு(பொலிசர்)
(பொலீஸ் பென்சனியர்)



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு அவர்கள் நேற்று (18.08.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு- சின்னத் தங்கத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற நெல்லுக்காரக் கந்தையா -ஆச்சிக் குட்டியின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான நல்லம்மா, குணரத்தினம், அன்னம்மா, விசாலாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அன்னலக்சுமியின் அன்புக் கணவரும் ஜெயமனோகரன் (கனடா), ஜெயதேவி, ஜெயராசா (கனடா),ஜெயஆனந்தன் (கனடா), காலஞ்சென்ற ஜெயகாந்தன் மற்றும் ஜெயமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தினி (கனடா), குலேந்திரன் (பிறவுண் றோட்), தனலட்சுமி (கனடா),சித்திரா (கனடா),சிறீதரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் கங்காயினி (கனடா), ஜாமினி (கனடா), அனோஜன் (2003 A/L, யாழ். இந்துக்கல்லூரி), அனுசன் (யாழ். பல்கலைக்கழகம் விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவன்), அனித்தியா (வேம்படி மகளிர் கல்லூரி), ஜெயகாந்தன் (கனடா), திவ்வியா (கனடா),சத்தியா (கனடா), விஜிதரன் (கனடா), அன்புஜா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20-08-2005) சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சங்கம்புலவு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

பருத்தியோலை,
கந்தரோடை. (39050) (19-11-21)

## சாரதி தேவை

கொழும்பிலே சேவையாற்ற சாரதி தேவை. உணவு - தங்குமிட வசதி செய்து தரப்படும். (39029)(21-11-19)

**தொடர்பு: 0777 - 393827**

## பரம்பரை மருத்துவர்களுக்கான

### கலந்துரையாடல்

யா/மாவட்ட சித்த ஆயுள்வேத
(பதிவு பெற்ற / பதிவு பெறாத)
மருத்துவர்களுக்கான விசேட கலந்துரையாடல்
இடம்:- முருகானந்தா வைத்திய நிலையம்,
கண்டி வீதி, மாம்பழம் சந்தி.
காலம்:- *21.08.2005* ஞாயிற்றுக்கிழமை
மாலை 2 மணி

*அனைவரும் தவறாது சமுகம் தரவும்*

Dr.க.சோதிதாசன்
(RIMP) Cey.

Tel. 077-6284687
(39057)(21.11.19)

## திருத்த வேலைகள்

குருநகர் புதுமை மாதா கோயிலில் திருப்பலி நிறைவேற்றப்படும் பகுதி உடைத்துத் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது. இக்கட்டடப் பணிகளுக்கு குருநகரைச் சேர்ந்த மக்களும், புதுமை மாதாவின் பக்தர்களும் நிதி உதவிகளை வழங்கி வருகிறார்கள் எனக் குருநகர் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எச். சகாயநாயகம் அடிகளார் தெரிவித்தார். (202 -51)

* * *

சுழிபுரம் ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டடம் திருத்தம் செய்யப்பட்டு வருகின் றது. கிராம சபை வாசிகசாலையாக முன்னாள் அமைச்சர் அமரர் எஸ்.டபிள்யூ. பண்டார நாயக்காவினால் திறந்த வைக்கப்பட்ட கட்டடம், வைத்தியசாலையாகவும் வாசிகசாலையாகவும் செயற்பட்டு வந்தது. பின்னர் முழுமையாக ஆயுள்வேத வைத்தியசாலையாக இயங்கி வருகின்றது. மிகப் பழைமையான இக்கட்டடத்தின் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருத்த வேலைகள் இம் மாதத்தில் நிறைவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(202-28)

### வீதிகள் இருளில்

கடந்த பல நாள்களாக சங்கானை முதல் சித்தன் கேணி வரையுள்ள வீதியோர மின்விளக்குகள் எரியாத காரணத்தால் இவ்வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன. இதனால் இரவில் பயணம் செய்பவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதுவிடயமாக மின்சாரசபை அலுவலக அதிகாரிகள் தெரிவிக்கையில், இவ் வீதியோர மின்குமிழ்கள் பழுதடைந்துவிட்டதாகவும், இவற்றைப் புதிதாகக் கொள்வனவு செய்வதற்கு நிதிப் பற்றாக்குறை உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (202-29)

## NIIT'S SPORTS DAY

**FRIENDLY CRICKET MATCH**
TRINCO NIIT Vs JAFFNA NIIT
ON
19 . 08 . 2005 ( 9. 00 a.m.)
AT
JAFFNA HINDU COLLEGE PLAYGROUND
CHIEF GUEST
MR.T.SARAVANAN
*Head of Education Delivery*
*MMBL CyberSkills (Pvt) Ltd.*

SPECIAL GUEST
MR. MICHAEL FERNANDO
Operations Manager
MMBL CyberSkills (Pvt) Ltd.

We cordially invite you.

**NIIT Jaffna Centre**

(39055)(50)

## அழைப்புக் கட்டளை

இல.16 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள/மாவட்ட நீதிமன்றத்தில்

**மத்தியூஸ் ஜெயலக்ஷ்மன்**
14,சென்ற் ஜேம்ஸ் மேற்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்

வழக்கு இல.மணநீக்கம்/565 வழக்காளி

எதிர்

**மத்தியூஸ் ஜெயலக்ஷ்மன்**
பெண் **ஆர். ஏஞ்சலா**
19,பீச்றோட், குருநகர், யாழ்ப்பாணம்.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/
எதிராளி/க்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

தமக்கும் உமக்கும் இடையே உள்ள விவாகத்தை இரத்துச் செய்ய

இந்த நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால், அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2005 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 15 ஆம் நாளன்று,அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி. இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக் காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
**து.சிறீமோகன்**
பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

வழக்காளியின் சட்டத்தரணி
**பவானி சற்குணராசா**

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ் வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**து.சிறீமோகன்,**
கையொப்பம் பதிவாளர்.

2005 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 09 ஆம் நாளாகிய இன்று. (38754) (21-19-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 12 1927



மறைவு 29 08 2004

அமரர்

### பொன்னுத்துரை நாராயணலிங்கம்
(Rtd. P.W.D OverSeer)

திதி: 19.08.2005

*அன்போடும் பாசத்தோடும் எம்மோடு இணைந்து*
*பண்புடன் வாழ்ந்த எம் இனிய அப்பாவே!*
*நீங்கள் எம்மை விட்டு மறைந்து போனாலும்*
*உங்கள் நினைவுகள் என்றும் மாறாது!*
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**

*"ரூப மகால்"*
*தேவாலய வீதி, சங்கானை.*

**D.C.S.(நியூட்டன்)**
**342, Stanly Rd., Jaffna.**

G.A.Q/B.A.
part-I
Revision and
paper
ENGLISH
பரீட்சையை நோக்கியது
ஆரம்பம்:
20.08.2005
Sat,Sun:- 7-8a.m. /5-6p.m.
Tue, Thu:- 5-6 p.m.
(39031) (21.11.19)

## கண்ணீர் அஞ்சலி

யா/ அராலி சரஸ்வதி மகாவித்தியாலய உபஅதிபர்



திருமதி சு.வசந்தகுமார் குருஸ்
அவர்களின் கணவர்

### டானியல் வசந்தகுமார் குருஸ்

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள் கிறோம்.

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
*அதிபர், ஆசிரியர்கள்,*
*உத்தியோகத்தர்கள், மாணவர்கள்.*

(3904)
(21-19-15)

**WESTERN UNION**®

## எமது அன்பான வாடிக்கையாளர்களே!

வெஸ்டன் யூனியன் மூலம் பணம்பெறும் பழைய புதிய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் கிழமை நாள்கள், போயா விடுமுறை தினங்களில் எமது 365 நாள் சேவை, நிலையத்தில் காலை 8மணி முதல் மாலை 8வரை பணத்தைப் பெற்றுக்கொள்ள வரும்போது உங்கள் உறவினர் தந்த பத்து இலக்கத்தை (Control No) கொண்டுவந்து உடன் பணத்தை பெற்றுக்கொள்ளவும் (இரகசியம் பேணப்படும்).




மேலும் சேவைகள்:
1. உலகெங்கும் 3 நாள்களில் பார்சல் தபால் சேவை
2. விமானப் பயணச்சீட்டு
3.நாடெங்கிலும் வாகன சேவை
4.முத்திரை, வெளிநாட்டு உள்நாட்டு தொலைபேசி அழைப்புகள், பக்ஸ் வசதி, போட்டோக் கொப்பி இவை அனைத்திற்கும்

(39056)(50)



**குமார் முகவர் தபால்நிலையம்**
133/3. மின்சார நிலைய வீதி
(பஸ்நிலையம் அருகில்) யாழ்ப்பாணம்.
தொ.பே.222 7727.
அன்பான உபசரிப்பும் கனிவான சேவையும்.



யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையேயான தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜெயரூபன் முதலிடம் பெற்றார். 36 நிமிடங்கள் 42.2 வினாடிகளில் போட்டித் தூரத்தை ஓடி முடித்த அவர், முடிவிடத்தை அடைவதைப் படத்தில் காணலாம். *(படம் :தமிழினியன்)*

# காலி-யாழ்.அணிகளுக்கிடையே நாளை நகரில் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.19

காலி மாவட்ட அணியும் யாழ். மாவட்ட அணியும் மோதும் சிநேகபூர்வ உதைபந்தாட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

நாட்டின் பிரபல உதைபந்தாட்டக் கழகங்களான ரெட்ணம் மற்றும் சவுண்டஸ் ஆகியவற்றின் வீரர்கள் காலி அணியில் இடம்பெறுகின்றனர் என்றும் -

காலி மாவட்ட ஆழிப்பேரலை எச்சரிக்கை நிலைய அங்கத்தவர் ஒஸ்காரின் ஏற்பாட்டில் இப்போட்டி நடைபெறுவதாகவும் -

யாழ். உதைபந்தாட்ட லீக் தலைவர் தெரிவித்துள்ளார்.


இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் பிரமுகர்களும் காலி அணியுடன் நாளை யாழ் வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஒ)

# தேசிய மட்டத்துக்குத் தெரிவானார்



யாழ்ப்பாணம்,ஓக.19

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவன் பத்மநாதன் நிரோசன் சட்டவேலிப் பாய்ச்சலில் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பதினைந்து வயதுக் குட்பட்டவர்களுக்கான சட்டவேலிப் பாய்ச்சலில் மாகாண மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்று இவர் தேசிய மட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளார்.



**கொய்யாத்தோட்டம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தின் 27ஆவது ஆண்டு விழாவையொட்டி கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடத்தப்பட்டது. இதில் இளங்கதிர் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது. இதற்கான பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட டி.ஏ.எம். குணசிங்கத்திடமிருந்து இளங்கதிர் அணியின் தலைவர் மலரவன் பரிசு பெறுவதைப் படத்தில் காணலாம். (ஒ-190)**

# இந்தியாவில் முதன்முறையாக 20 ஓவர் கிரிக்கெட் அறிமுகம்

ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நடந்து வந்தது. சர்வதேச கிரிக்கெட் சபை அறிமுகப்படுத்திய இந்தப் போட்டி தற்போது இந்தியாவில் முதன்முறையாக இன்று அறிமுகமாகிறது.

பிராட்மேன் கோப்பைக்கான இந்த 20 ஓவர் கிரிக்கெட் போட்டி பெங்களூரில் இன்று நடக்கிறது. போட்டிகள் இன்று தொடங்கி 21ஆம் திகதி முடிவடைகின்றன.

இந்தக் கிரிக்கெட் போட்டியில் மொத்தம் 6 அணிகள் கலந்து கொள்கின்றன. இவை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன இதில் கர்நாடக கிரிக்கெட் சங்கம், பிராட்மேன் உலக லெவன்,செம்ப்ளஸ்ட் ஆகிய அணிகள் 'ஏ' பிரிவிலும் சவுத்லெல்ஸ் ஏர் இந்தியா, மேற்கு வங்க கிரிக்கெட் சங்க அணிகள் பி.பிரிவிலும் இடம்பெற்றுள்ளன. லீக் மற்றும் நொக் அவுட் முறையில் போட்டிகள் நடக்கின்றன.

இந்திய கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக்காரரான டோனி, பாலாஜி, ரெய்னா ஆகியோர் இந்தப் போட்டியில் பங்கேற்றுள்ளனர். மேலும் பாகிஸ்தான் வீரர்களான மாலிக், சல்மான்பட், கமரன் அக்மால், சமி இலங்கை வீரர்கள் களுவிதாரன, சந்தன ஆகியோரும் விளையாடுகின்றனர். இதனால் போட்டிகள் மிகவும் பரபரப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ)

# சைக்கிளோட்ட வீரர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஓக.19

சுண்டுக்குழி கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இன்று வெள்ளிக்கிழமை 25 கிலோ மீற்றர் சைக்கிளோட்டப் போட்டி நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப்போட்டியில் கலந்துகொள்ளவிரும்புபவர்கள் நேரில் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-202)

விளையாட்டு

# இரண்டு ஓட்டங்களில் வென்றது ஆபிரிக்க அணி

ஆசிய அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் ஆபிரிக்க அணி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


ஆசிய, ஆபிரிக்க அணிகள் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் தென் ஆபிரிக்காவில் நடக்கிறது. முதல் போட்டி செஞ்சுரியன் நகரில் நேற்று முன்தினம் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற ஆசிய அணித் தலைவர் இன்ஸமாம் களத்தடுப்பதைத் தேர்வு செய்தார். பந்துவீச்சில் சஹீர் கான் அருமையான துவக்கம் அளித்தார். இவருக்கு அக்தர், நெஹ்ரா சிறப்பான ஒத்துழைப்பு தர ஆபிரிக்க அணி 57 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து பரிதாப நிலையை எட்டியது. இந்நிலையில், ஆறாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த பிரின்ஸ், பவுச்சர் அணியை மீட்டனர். இந்த ஜோடி 84 ஓட்டங்கள் பெற்ற நிலையில் பவுச்சர் (42) முரளிதரன் சுழலில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற 44.3 ஓவரில் 198 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பொறுப்புடன் ஆடிய பிரின்ஸ் 78 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 199 ஓட்ட இலக்குடன் களமிறங்கிய ஆசிய அணிக்கு பொலக் அதிர்ச்சி அளித்தார். ஆட்டத்தின் 11வது ஓவரில் இவர், ஷேவாக் (21), யுகானா (1), அஸ்ரபுல் (0) மூவரையும் வெளியேற்ற ஆசிய அணி திணறத் துவங்கியது. இக்கட்டான நிலையில் களமிறங்கிய அணித்தலைவர் இன்ஸமாம் (3) கூட அணியை மீட்கத் தவறினார். தனக்கே உரித்தான பாணியில் அதிரடியாக ஆடிய அப்ரிடி (13) அதிக நேரம் நீடிக்கவில்லை.

நிதானமாக ஆடிய சங்ககார (35) கலிஸிடம் விக்கெட்டைப் பறி கொடுத்தார். இப்படி துடுப்பாட்ட வீரர்கள் அனைவரும் வெளியேறிய நிலையில் ரசாக், அனில் கும்ளே ஜோடி சேர்ந்து அசத்தத் துவங்கினர். ஒருமுனையில் ரஸாக் (38) விரைவாக ஓட்டங்களைப் பெற கும்ளே (24) நல்ல ஒத்துழைப்பு அளித்தார். இந்த ஜோடி 56 ஓட்டங்களைப் பெற்றது.

அடுத்து வந்த சஹீர், அக்தர் சிறப்பாக ஆட 18 பந்துகளில் 12 ஓட்டங்களாக இலக்கு மாறியது. அப்போது கெம்ப் பந்தில் அக்தர் இமாலய சிக்சர் அடிக்க வெறும் 6 ஓட்டங்களாக இலக்கு குறைந்தது.

ஆனால் அடுத்த பந்தில் இவர் வெளியேற ஆட்டத்தின் முடிவே மாறியது. கடைசி வீரராக வந்த இந்திய வீரர் நெஹ்ரா (1) 3 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஸ்டீபன் பந்தில் ஆட்டமிழந்தார். இதன் மூலம் ஆசிய அணி 48.1 ஓவ ரில் 196 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. (ஒ)



**பாகிஸ்தான் அணியின் வேகப் புயல் சொஹைப் அக்தருக்குப் பக்கத்தில் இந்திய அணியின் நெஹ்ரா மற்றும் இலங்கை அணியின் முரளிதரன் நிற்கும் இந்தக் காட்சி ஆபிரிக்க - ஆசிய ஒருநாள் கிரிக்கெட் போட்டியில். இதில், ஆபிரிக்க வீரர் ஆபிரகாம் டீ வில்லியர்ஸின் விக்கெட்டை வீழ்த்திய அக்தரைப் பாராட்டத்தான் ஆசிய அணி வீரர்கள் கூடி உள்ளனர். கடந்த சில மாதங்களாக அக்தருடன் கருத்து முரண்பாடு கொண்டிருந்த இன்ஸமாம் அவரைப் பாராட்ட வருவது குறிப்பிடத்தக்கது.**

# நீண்ட இடைவெளியின் பின் பயிற்சியை ஆரம்பித்தார் சச்சின்



இந்தியக் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் இடது முழங்கை காயத்தால் (டென்னிஸ் எல்போ) நீண்ட நாள்கள் சிரமப்பட்டார். கடந்த மே மாதம் அவருக்கு சத்திர சிகிச்சை நடந்தது. அதற்குப் பிறகு நீண்ட ஓய்வெடுக்குமாறு மருத்துவர்கள் அவரை அறிவுறுத்தினர். ஆகவே, சமீபகாலப் போட்டிகளில் சச்சினின் ஆட்டத்தை பார்க்க முடியவில்லை.

மூன்று மாத ஓய்வுக்குப் பிறகு, கடந்த செவ்வாய்க்கிழமை முதன் முதலாக பயிற்சி செய்தார் சச்சின். சிறிது நேரமே துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபட்டார். பிறகு செய்தியாளர்களுக்கு அவர் அளித்த செவ்வியில் -

மிக நீண்ட இடை வெளிக்குப் பிறகு மீண்டும் பயிற்சி தொடங்கியிருக்கிறேன். இப்போதைக்கு மிகவும் குறைந்த நேரமே பயிற்சி செய்யமுடிகிறது. நான் அவசரப்பட விரும்பவில்லை. மிகக் குறைந்த வேகத்தில், அதாவது மணிக்கு 40 கி.மீ., வேகத்தில் வீசப்பட்ட பந்துகளில் பயிற்சி செய்தேன். வழக்கமாக சர்வதேசப் போட்டிகளில் மணிக்கு 90 மைல் வேகத்தில் பந்து வரும்.

இப்போதைக்கு அவ்வளவு வேகமாகவரும் பந்துகளை விளையாட முடியாது. காரணம், சத்திர சிகிச்சை செய்த இடம் இப்போது தான் குணமாகி வருகிறது. உடனடியாக, அங்கு அதிகப்பளு கொடுக்கக் கூடாது. போகப், போக வேகத்தையும், பயிற்சி செய்யும் நேரத்தையும் அதிகரிக்க முடிவு செய்திருக்கிறேன்.

- இவ்வாறு தெரிவித்தார் சச்சின் டெண்டுல்கர். (ஒ)

# இந்து இளைஞர் வி.க. வெற்றி பெற்றது

கைதடி,ஓக.19

மட்டுவில் தெற்கு, வளர்மதி சனசமூக நிலையத்தின் 40ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றது. (ஒ-75)

# டெஸ்ட் தொடரை வென்றது நியூஸிலாந்து

ஸிம்பாப்வே அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடரை நியூஸிலாந்து அணி 2-0 என்ற முன்னிலையில் கைப்பற்றியது.

ஸிம்பாப்வே வந்துள்ள நியூஸிலாந்து கிரிக்கெட் அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் டெஸ்டில் நியூஸிலாந்து அணி இன்னிங்ஸ் மற்றும் 294 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இரண்டே நாளில் வெற்றி பெற்றது. இரண்டாவது டெஸ்ட் புலவாயோ நகரில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் ஸிம்பாப்வே 231 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 454 ஓட்டங்களுடன் இருந்தது. ஆஷ்லே 116, பிராங்கிளின் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. ஆஷ்லே 128 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இந்த அணி முதல் இன்னிங்ஸில் 434 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சிறப்பாக பந்து வீசிய ஸ்டீரிக் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். 253 ரன் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்சை துவக்கிய ஸிம்பாப்வே அணி மீண்டும் தடுமாறியது. முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய பொண்ட் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட் வீழ்த்தினார். துவக்க ஆட்டக்காரரான டெய்லர் 77 ஓட்டங்கள் எடுத்து ஆறுதல் அளித்தார். கடைசி நேரத்தில் விளாசிய மாவையர் (50) அரை சதம் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில் ஸிம்பாப்வே அணி 207 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் இன்னிங்ஸ் மற்றும் 46 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இரண்டு டெஸ்டிலும் அபார வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி 2-0 என்ற முன்னிலையில் கோப்பையைக் கைப்பற்றியது. (ஒ)

# ஆஸி.வீரர் கிளார்க் புது முடிவு

பந்து வீசுவதை இனி நிறுத்திக் கொள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மைக்கேல் கிளார்க் முடிவு செய்துள்ளார்.

ஆஸ்திரேலிய இளம் கிரிக்கெட் வீரர் மைக்கேல் கிளார்க், துடுப்பாட்டக்காரரான இவர், சிறந்த பந்து வீச்சாளரும் கூட. துரதிர்ஷ்ட வசமாக, கடுமையான முதுகு வலியால் அவதிப்படுகிறார். முதுகில் பிரச்சினை காரணமாக, ஆஷஸ் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாட முடியாமல் இவர் சிரமப்பட்டார். அவரது பிரச்சினையை குணப்படுத்தவே முடியாது என்று டாக்டர்கள் தெரிவித்தனர். ஆகவே, இனி பந்து வீசுவதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறார் கிளார்க்.

''ஓல்ட் டிரபோர்ட் போட்டியில் என்னால் விளையாடவே முடியவில்லை. அந்தளவுக்கு கடுமையான வலி. நீண்ட காலமாகவே இந்த வலி இருந்தது. இந்த வலி எனது கிரிக்கெட் வாழ்க்கையையே பாதித்துவிடும் என்றால், அதற்கு உடனடித் தீர்வு காணவேண்டியது அவசியம். எதைச் செய்தால்; அல்லது எதை செய்யாமல் இருந்தால் இந்த வலி நிற்கும் என்று டாக்டர்களிடம் கேட்டிருக்கிறேன். பந்து வீசுவதை நிறுத்திக் கொண்டால் பிரச்சினை இல்லை என்பது உறுதி செய்யப்பட்டால், வேறு வழியில்லை நிறுத்திக் கொள்ளவேண்டியது தான்,'' என்றார் கிளார்க். (ஒ)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப்பதக்கம்

மேற்படி பதக்கங்களை வழங் கும் பொருட்டு 2005-10-06 நடை பெறவிருக்கும் 2005ஆம் ஆண்டிற் கான பொதுப் பட்டமளிப்பு விழா வில் பட்டம் பெறவிருக்கும் முதலாம், இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்பில் சித்தியடைந்தோரிடம் இருந்து விண் ணப்பங்கள் கோரப்படுகின்றன. பல் துறைத்திறமை வாய்ந்த பட்டதாரி களுக்கான இப்பதக்கங்கள் கல்வி யிலும் விளையாட்டிலும் ஏனைய சிறப்புச் செயற்பாடுகளிலும் மாண வர்கள் ஈட்டிய தேர்ச்சிகளை மதிப் பீடு செய்து வழங்கப்படும்.

**வீண்ணப்பங்கள்**

(I) உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

(2) உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா.

(3) பல்கலைக்கழக அலுவலகம், ஈஜீ 04, சென்றல் றோட், கொழும்பு 12.

ஆகிய முகவரிகளிலும் பெற் றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப் பட்ட படிவங்களை 'உதவிப் பதி வாளர், கல்விக்கிளை, யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம்' என்னும் முகவரிக்கு 2005-09-05ஆம் திக திக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பதிவாளர்,**
**யாழ்.பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**
2005-08-17.

(சி-44555) (26-14-24)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
### முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
### இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள்
### (Business English) - 2005

**முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் பின்வரும் BAd/B.Com. மாணவர்களில் அனைத்துப் பாடஅலகு களிலும் சித்திபெற்றும் இரண்டாம் மொழி ஆங்கிலத்தில் (Business English) மாத்திரம் சித்தியின்மையால் பட்டக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்யமுடியா துள்ள மாணவர்களுக்காக இரண்டாம் மொழி ஆங்கிலப் பாடத்திற்கான (Business English) விசேட மீள் பரீட்சை களுக்கு விண்ணப்பங்கள் 22.08.2005 ஆம் திகதிமுதல் 02.09.2005ஆம் திகதி வரை பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.**

★ முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு
★ இரண்டாம் வருடம் இரண்டாம் அரையாண்டு [பகுதி -I]
★ மூன்றாம் வருடம் இரண்டாம் அரையாண்டு [பகுதி -II]

மீள் பரீட்சைக்குத் தோற்றுவோர் ஒரு பாடத் துக்கு (பழைய/ புதிய பாடத்திட்டம்) ரூபா 50/= வீதம் பல்கலைக்கழகக் காசாளரிடமோ அல்லது பல்கலைக்கழக மக்கள் வங்கி கிளையிலோ செலுத்திய பற்றுச்சீட்டை விண்ணபத்துடன் இணைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங் களை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடா திபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-44556) (24-14) **- பதிவாளர்.**

---

திருமணக் கார் (குளிரூட்டப்பட்டது)



## வாடகைக்கு

✱ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
✱ விசேட வைபவங்கள் ✱ சுற்றுலாக்கள்

போன்ற அனைத்து சேவைகளுக்கும் புதிய குளிரூட்டிய நவீன கார் வாடகைக்குண்டு.

தொடர்பு:

**சிவா வீடியோ லைபிறறி**
இராமலிங்க வீதி, முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு. (39059) (24-14)

---

## சங்கானையில் புற்றுநோய் சிகிச்சை

சங்கானை ஓக.19

புற்றுநோயால் தாக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருபவர்கள் மற்றும் இந்நோயிற் கான அறிகுறிகள் தென்படுவோர் போன் றோரின் வசதிக்காக நேற்றுமுன்தினம் முதல் சங்கானை வைத்தியசாலையில் சிகிச்சை முகாம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சிகிச்சை முகாமில் புற்றுநோய் வைத் திய நிபுணர் என்.ஜெயக்குமாரன் மற்றும் வைத்திய நிபுணர் எம்.எஸ்.முகுந்தன் ஆகியோர் பணிபுரிகின்றனர். இச்சிகிச்சை முகாம் ஒவ்வொரு மாதத்திலும் வரும் மூன்றாவது வாரத்தின் புதன்கிழமை காலை 9 மணிமுதல்12 மணிவரை நடை பெறும் என வைத் திய நிபுணர் தெரி வித்துள்ளார்.

(202-29)

## கோப்பாயில் கொல்களம்

கோப்பாய்,ஓக.19

வலி.கிழக்குப் பிரதேச சபைப் பகுதியில் கால் நடைகளை வெட்டு வதற்கான கொல் களம் கோப்பாய் தரவையில் அமைக் கப்பட்டு வருகிறது.

இதன் நிர் மாணப் பணி எதிர் வரும் செப்ரெம்பர் மாத நடுப்பகுதியில் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகி றது.

---

| A/L-2006 PAPER CLASS | 2007 பிரிவு-II |
| --- | --- |
| தமிழ் - M.சுரேஸ் | புவியியல் - S.கிருஸ்ணா |
| நாடக. - I.சத்தியா | இ.நா. - S.சுரேஸ் |
| அரசியல் - T.திருமுருகன் | இ.சமயம் - சுத்த சத்தியதாசன் |
| கிறிஸ்தவம் - S.ரங்கன் | வரலாறு - S.பத்மன் |

Note: ★ வாராந்தம் - 5 மணித்தியாலய வகுப்புகள்
★ மாதாந்தப் பரீட்சை
★ அச்சடித்த பாடக்குறிப்பு இலவசம்

ஆரம்பம்:- 20-08-2005
யாழ்.நகர் - 8 மணி இணுவில் - 3 மணி (O.T.)

யாழ்.நகர் - D.C.S. நியூட்டன் ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்.நகர்.

இணுவில். திகழ் கல்வி நிறுவனம் K.K.S. வீதி, இணுவில். (39036) (24-14)

---

## முதலாம் ஆண்டு நினைவலை

மண்மகிழ 11 - 12 - 2000



கண்நெகிழ 30 - 08 - 2004

### ஸ்ரீஸ்கந்த நாராயணன் கபிலவர்மன்

திதி: 19-08-2005 பூரணை

நெஞ்சம் நிறைந்த கபில்
ஒடி முடிந்தது ஓராண்டு
ஓயவில்லை எம் துயரம்
கண்ணழகும் உன் கதையழகும்
குருத்து மலர்முகமும் காணாது - எம் இதயம்
குமுறும் எரிமலையாய்
கொளுத்தி எரியுதையா

வேலணை - 02. தாய், தந்தை, அண்ணன்.

(39083)(21-14-24)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 03 - 08 - 1961



மறைவு 23 - 08 - 2002

### திருமதி தவகோபால் தேவராணி (தேவா)

திதி: 19-08-2005

அன்பிற்கே அன்னையான நீங்கள்
ஆழ்ந்த தூக்கம் கொண்டதேன்?
இயற்கையின் நியதி இறைவனடி சேர்தல்
எம்முடன் நீங்கள் என்றும் வாழ்வீர்கள்!

பிரிவால் துயருறும்:

ஹரிஓம், பலாலி வீதி, உரும்பிராய். **கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்.**

(39061)(26-14-24)

---

## இவ்வருடம் நடைபெறும் இலவச தொலைக்கல்வி பாடநெறிக்கான

# இலவச நேரடி வகுப்பு

## இடம் : யாழ் மத்திய கல்லூரி
## காலம் : 19.08.2005 நாளை

**குறிப்பு :** 20ம் திகதி நடைபெறவிருந்த கருத்தரங்கு 19ம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது

**நேரம் :** 9.00 முதல் 11.00, 11.00 முதல் 1.00, 2.00 முதல் 4.00, 4.00(முதல்6.00)

(மேலுள்ள நான்கு வகுப்புகளில் ஏதாவதொன்றில் கலந்துகொள்ளலாம்)

**இந்த இலவச பாடநெறியில் பதிவுசெய்வோருக்கு அனுமதி, 60 பாட அலகுகள், நேரடி வகுப்புகள், பரீட்சை மற்றும் சான்றிதழ் உட்பட அனைத்தும் முற்றிலும் இலவசம்.**

## அனுமதி முற்றிலும் இலவசம்

---

## மரண அறிவித்தல்

### திருமதி பரராஜசிங்கம் கிருஷ்ணவதி



புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தி னைப் பிறப்பிடமாகவும் இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடத்தினை வசிப்பிட மாகவும் கொண்ட பரராஜசிங்கம் கிருஷ்ண வதி புதன்கிழமை அன்று (17.08.2005) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப் பிரமணியம் - சீதேவிப்பிள்ளை தம்பதி யரின் ஏகபுதல்வியும் காலஞ் சென்றவர் களான தர்மலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மருமக ளும் காலஞ்சென்ற பரராஜசிங்கம் (Jaffna Traders) யாழ்ப் பாணம் அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீறஜனி (Australia), ஸ்ரீகரன், ஸ்ரீமுகுந்தன் ஆகி யோரின் பாசமிகு தாயும் கௌரி (Canada), சிவபாலன் (Australia), தயராஜினி, அனுசூயா ஆகியோரின் அன்பு மாமியும் நிருஜா, நிவேதா, பிரவீணன், பிரதாபன், ஜாகவன், ஜாகுலன், அட்சயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இரத்தினபூபதி, சண்முகராஜா, நாக ரத்தினம் மற்றும் இராசையா, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான நாகேஷ், சிவநாமம் மற்றும் சரஸ்வதி, ஞானாம்பாள், விஜயலஷ்மி ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (21.08.2005) காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் பத்து மணி யளவில் யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/7 இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 3205 (சி/44553)(24-14)

தகவல்:
*மக்கள், மருமக்கள்.*

---

# இதோ வாருங்கள் வந்து பாருங்கள்

## மிதிவெடி செயற்பாட்டு வாரக் கண்காட்சி

**இடம்:** O.L.R. மகாவித்தியாலய மைதான முன்றில்
**காலம் :** 18.08.05 - 20.08.05 வரை
**நேரம்:** முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணிவரை

மிதிவெடி செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் ஒருங்கிணைவுடன் மிதிவெடி செயற் பாட்டின் பங்குதாரர் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் மிதிவெடி செயற்பாடுகள் தொடர்பான கண்காட்சி.

எமது சமூகத்தை மிதிவெடி அபாயத்தில் இருந்து மீட் டெடுக்க அனைவரும் அணி திரண்டு

**பார்வையிட்டு**
**பயனடைவோம்.**

(39006)(26-24-14)

*மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம்.*

### வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்
## மணல் விநியோக அறிவித்தல்

1.செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு இன்று 19.08.2005 மணல் விநியோகம் நடைபெறமாட்டாது.

2.எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் (22ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிகள்) அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிற்கான மணல் விநியோகம் நடைபெறமாட்டாது. அத்திகதிகளில் உலகவங்கி வீட்டுத்திட்டம், யு.என்.எச்.சி.ஆர். வீட்டுத்திட்டம், சுனாமி வீட்டுத்திட்டம் ஆகியவற்றுக்கான மணல் விநியோகம் மட்டும் நடைபெறும். (சி-44562) - நிர்வாகம்.


## அதிரடி விலைக்கழிவில்



எந்தப்பிரதேசத்துக்கும் ஏற்றவகையில்
டயலொக், மொபிற்றல் GSM
மேசைத்தொலைபேசிகள் வீடுகளுக்கும்
அலுவலகங்களுக்கும் பொருத்தித்தரப்படும்.
உத்தரவாதம் உண்டு.
10,000/=
15,000/=
18,000/=

டயலொக் GSM 500/= பக்கேஜ்
மொபிற்றல் GSM 300/= பக்கேஜ்

### உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

தொடர்புகளுக்கு: **பவர் செலூலர் ட்ரேடிங் கம்பனி**
Office : 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி,
(வின்சர் தியேட்டர் எதிராக)
Shop: 205/1 கஸ்தூரியார் வீதி,
(ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம். (சி-44079)
**Tel: 0712 - 399220, 0714 - 182500, 0773 - 518330**


### 17.08.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்



செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 200527663
இலிருந்து 200545685 வரை

சீட்டிழுப்பு இல. 1633

வெற்றி எண்கள்
**20 44 50 69**
சுப்பர் எண் **03**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.45,64,900/- வெல்லப்பட்டுள்ளது**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 01 | 45,64,900/- | 45,64,900/- |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 27 | 5,000/- | 1,35,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 488 | 1,000/- | 4,88,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,591 | 500/- | 7,95,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 23,539 | 40/- | 9,41,560/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 22,345 | 20/- | 4,46,900/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,34,711 | 10/- | 33,47,110/- |
| | | மொத்தம் | 1,17,18,970/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம்,பைசிக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 1,22,18,970/- |

**இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 20,00,000/-**

தொடர் இல. 300506400 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஆகஸ்ட் 20 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் பைசிக்கிள் அடங்கிய பரிசு முறையை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கொழும்பு | 200542927-8-39 |
| அனுராதபுரம் | 200538580-5-83 |
| மாத்தறை | 200529500-4-81 |
| களுத்துறை | 200533377-8-37 |
| மாத்தளை | 200535361-7-45 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை

### திருமணக்கார் வாடகைக்கு (குளிரூட்டியது)

திருமணவைபவங்கள் (அலங்காரத்துடன்), விசேட வைபவங்கள்,சுற்றுலாக்கள் போன்ற அனைத்து தேவைகளுக்கும் புத்தம்புதிய குளிரூட்டிய நவீன கார் நியாயமான வாடகையில் உயர்ந்த சேவையுடன் கிடைக்கும்.
T.P. 0777 733066, 0776 622142
தொடர்பு: R.சதீஸ், யாழ்வோச்,
55, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (39069)

## தவறிவிட்டது

பாலசுந்தரம் கார்த்திகேயன் என்பவரது கடவுச்சீட்டு [Sri Lankan Pass port (British Residence Permit], Air Lanka Flight Ticket என்பன நேற்று *(18.08.2005)* வியாழக்கிழமை யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (39062)(29-13-16)

**20, குறொசற் ஒழுங்கை,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**
T.P. : 0777 487911

## காணியுடன் பெரிய கட்டடம் விற்பனை

வட்டுக்கோட்டைக்கு அண்மையில் 15 பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளுடன்கூடிய 8,000 சதுர அடிக் கட்டடம் விற்பனைக்குண்டு. மின்சாரம் 3 பேஸ், நன்னீர் கிணறு, 9' உயர சுற்றுமதில், பெரிய வாகனத் தரிப்பிட வசதி உண்டு. தொழிற்சாலைகள், தனியார் வைத்தியசாலை, திருமண மண்டபம் முதலியவற்றுக்கு உகந்தது. மேல்மாடி வீடாகவும் பாவிக்கலாம்.
தொடர்பு: T.P.077 6589400 (39064)


### நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின அதிரடி வெளியீடாக இளைய புயல் ஜெயம் ரவி, ரேணுகா மேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த
**தாஸ்** (நீலம்)
காட்சிகள்: 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே). (சி-43380)

### மனோகரா யாழ்ப்பாணம்

18 ஆம் திகதி வரை **பிரியசகி**
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 20 ஆம் திகதி முதல மீண்டும்
**அந்நியன்** விக்ரம், சதா, விவேக்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) (சி-44110)

### ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதின வெளியீடு காதல் புகழ் பரத்,
ரேணுகா மேனன்
**பெப்ரவரி 14**
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.20 (பு.நே.)

### நாதவீஸ் சினிமா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக அர்ஜுன், சினேகா,கிரண், வடிவேல் நடித்த

**சின்னா**
கா.நே.: 10.30,2.30, 6.30,9.30. (பு.நே.) (சி-43363)







# மரண அறிவித்தல்கள்

## இராசையா இரத்தினசபாபதி
### (கணக்காளர் - கனடா)

90, சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இ.இரத்தினசபாபதி நேற்று (18.08.2005) வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி இராசையா (ஆ.இராசையா அன் சன்ஸ்-யாழ்ப்பாணம், வவுனியா) அவர்களின் சிரேஷ்ட புதல்வனும் திருமதி சத்தியபாமாவின் (டெய்சி) அன்புக் கணவரும் காலஞ்சென்ற சின்னத்துரை திருமதி சின்னத்துரை அவர்களின் மருமகனும் இளங்கோ, இளஞ்செயன், அனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினபூபதி (கனடா), இந்திராணி (ஆஸ்திரேலியா), இராசரத்தினம் (ஆ.இராசையா அன் சன்ஸ், வவுனியா), டாக்டர் இராமநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தியாகராசா, இராசரெத்தினம், சோதிமலர், வசந்தா, திருமதி கு.சரோஜினிதேவி, ஜெயபதி, சற்குணதேவி, டாக்டர் சகுந்தலாதேவி, சந்திரலீலா, சாந்தினி, டாக்டர் சுசீலா, சுலோசனா ஆகியோரின் மைத்துனரும் ஜெயராணி, மீனலோஜினி, முருகார்சன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*90, சட்டநாதர் வீதி,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (39076)(29-13-16)

தகவல்:
**ந.கேதீஸ்வரன்.**

## திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி



நல்லூர், பூநகரியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி விநாயகமூர்த்தி அவர்கள் நேற்று (18.08.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் விநாயகமூர்த்தியின் அன்பு மனைவியும் இராஜேஸ்வரி, பாலசிங்கம் (நோர்வே), சிவநாதன் (பிரான்ஸ்), சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுமதினி (நோர்வே), சிவகுமார் (நோர்வே),சாந்தினி (நோர்வே), சுகந்தினி (ஆசிரியை, யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சதீஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் புவேந்திரன் (நோர்வே), நவநந்தினி (நோர்வே), உமைபாலன் (நோர்வே), சிவகுமார் (ஆசிரியர், யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் அனுஷன், நிதுஷா, நிறுஜனா, அகிந், ஆகாஷ், ஜெனிக்சன், ஆர்த்திகா, சாருகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (21.08.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணிக்குத் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தாமோதரம்பிள்ளை வீதி,*
*சாவகச்சேரி.* (39074)(29-13-16)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## திருமதி பார்வதி வயிரவி



வசந்தபுரம், இளவாலையைப் பிறப்பிடமாகவும் விக்னேஸ்வரா வீதி, சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பார்வதி வயிரவி நேற்று (18.08.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது மகனின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*விக்னேஸ்வரா வீதி,*
*நிச்சாமம், சங்கானை.* (39075)(29-13-16)

தகவல்:
**வ.செல்வம் (மகன்),**
சமூக சேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், வேலணை.

## ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாதக் குருக்கள் விஸ்வநாதக் குருக்கள்



குருக்கள் பகுதி, கரணவாய் கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ செ.விஸ்வநாதக் குருக்கள் நேற்று(18.08.2005) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் அமரர் ஸ்ரீமதி கோமேதகவல்லியம்மாவின் அன்புக் கணவரும் சொக்கநாதன் (அபிவிருத்தி இணைப்பாளர் - பிரதேச செயலகம், தென்மராட்சி), செவ்வந்திநாதக்குரு (ஆசிரியர் - யா/புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி), ஜெகநாதன் (யாழ்.பல்கலைக்கழகம்- வெளிவாரி மாணவன்), துஷ்யந்தி (ஆசிரிய மாணவி - யாழ்ப்பாணம், தேசிய கல்வியற்கல்லூரி), தாட்சாயனி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி தி.மாணிக்கம்மா, திருமதி தி.புவனேஸ்வரி, திருமதி சோ.சிவகாமியம்மா, அமரர் திருமதி மா.வேதநாயகியம்மா, திருமதி க.விசாலாட்சியம்மா, திருமதி க.சரஸ்வதியம்மா, வி.செ.சுவாமிநாதன் (செயலாளர் - புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு - வ.கி.மாகாணம்), செ.சிவப்பிரகாசம் (யாழ்ப்பாணம் - மாநகர சபை, வேலைப் பகுதி, பொறியியலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஸ்ரீலஸ்ரீ க.திருஞானசம்பந்தக் குருக்கள், காலஞ்சென்ற க.தியாகராசா (சோதிடர்), க.மாணிக்கவாசகர், ஐ. கந்தையாபிள்ளை, ஸ்ரீலஸ்ரீ வே.கனகசபைக் குருக்கள் (வெல்லன் விநாயகர் ஆலயகுரு), காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ க.சோமசுந்தரபண்டார சந்நிதி (பரம்பரை அறங்காவலர், ஆதிவார மட தர்மம் வேதாரணியம் -தென்னிந்தியா) ஆகியோரின் மைத்துனரும் திருமதி சொ.குமுதினியின்(பட்டதாரி பயிலுநர் - பிரதேச சபை, கரவெட்டி) அன்பு மாமனாரும் கோவர்த்தனியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (18.08.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, கரணவாய் கிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குருக்கள் பகுதி,*
*கரணவாய் கிழக்கு,*
*கரவெட்டி.* (சி-4 [illegible] 16)

தகவல்:
**- குடும்பத்தினர்**

# புரிந்துணர்வு உடன்படிக்கையை மீளாய்வு செய்ய அரசு - புலிகள் இடையே நேரடிப் பேச்சு தேவை

## நோர்வேப் பிரதமருக்கு ஜனாதிபதி கடிதம்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்வது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுக்கு ஏற்பாடு செய்யுமாறு நோர்வே பிரதமர் கெல் மெக்னே பொண்டவிக்கிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நோர்வேப் பிரதமருக்குக் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலைக்கு முன்னரே, இலங்கை இராணுவத்தின் மூத்த அதிகாரிகளிடையேயும் விடுதலைப் புலிகளின் போராளிகளிடையேயும் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கண்காணிப்புக் குழுவினரிடம் கேட்டிருந்தார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முரணாக அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் அரசியல் கொலைகளுக்கு முடிவுகாணவே இந்தச் சந்திப்பை ஒழுங்கு செய்யுமாறு ஜனாதிபதி கோரியிருந்தார்.

அமரர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையைத் தொடர்ந்து, யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்யும் வகையிலான சந்திப்பு ஒன்றை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் அவசரமாக ஏற்பாடு செய்யுமாறு நோர்வேப் பிரதமரிடம் ஜனாதிபதி உத்தியோகபூர்வமாகக் கோரியிருந்தார். இன்னும் கொலைகள் இடம்பெறுவதையும் வேறு வன்செயல்கள் நிகழ்வதைத் தடுப்பதையும் நோக்காகக் கொண்டே இச்சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பு அனுசரணையாளரான கண்காணிப்புக் குழுவின் முன்னிலையிலேயே இடம்பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் கதிர்காமரின் படுகொலையை சர்வதேச சமூகம் கண்டித்துள்ளது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைத் தலைவருக்கு ஜனாதிபதி எழுதியுள்ள கடிதத்தில், கிளிநொச்சியிலுள்ள ஐ.நா. அலுவலகங்கள் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட வன்செயலைக் கண்டித்துள்ளார்.

அத்துடன் இச்சம்பவம் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்று 50 ஆண்டுகளான நிலையில் ஐ.நாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள உறவுக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ)

---

## பெண் படையணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் ஒன்றுகூடல் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடம் ஒன்றில் நேற்று நடைபெற்றது.

கடற்புலிகள் மகளிர் படையணி, 2ஆம் லெப். மாலதி படையணி, மேஜர் சோதியா படையணி, லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் மகளிர் படையணி, லெப். கேணல் பொன்னம்மான் கண்ணிவெடிப் படையணி என்பனவற்றின் தளபதிகளும் அதிகாரிகளும் போர்ப் பயிற்சி ஆசிரியர்களும் தொடக்கப்பயிற்சி ஆசிரியர்களும் ஏனைய மகளிர் பிரிவுப் பொறுப்பாளர்களும் போராளிகளும் மூத்தபெண் போராளிகளும் ஒன்றுகூடலில் கலந்துகொண்டனர்.

மூத்த பெண் போராளிகள், தமது பழைய போர்க்கள அனுபவங்களை ஏனையவர்களுடன் பகிர்ந்துகொண்டனர். காலை 9.30 மணிக்கு மூத்த போராளி தேவா தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். மாலை 4.30மணி வரை நிகழ்வுகள் தொடர்ந்தன. (ஐ-12)

---

## இனியும் பொறுமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் விசேடமாகக் கூடியது. ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்காக கூட்டப்பட்ட இந்த விசேட அமர்வில், அரசதரப்பின் சார்பாக விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க. அப்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தனதுரையில் மேலும் கூறியதாவது:-

2002ஆம் ஆண்டு புலிகளுடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் புலிகளால் 3006 முறை ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது. அதில் 493 சம்பவங்கள் மிகவும் கடுமையானவை எனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. அதேவேளை, அரசுத் தரப்பில் 132 மீறல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள் செய்துவந்த குரூர கொலைகளின் வரிசையில் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை அரசின் முக்கிய அமைச்சரான லக்ஷ்மன் கதிர்காமர் கொலைசெய்யப்பட்டார். இது மிகவும் மோசமானதும் குரூரமானதுமான ஒரு செயல். இனியும் அரசால் பொறுமை காக்க முடியாது. புலிகள் செய்யும் கொலைகளை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவும் முடியாது. கடந்தகாலங்களில் அவர்கள் சிறுவர்களைப் பலாத்காரமாக கடத்திச்சென்று படைகளில் சேர்த்துக்கொள்வது, மாற்றுக் கருத்துள்ளவர்களைக் கொலைசெய்வது, சொத்துகளுக்குச் சேதம் விளைவிப்பது என பல்வேறு சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இது போன்ற செயல்கள் தொடர்ந்தும் இடம்பெற அனுமதிக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்தனவைக் கொலைசெய்த புலி உறுப்பினரை கைதுசெய்திருக்கின்றோம். கதிர்காமர் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்படும் நபர்களிடம் இருந்து 24 மணித்தியாலத்தில் விசாரணை செய்து உண்மையை அறியமுடியாது. அவசர காலச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவ்ரப் படும் பட்சத்தில் சந்தேகநபர்களை மேலும் தடுத்துவைத்து விசாரிக்க முடியும்.

கடந்த காலங்களில் 1,624 சிறுவர்கள் கடத்தப்பட்டிருக்கிறார்கள். இது சர்வதேச குற்றமாகும். எனவே, புலிகளுக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. தொடர்ச்சியாக இராணுவ உளவுப் பிரிவினரும், பொலீஸாரும், பொதுமக்களும் கொலைசெய்யப்பட்டு வருகின்றனர். இதைத் தொடர்ந்தும் அனுமதிப்பதா? இல்லையா? என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது.

ஜனநாயக ரீதியில் செயற்படும் எந்த நபருக்கும் அச்சுறுத்தல் ஏற்படுவதை எம்மால் அனுமதிக்க முடியாது. அதற்கு முடிவுகாணப் படல்வேண்டும். பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க பேச்சு மேசைக்கு புலிகள் வரவேண்டும். பேசி முடிவு காண முடியாவிட்டால் பின்னர் என்ன செய்வது என்று தீர்மானித்துக் கொள்ளலாம். நாம் எதையும் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ளவே விரும்புகிறோம். தொடர்ந்தும் எமது பொறுமையைச் சோதிக்க முயலவேண்டாம் என்பதை இந்தச் சபையில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இறைமையுள்ள ஒரு நாட்டில் சட்டத்தை யாரும் கையிலெடுக்க ஒரு போதும் நாம் அனுமதிக்கமாட்டோம்- என்றார் அவர். (ஐ-க-12-190)

---

## யாழ்ப்பாணத்திலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புக் குழுத் தலைவரிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நிலைமை மிகவும் மோசமடைந்து கொண்டிருக்கிறது. எமது போராளி ஒருவர் பலாத்காரமாகக் கைதுசெய்யப்பட்டுள்ளார்; அல்லது கடத்தப்பட்டுள்ளார். அவர் யுத்தநிறுத்த உடன்பாட்டின் விதிமுறைக்கு அமைய தனது வீட்டுக்கு விடுப்பில் சென்றார். உடல்நிலை பாதிக்கப்பட்ட போராளி அவர். ஒரு கையை முழுமையாக இழந்தவர். வயிற்றுப் பகுதி, கால்பகுதிகளில் காயமடைந்தவர். மிகவும் பாதிப்புக்குள்ளான நிலையிலுள்ள ஒரு போராளி கடத்தப்பட்டமை பாரிய யுத்தநிறுத்த மீறல் என்பதைக் கண்காணிப்புக் குழுவுக்கு சுட்டிக்காட்டினோம். உடனடியாக இதற்குத் தீர்வு காணவேண்டும். இல்லாவிட்டால் எங்கள் தரப்பில் இதுசம்பந்தமாக சில முடிவுகளை நாம் எடுக்கவேண்டிய நிலை ஏற்படும் எனச் சுட்டிக்காட்டினோம். ஆகவே, இந்த விடயத்துக்குக் கண்காணிப்புக்குழு உடனடியாகத் தீர்வுகாணவேண்டும் என்று வலியுறுத்தினோம்.

- என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி யாழ்ப்பாண நிலைவரம் குறித்து கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு விளக்கினார். (ஐ-3)

---

## வெளிவிவகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதவிக்குத் தகுதியானவர் என்று ஜனாதிபதி கருதினார். எனவே, அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்குமாறு அவரிடம் கேட்டுக்கொண்டார்.

வெளிநாட்டு அமைச்சுப் பதவியை பொறுப்பேற்பதில் ஜயந்த தனபாலவிற்கு ஆர்வம் இருந்தபோதும் அவரது குடும்பத்தவர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்தனர் என்று கூறப்பட்டது. இதனையடுத்து தம்மால் இந்தப் பொறுப்பை ஏற்க முடியாத சூழ்நிலை இருப்பதாக ஜயந்த தனபால ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கிணங்க இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் உட்பட பல முக்கியஸ்தர்கள் ஜயந்த தனபாலவிடம் கேட்டபோதும் அந்த முயற்சிகள் பயனளிக்கவில்லையென தெரியவருகிறது.

இந்தப் பின்னணியிலேயே வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவிற்கு வழங்க ஜனாதிபதி உத்தேசித்திருக்கிறார் என மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-க)

---

## புங்குடுதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சூட்டுக்காயங்களுடன் நேற்றுக்காலை ஹோமகம ஹக தொட்டுவ பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞன் யாழ்ப்பாணம் புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சதீஸ்குமார் என்று பொலீஸார் தெரிவித்திருக்கின்றனர்.

சடலம் அடையாளம் காண்பதற்காக களுபோவில ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

---

## ஜே.வி.பி., ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரகாலச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவரும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசனும் எதிர்த்து வாக்களித்தார். முஸ்லிம் காங்கிரஸ் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

அவசரகாலச் சட்டத்தை ஒருமாத காலத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்குகள் அமைச்சருமான ரட்ணசிறி விக்ரமநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இப்பிரேரணை மீதான விவாதம் காலை 9.30 மணிமுதல் மாலை 3.30 மணிவரை மதியபோசன இடைவேளையின்றி தொடர்ந்து நடைபெற்றது. விவாதத்தின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டன. அதேவேளை, ஜே.வி.பியினரும் அரச தரப்பினரும் இணைந்து ஐ.தே.க.மீது தாக்குதல்களை மேற்கொண்டனர். தொடர்ச்சியாக ஆறு மணிநேரம் சூடாக நடைபெற்ற விவாதத்தின் பின், சபை முதல்வரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா அரசின் சார்பில் பதிலளித்தார்.

''முன்னாள் அமைச்சர் கதிர்காமரின் கொலை காரணமாக மட்டும் தான் அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என்று கூறுவது தவறு. நாட்டில், அதாவது குற்றச்செயல்கள், கொலைகள், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகத் தேசியப் பாதுகாப்புச் சபையினருடன் கலந்தாலோசனைகளை நடத்திய பின்னரே ஜனாதிபதி அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்.

''இதில் எந்த உள்நோக்கமும் இல்லை. அரசியல் இலாபம் தேடுவதற்காக அவசரகாலச் சட்டத்தை அரசு முன்வைக்கவுமில்லை.

''மர்மம் துலக்கப்படாத பல குற்றச்செயல்களினதும், கொலைகளினதும் சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து நீதியின்முன் நிறுத்துவதே அரசின் நோக்கம். நாட்டில் அமைதியும் பொதுமக்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும். அவசரகாலச் சட்டத்தால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கைக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது. எனவே, தேசிய நலன்கருதி அனைவரும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு ஆதரவளிக்க வேண்டும்.''- என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாகேட்டுக்கொண்டார். (ஐ-க-12-190)

43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170,
0777846811
Dip. in AutoCAD
Dip. in Internet E-Mail
தொழில்நுட்பக் கல்லூரி,
பல்கலைக்கழக
மாணவர்களுக்கான
பயிற்சி நெறிகள்
ஆரம்பம்
20,24.08.2005

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா இராசரத்தினம்

*(முன்னாள் இ.போ.ச. சாலைப் பரிசோதகர்)*



இலக்கம் 21, மூத்தவிநாயகர் வீதி, 1 ஆம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னையா இராசரத்தினம் அவர்கள் நேற்று (18.08.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் தேவமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை- பாக்கியம் தம்பதியரின் மருமகனும் றஜிதா,றஜீகரன் (லண்டன்), றஜீந்திரன் (பாபு - கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தராஜா (உரிமையாளர் - வசந்தன் பல்பொருள் வாணிபம்), சுபாஜினி (லண்டன்), மங்களேஸ்வரி, மணிவண்ணன் (டுபாய்) ஆகியோரின் மாமனாரும் கஜானன், டிலாந்தினி, சஜீஷ் (லண்டன்), டினோஜன் ஆகியோரின் பேரனும் ருக்குமணிதேவி, இராஜலட்சுமி, பிச்சேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இறுதிக்கிரியைகள் நடைபெறும் தினம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 21, மூத்தவிநாயகர் வீதி,*
*1 ஆம் ஒழுங்கை,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

தகவல்:
**றஜீந்திரன்**
**(மகன்- பாபு- கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்).**

(39080) (38-13-16)

### கதிரவேலு - சிறீஸ்கந்தராஜா

நாகர்கோவிலைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிறீஸ்கந்தராஜா அவர்கள் நேற்று (18.08.2005) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2005) வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,*
*தெனிப்பிள்ளையார் கோயிலடி,*
*பருத்தித்துறை.*

தகவல்:
**குடும்பத்தினர்**
**(றூபன்).**

(சி-44564) (38-13-16)



EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.